994

M. 1803. Vol. I—No 9.

லக்ஷ்மி

சொந்தக்காரர்கள்:

கே. எஸ். முத்தையா & கோ., சென்னை.

SARMA BROS MADRAS

சுகிர்தாஞ்சனம்

சரீரத்தில் உண்டாகும்
கீழ்க்குறித்த வியாதிகளை வெகு
சீக்கிரத்தில் ஆச்சரியமாய்
முற்றிலும் குணமடையச்
செய்யும்.

தலைவலி
வாதரோகம்
கீல்வாய்வு
களுக்கு
காயப்புண்
இடுப்புவலி
சுவாசகாசம்
ஒற்றைதலை
நோய்

தமனீய
காசம்
பல்வலி
வீக்கம்
இருமல்
விஷகடி
வெட்டுக்
காயம்
முதலியன.

விலை அணா 7

விற்குமிடங்கள் :—பம்பாய், கல்கத்தா, சென்னை.

எஜன்ஸி விஷயங்கட்கும், மொத்த விலைகட்கும் எழுத வேண்டிய விலாசம் :—

சுகிர்தாஞ்சனம் டிபோ,

3-187, மவுண்டு ரோட்,

சென்னை.

ஓம்

லக்ஷ்மி

ஓர் உயர்தர மாதப் பத்திரிகை

சித்திரப் படங்களுடன் கூடியது.

பத்திராதிபர் : கே. எஸ். முத்தையா.

மலர் க. | ரக்தாட்சிஸூ சித்திரைமீ 1924 ஏப்ரல் | இதழ் கூ

28 MAY 1924

அட்டவணை.

		பக்கம்.
1.	லக்ஷ்மி துதி	413
2.	கழல் ஆடல்	414
3.	தமிழகத்தாருக்கு I	417
4.	நமது அந்தரங்கப் பகைவர்களும் சுகத்துக்குச் சண்டையும்	427
5.	இயற்கையில் இறைவன்	431
6.	வாழ்த்துக் கவி	435
7.	வெள்ளெழுத்து	436
8.	ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகள் சரித்திரச் சுருக்கம்	439
9.	தீண்டாமையைப் போக்கும் வழி ...	443
10.	மனோன்மணீய வசனம்	446
11.	கரும்பு சாகுபடி	447
12.	ராஜ ராஜேச்வரி	449
13.	முரசொலி	451
14.	இஸ்லாமாவ தென்ன	456
15.	மோட்டார் செய்யும் கோடீச்வரர் ...	457
16.	விசேஷக் குறிப்புகள்	459
17.	மதிப்புரை	464

சித்திரப் படங்கள்.

நமது புதிய கவர்னர்.

நமது புதிய கவர்னர் மனைவியார்.

தமிழ்நாடு அரசு ...
210337
சென்னை 600 008

லக்ஷ்மி

சந்தா விவரம்.

உள் நாட்டுக்கு வருடம் 1க்கு தபாற்கூலி உள்பட	இந்தியா, பர்மா, சிலோன் ...	ரூ. 2.
வெளி நாட்டுக்கு வருடம் 1க்கு தபாற்கூலி உள்பட	சிங்கப்பூர், பினங்கு, மோரீஸ் முதலிய வெளி நாடுகளுக்கு	ரூ. 2-8.
உயர்ந்த பதிப்பு (Art Paper)		ரூ. 10

தனிப்பிரதி 4 அணா.

விளம்பரம்

பக்கம் 1-க்கு மாதம் ஒரு முறைக்கு ரூ. 20. நீடித்து விளம்பரம் செய்வோர் நேரே எழுதிக்கொள்ளவும்.

சந்தாதாரர்கள் ஒவ்வொரு கடிதத்திலும் சந்தா நம்பரைக் குறித்து எழுதவேண்டும்.

பிரதி இங்கிலீஷ் மாதம் மூன்றாவது வார முடிவில் நமது சஞ்சிகை வெளிவரும்.

மானேஜர்.

இலங்கை நேயர்களுக்கு!

நமது 'லக்ஷ்மி'க்கு சந்தாதார்களைச் சேர்க்கும் பொருட்டு நமது ஏஜன்று ஸ்ரீமாந் **A. M. G.** நாயுடுவை இலங்கைக்கு அனுப்பி யிருப்பதால், நமது சந்தாநேயர்கள் அவருக்கு வேண்டிய உதவி செய்வதோடு புதியசந்தாதாரர்களை சேர்த்து கொடுக்கவும் வேண்டுகிறோம். அவர் தற்சமயம் கொழும்பில் இருக்கிறார். யாழ்ப்பாணப் பகுதிகளுக்கு 2 வாரத்தில் போவார்.

ஒரு விண்ணப்பம்.

நமது விளம்பரக்காரர்களுக்கு எழுதும்போது நமது சந்தா நேயர்கள் தயவுசெய்து 'லக்ஷ்மி'யின் பெயரைக் குறிப்பிட்டு எழுதவும்.

மானேஜர், "லக்ஷ்மி."

ஓம்

லக்ஷ்மி துதி

உள்ளக் கமலத்தில் வந்துவந்
தாடும் உன தருளிவ்
வெள்ளக் கமலப் புவியோர்முன்
சற்று விளங்கல் என்றோ ?
கள்ளக் கமலனைப் பெற்றான்
எந்நாளும் கலந் துவகை
கொள்ளக் கமல மலர்மேல்
குலாவிய கோல்வளையே !

3L
N28LA
MR4.1.9

கழல் ஆடல்

துணையறும் மகளிர்மேல் சுடுகணை தூர்ப்பவன்
அணைகிலன் அரன்முன்னென் றூடாய் கழல்
அணைந்து நீறானானென் றூடாய் கழல். (1)

நீறாயி னாலென்னை நேர்மலர் பட்டபுண்
ஆறா வடுவேயென் றூடாய் கழல்
அழலாடும் தேவர்க்கென் றூடாய் கழல். (2)

இருளில் தனித்துறை ஏழையர் தங்கள் மேல்
பொருதலோ வீரமென் றூடாய் கழல்
போயெரிந் தான்பண்டென் றூடாய் கழல். (3)

எரிந்தனன் ஆயிலென் என்றென்றும் தம்முடல்
கரிந்தது பாதியென் றூடாய் கழல்
கடுவுண்ட கண்டர்க்கென் றூடாய் கழல். (4)

தெருவில் பலிகொண்டு திரிதரும் அம்பலத்
தொருவர்க் குடைந்தானென் றூடாய் கழல்
உருவம் கரந்தான்என் றூடாய் கழல். (5)

உருவம் கரந்தாலென் ஓர்மலர் அம்பினால்
அரையுரு வானாரென் றூடாய் கழல்
அந்நட ராஜரென் றூடாய் கழல். (6)

(மனோன் மணீயம்.)

நமது புதிய கவர்னர்.

தமிழகத்தாருக்கு

ஸ்ரீமாந் பண்டித எஸ். முத்துசுவாமிப் பிள்ளை எழுதியது.

I

ஒரு ஐரோப்பியப் பத்திரிகாசிரியர் தமிழர்களைப் பற்றி எழுதிய ஒரு சந்தர்ப்பத்தில் தமிழர்களை (Contemplative Tamils) சிந்தனை சக்தியுடைய தமிழர்கள் என்று விதந்துரைத்தார். தியான சக்தி அல்லது சிந்தனை சக்தி ஒரு சிறந்த குணமே. திருவள்ளுவர், திருமூலர், அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர், தாயுமானவர், இராமலிங்கசுவாமி முதலியோரை யளித்த தமிழர் குலத்துக்கு, மேற்பரப்பாக நோக்கின், அவ்வடை மொழி மிகவும் பொருத்த முடையதே. ஆனால் ஒரு சமூகத்துள் சிந்தனை சக்திக்குத் தகுதியுடையவர்கள் மிகச் சிலரே இருத்தல் கூடும். அங்ஙன மிருத்தலே சிறப்பு மாகும். மாறாக ஒரு ஜன ஸமூகம் முழுதமே சிந்தனை சக்தியுடைய தாகுமாயின் அந்நிலைமை அந்த சமூகத்துக்கு நாச காரணமே யாம். சிந்தனை சக்தியின் வெளியிலக்கணம் அமைதி அல்லது சோம்பி யிருத்தலாம். திருமூலர் அமைதிக்கும் சாமானியன் அமைதிக்கும் பெருத்த வேற்றுமை யுண்டன்றோ? விவேக விளக்கம் பெற்றவர் வெளிப் பார்வைக்குச் சோப்பேறிகள் போல் தோற்றினும், அவருடைய மூளை மிகவும் பயனுடைய வேலை செய்துகொண்டே யிருக்கும். விவேக விளக்கம் பெறாத அல்லது அகக்கண் குருடான சாத்தனும் சடையனும் சோம்பி யிருப்பதைத் தியான சக்தியின் பயனெனக் கூறல் தகுமோ? ஆகவே தமிழகத்தார் எல்லாம் சிந்தனை சக்தியுடையவர்கள் என்று கூறுதல் ஒருபொழுதும் தமிழர்களுக்குச் சிறப்பாகாது. ஆனால், ஐரோப்பியப் பத்திரிகாசிரியர் கூறியதும் முற்றிலும் உண்மையே. தற்காலத்தியத் தமிழர்கள் எல்லாம் சிந்தனை சக்தி யுடையவர்களே. ஆனால் மேலே கூறிய திருமூலர் ஆதிய அறிஞரது சிந்தனை சக்திக்கும் தற்காலத் தமிழர்களின் சிந்தனை சக்திக்கும் ஒரு சிறு வேற்றுமைதா னுண்டு. அஃது பூனைக்கும் ஞானிக்குமுள்ள வேற்றுமையே. ஞானியும் யோக சமாதியிலமர்ந்து கண்களை மூடிக் கொள்கிறான். பூனையும் இரு கண்களையும் மூடிக் கொண்டு சோம்பி யிருக்கிறது. இதில் வேற்றுமை வெளிப்படையன்றோ ?

தற்காலத்தியத் தமிழர்களின் சிந்தனை சக்தி பூனையின் யோகத்துக்கே ஒப்பாகும். வளைத்து வளைத்துக் கூறுவதைவிட்டுக் காரியத்

தில் பிரவேசிக்கிறேன். சுருங்கக் கூறின் தற்காலத்திலே இந்தியாவிலே தமிழர்களைப் போன்ற பழுத்த சோம்பேறிகள் வேறில்லவே யில்லை.

கண்ணை மூடிக்கொண்டிருந்த பூனையை யோக சமாதியிலிருப்பதாக நினைத்ததுபோல, விவேக விளக்கமற்று, அகக்கண் குருடாகி, முயற்சியற்று, வீரமற்றுச் சும்மா விருக்கும் தமிழர்களுக்கு மேலே கூறிய ஐரோப்பியப் பத்திரிகாசிரியர் Contemplative Tamils என்னும் கௌரவமான அடைமொழியைக் கொடுத்துவிட்டார். ஒரு தமிழனான நானே தமிழகத்தாரை யெல்லாம் ஒரே அடியாகச் சோம்பேறிகளெனக் கூறுவது அநேகருக்குப் பெரிய வீணத்தனமெனத் தோன்றலாம். அத்தகைய எண்ணமுடையோர் கீழ் வருவனவற்றைக் கவனிப்பார்களாக! நமது லக்ஷ்மியின் நான்காவது இதழில் 'தமிழர் வாழ்வு' என்னும் பெயரிய ஒரு வியாசம் வெளிவந்ததை வாசகர்கள் பார்த்திருக்கலாம்.

"ஞானத்திலே, யோகத்திலே, பக்தியிலே, அன்பிலே, அருளிலே, செல்வத்திலே, கல்வியிலே, தலைமையிலே, புலமையிலே, பூலோகத்தில் சிறந்த நாட்டை நோக்கவேண்டுமென்றால், முன், வடக்கே இமய முதல், குமரிக்குத் தெற்கே பல் காத தூரம்வரைப் பரந்து நிலவி, இன்று வடவேங்கடம் தென் குமரி ஆயிடைச் சுருங்கி விளங்கும் தெய்வத் தமிழ்நாட்டையே குறிப்பிட வேண்டும்."

என்று கூறிய அவ்வியாச ஆசிரியர், அதே மூச்சிலே

"ஆயினும் தமிழ் நாட்டின் தற்கால நிலைமை என்ன? தமிழ் நாடு அடிமைச் சேற்றிலே, அறியாமைக் குழியிலே, வறுமைப் புதரிலே, சிறுமைத் தேரியிலே வீழ்ந்து கிடக்கிறது. பழமை அறிந்து தங்கள் பெருமை உணர்ந்த பெருந் தமிழர்களைக் காணேம். மக்களாய்ப் பிறந்த பெருமையை அறிந்து பெருஞ் செயல்களை நாடும் பெருந் தமிழர்கள் இல்லை.........தமிழனிடம் பெரும் நினைவில்லை, பெருஞ் செயல் இல்லை......தமிழ் நாட்டில் சமயச் சண்டை மிகுதி. ஜாதிச்சண்டை அநந்தம்.........கோயில்கள் சந்தைகோயில்களாய் மட்டும் விளங்குகின்றன. அவற்றின் உண்மைகளையும் அழகையும் பெருமையையும் கண்டு களிப்பதற்குரிய கண்ணும் கருத்தும் தற்காலத் தமிழனுக்கு இல்லை.........நாடாண்ட மறவன் இன்று கோழிச்சண்டையிலும் குருவிப் போரிலும், கீரைக் களவிலும் நாட்கழிக்கின்றன். அவன் வாள் வலியும் வேல் வலியும் போய்விட்டன—...நவகோடி நாராயணன் செட்டியார்கள் இருந்த இந்த நாட்டில் கீரைக்கடைக்கு எதிர்க்கடை போடும் வைசியர்கள் மிகுதி...."

என்று கூறி மனம் வாடுகின்ருர்.

தமிழகத்தாருக்கு

நவசக்தி பத்திராசிரியர் ஸ்ரீமான் திரு. வி. கலியாண சுந்தர முதலியாரவர்களும் "தற்போது தமிழ்த் தரைமட்டு முள்ளது. தமிழ் மக்க ளிருக்கின்றனர்; ஆனால் தமிழ்நாடு இல்லை."

எனக் கவலைப்படுகின்றார்கள்.

வாசகர்களே! தற்காலத் தமிழர்கள் பழுத்த சோம்பேறிகளே என்பதற்கு இன்னும் ஆதாரங்கள் வேண்டுமோ?

மேனாட்டுக் கல்விமுறை தமிழ்நாட்டில் பரவத்தொடங்கி ஒரு நூற்றாண்டுக்கு மேலாய் விட்டது.

எனினும் ஒரு தாகூரையாவது, ஒரு ரே யையாவது, ஒரு போசை யாவது தமிழ்நாடு அளிக்க வில்லையே! புரோபஸர் ரெங்கநாதமுதலியார், புரோபஸர் பெ. சுந்தரம்பிள்ளை, சேலம் ராமசுவாமி முதலியார் முதலிய அறிஞர் தோன்றியிருந்தனர் என நான் அறிவேன். எனினும் மேலே கூறிய மூவரையும் போல் உலகெலாம் போற்றும் உயர்ச்சி பெற்றோர் நமது தமிழகத்துத் தோன்ற வில்லையே.

தமிழ்நாடு மூளை வளங்குன்றி, முயற்சி யற்று, புகழிழந்து, வலி குன்றி நிற்க நேர்ந்த காரணங்கள் யாவை?

என் சிற்றறிவுக் கெட்டியமட்டும் அவைகளை ஆராய்வதே இவ்வியாசத்தின் நோக்கம். என் ஆராய்ச்சி பல பகுதிகள் கொண்டது. ஒவ்வொரு இதழிலும் ஒவ்வொரு பகுதியை வெளியிடக் கருதியுள்ளேன்.

பிள்ளை வளர்த்தல்.

ஒரு சமூக வாழ்வுக்கு, பிள்ளை வளர்த்தலைப் போல் முக்கியமான விஷயம் இல்லவே இல்லை. இவ் விஷயத்தில் தமிழர்களைப் போல் பராமுகரா யிருப்போரும் வே றொருவரு மில்லை. இன்று சிறுவர்களா யிருப்பவர்களே பிற்காலத்து, தேசத்துக்கு வலி யளிக்கும் பௌரர் ஆகின்றார்கள். ஆகவே தேச க்ஷேமத்தை நாடுவோர் பிள்ளை வளர்ப்பு விஷயத்தில் எத்துணைக் கருத்துடையோர்களாயிருக்கக் கடமைப்பட்டுள்ளார்கள் என்பது வெளிப்படை.

ஒரு ஆங்கிலப் புலவர் இளைஞரைக் களிமண்ணுக்கு ஒப்பிடுகின்றார். களிமண்ணைக் குயவன் விரும்புகிறபடி உருப்படுத்தலாம். அழகிய பாவை யமைக்க விரும்பின் களிமண் அதற்கும் இடங்கொடுக்கும். விரூபமான உருவங்கள் அமைக்க விரும்பினும் களிமண் அதற்கும் உதவும். களிமண் பெறும் உருவம் குயவன் மனப்போக்கைப் பொறுத்தது. இளைஞர் நிலையும் அத்தகையதே.

பிறவியிலேயே சில பிள்ளைகளுக்குச் சில குணங்கள் அமைந்து காண்பது பிரத்தியட்சமாயினும் வளர்ப்பு முறையால் எத்தகைய தீய குணமுடைய குழந்தைகளையும் நல்வழிப் படுத்தலாம். பிள்ளை

களின் பிற்கால நிலை அநேகமாகச் சுற்றுச்சார்பையும் பராமரிப்பையும் பொறுத்ததே. உயர்குடிப் பிறந்த சிறுவர் சிறுமிகளைக் கீழ்குடிப் பிறந்தவர் வளர்க்க நேருமாயின் அச்சிறுவர் சிறுமியர் கீழ்குடிக் கடுத்த குணங்களையே தடையின்றிப் பெறுவர். மாறாக, கீழ்குடிப் பிறந்த குழந்தைகள் மேன்மக்களால் வளர்க்கப்படுவாராயின் மேற் குடிக் குணங்கள் பெறுதலும் நிச்சயமே. சேர்க்கை வாஸனை பெரிதும் வலியுடையது.

நம்மவர்களோ "மரத்தை வைத்தவன் நீர் வார்ப்பான்" என்ற முதுமொழியை, பிள்ளை வளர்ப்பு விஷயத்தில் பின்பற்றி வருகிறார் கள். கீரைப் பயிர் செய்யவேண்டுமென்றாலும் எவ்வளவோ சிரமம் அவசியம். பருவத்தே பாத்தி வெட்டி, வேண்டிய மட்டும் உரம் போட்டு, விதைத்த விதையை எறும்பு முதலியன கொண்டு பாகாது பாதுகாத்துக் காலாகாலத்தில் நீர் வார்த்துக் களைபிடுங்கிக் கண்ணும் கருத்துமா யிருந்தால் மட்டிலுமே சிலநாட் பயிராகிய கீரையும் நற்பலன் தரும். ஆகவே பலநாட் பயிராகிய சிறுவர் விஷயத்தில் நாம் உபேட்சையா யிருந்தால் விளையும் பயன் என்னும்?

தமிழ்நாட்டுத் தாய்மாரில் பெரும் பான்மையோரும் கல்வி யறிவில்லாதவர்களே. குடும்ப வாழ்க்கையைச் செவ்வனே நடத்துவ தற்கு அநுபவ முறையில் அறிவு தேடிக்கொண்ட தாய்மார் சிலர் ஆங்காங்கே இருத்தல் கூடும். அவர்கள் தொகை மிகச் சொற்பமே. நூற்றுக்கு ஐந்து பேராவது இருப்பரோ என்பதும் சந்தேகமே. கல்வி யறிவோ அநுபவ ஞானமோ இல்லாத தாய்மாரால் வளர்க்கப் படும் பிள்ளைகள் எவ்வாறு வளர்வர் என்று கூறவும் வேண்டுமோ?

தமிழ்நாட்டுத் தந்தையர் வயிற்றை நிரப்ப வகை தேடுவதும் பணஞ் சேர்ப்பதுமே புருஷர் கடன் எனக் கருதி வாழ்கின்றனர். ஆசிரியர் தொழிலில் எனக்குப் பதினெட்டு வருஷ அநுபவம் உண்டு. இந் நீண்ட காலத்துள் அநேக குடும்பங்களின் ஸ்திதியை நான் வெகு நுட்பமாகக் கவனித்திருக்கிறேன். தமிழகத்தாரின் பிள்ளை வளர்ப்பு முறையை விளக்குதற் பொருட்டுச் சில திருஷ்டாந்தங்களை மட்டும் கூறுகிறேன்.

ஒருவருக்குக் குடும்பச் சொத்தாக 25,000 ரூபாவுக்குமேல் ஆஸ்தியுண்டு. 50 ரூபா மாதந்தோறும் சர்க்கார் சம்பளமு முண்டு. அவருக்கு புத்திரர்கள் மூன்று. பெண்கள் இல்லை. அவர் வீட்டில் அவரும் அவர் மனைவியும் மூன்று புத்திரர்களும் தவிர வேறு யாரும் கிடையாது.

15 வயதுடைய மூத்த பையன் காலப் போக்குக் கேற்றவாறு ஆங்கிலக் கல்விச்சாலைக்குப் போய்க் கொண்டிருந்தான். 10 வயதுள்ள இரண்டாவது மகன் தமிழ்ப் பள்ளிக்கூடத்துக்குப் போய்க் கொண்டிருந்தான். 5 வயதுடைய மூன்றாவது மகன்

பள்ளிக்குப் போகவில்லை. தந்தையார் காலை 5 மணிக்குப் படுக்கை விட்டெழுவர். காலைக் கடன்களை முடித்த பிறகு பால் கறக்கத் தொழுவத்துக்குச் செல்வர். பால் கறப்பு, தொழுவம் சுத்தி செய்தல், பசுவுக்குத் தீனிகொடுத்தல் முதலிய வேலைகள் 7 மணியோடு முடியும். பின் ஸ்நானம் பூஜை முதலியன முடித்துக் காப்பி சாப்பிட்டுக் கணக் கெழுதத் தொடங்குவர். அதற்குள் லேவா தேவி வாடிக்கைக் காரரும் சிலர் வருவர். அவர்களோடு வம்பு வார்த்தையாடி வல்லடி வழக்குப் பேசி ஒயுமுன் மணியும் 10 அடித்துவிடும். உடனே ஆபீசுக்கு வேண்டிய வேலைகளிருந்தால் அவைகளைக் கவனித்து, போஜனஞ்செய்து 11 மணிக்கு ஆபீசுக்குச் செல்வர். மாலை 5 மணிக்கு வீட்டுக்கு வந்ததும் வீட்டுக்கு வேண்டிய சாமான்கள் வாங்க கடைத்தெருவுக்குச் செல்வர். கடைத் தெருவிலுள்ள ஒவ்வொரு கடையிலும் ஏறி யிறங்கி, சாமான்கள் தரம்பார்த்து, விலை கேட்டுத் திருப்தியடைந்த பின்னரே ஒரு சாமான் வாங்குவர். பிறரை நம்புவதே கிடையாது. ஆகவே அவருடைய மாலைப் பொழுதெல்லாம் சாமான் வாங்கும் வேலையிலே செலவாகும். இரவு 8-9 மணிக்கு வீட்டுக்கு வந்தால் வீட்டுக் காரிய விசாரணை தொடங்கும். கடைசியாக இராப் போஜனஞ் செய்து 10-11 மணிக்கு படுக்கை புகுவார்.

ஆங்கிலக் கல்விபயிலும் மூத்த மகன் என் மாணாக்கனுமிருந்தான். மாதத்துக் கொருமுறை ஆமணக்கெண்ணெய் சாப்பிடுவது போல் தினம் ஒரு மணிக் கூறு தமிழ் கற்க என்னிடம் வருவான். பையன் நல்லவன்; புத்தி கூர்மையு முண்டு. மேற்பார்வை யில்லாததினுல் கெட்ட பையன்களோடு சேர்ந்து ஆடிப்பாடி நடப்பான்; புஸ்தகத்தை மட்டும் தொடமாட்டான். இந்த உபேட்சை தமிழ்ப் பாடத்தில் மட்டுமல்ல. எல்லாப் பாடங்களிலும் பையன் பாடு இப்படியே. பையனுடைய தகப்பனுர் எனக்கு அறிமுக முடையவராகையால் ஒரு நாள் அவருடைய வீட்டுக்குச் சென்று மகனுடைய கல்வி விஷயத்தைப்பற்றிப் பேசினேன். நாங்கள் செய்த சம்பாஷணைகள் பின்வருமாறு :—

நான்.—"மூத்த பையன் பாடங்கள் சரியாய்ப் படிக்கிறுனில்லை. தாங்கள் கவனிக்கக் கூடாதா?

தந்தை.—என் வயிற்றுப் பாடே மூன்றுள் பாரம் இருக்கிறது. பையன் பாடங்களையும் நான் படிக்கச் சொல்லுகிறீரா?

நான்.—"அப்படி நான் சொல்லவில்லை. அவன் படிக்கிறுனு என்றுவது கவனிக்கக் கூடாதா? ஒரு வாரத்தில் ஒன்றிரண்டு நாள் அவனை அழைத்து பள்ளிக்கூட வரலாறுகளைக் கேட்டறிவதை ஒரு வழக்கமாக வைத்துக் கொண்டால் அவனுக்கும் ஒரு பய மிருக்கும். பாடங்களைச் சரியாய் கற்பதற்கு அது ஒரு தூண்டு கோலுமாகும்.

தந்தை.—தல்லிப் பழுப்பது பழமா? தானே பழுப்பது பழமா? படிக்கும் பிள்ளை எப்படியாவது படிக்கும்."

நான்.—அது பொது விதி. தானே பழுக்கா விட்டால் தல்லியாவது பழுப்பிக்கலா மல்லவா?

தந்தை.—இந்த இழவுக்கெல்லாம் எனக்கு நேரம் எங்கே யிருக்கிறது. பிள்ளைகளை மேய்க்கத் தொடங்கினால் குடித்தனக் காரியம் கெடும். செட்டும் மெட்டுமா யிருந்ததினால் பத்துக் காசு தேட வழி யாயிற்று. இந்தப் பணத்தை நான் கூடவா கொண்டு போகிறேன். இந்தப் பயல்களுக்குத்தானே தேடிவைக்கிறேன்.

நான்.—பிள்ளைகளைக் கழுதைகளாக வளர்த்துப் பணத்தைக் குவித்து வைத்ததினால் என்ன பிரயோஜனம். நீங்கள் கண் மூடினால் உங்கள் தேட்டத்தை யெல்லாம் ஒரு வருஷத்துக்குள் தொலைத்துவிட்டு வயிறு வளர்க்க வகையறியாது திண்டாடுவார்களே. அதைவிட உள்ள பணத்தைக் கொண்டு திருப்தி யடைந்து பையன்கள் படிப்பு விஷயத்தில் கவனம் செலுத்தினால் பையன்களும் யோக்கிய ராவார்கள். உள்ள முதலும் அழியாது?

தந்தை.—எல்லாம் விதிப்படி நடக்கும். அவனன்றி ஓரணுவும் அசையாது.

நான்.—அப்படியானால் பணந் தேடுவதில் வாழ்நா ளெல்லாம் ஏன் செலவு செய்கிறீர்கள். விதித்தபடி நடக்குமென்று ஏன் சும்மாயிருக்க லாகாது?

தந்தையாருக்குப் பேச்சு முட்டி விட்டது. வளைய வளைய உழறத் தொடங்கினார்.

மகனுக்கு வீட்டில் பாடம் சொல்லிவைக்க ஒரு உபாத்தியாயரை யாவது ஏற்படுத்த வேண்டுமென்று கெஞ்சிக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டேன். அவர் இணங்கின ரில்லை.

இவ்வளவும் 6, 7 வருஷங்களுக்கு முன் நிகழ்ந்த சம்பவம். அந்தத் தந்தையாரும் இப்பொழுது ஜீவித்திருக்கிறார். மக்கள் மூவரும் ஆகாவழிகளாய் விட்டார்கள். தந்தை முதலில் பாதிக்கு மேல் அழித்துவிட்டனர். நாள் தவறினாலும் தந்தைக்கும் மக்களுக்கும் சண்டைச் சச்சரவு தவறாது. மூத்தமகனும் தந்தையும் ஒரு கிரிமினல் கேசு விஷயமாய் கோர்ட்டிலுங் கூட ஏறினார்கள். அவர்களது நிலை பிற்காலத்து என்னாகுமென்று வாசகர்களே! ஊகித்துக் கொள்ளுங்கள்.

இன்னும் ஒரு தந்தையின் விருத்தாந்தம் கூறுகிறேன்.

அவருக்கு இரண்டு புத்திரர்களும் மூன்று புத்திரிகளும் உண்டு. புத்திரர்கள் தான் மூத்தவர்கள், முதல் மகனுக்கு வயது 20, இரண்டாவானுக்கு வயது 17. தந்தை வீட்டுக்குள் இருந்தால் மக்கள்

வெளியில்; தப்பித்தவறி கண்ணெதிர்ப் பட்டால் தந்தையார் சீறி விழுந்து வாயில் வந்தபடியெல்லாம் மக்களைத் திட்டுவர். கைக் கெட்டிய வீட்டுச் சாமான்களை யெல்லாம் வாரி யெறிவர்.

ஒருநாள் நான் அவரிடம் சென்று வார்த்தை யாடினேன். பிள் ளைகளிடம் கொஞ்சிக் குழைந்து பேசினால் அவர்களுக்குத் தந்தை யிடம் மதிப்பிருக்காதாம். அதட்டி வளர்த்தால் தான் அஞ்சி ஒடுங்கி அடக்கமாய் வளர்வார்களாம். இந்த சாதுவும் அவருடைய மக்களும் இப்பொழுதும் கீரியும் பாம்பும்போல் காட்சியளித்து வருகின்றனர்.

மேலே திருஷ்டாந்தப் படுத்திக் காட்டிய தந்தையர்களைப் போன்றவர் தமிழகத்துள்ள ஒவ்வொரு ஊர்களிலும் இருத்தல் கூடும். உண்மையில் தமிழகத்துத் தந்தைகளில் பெரும்பான்மை யோரும் இத்தகையர்களே.

பிள்ளை வளர்ப்பு விஷயத்தில் பிராமணர்கள் கைக்கொண் டிருக்கும் முறை மிகவும் போற்றற் பாலதே. இதற்கும் ஒரு திருஷ்டாந்தம் கூறுகின்றேன்.

திருவனந்தபுரம் மகாராஜா கலாசாலையின் பக்கத்தில், 'லா காலேஜ்' சதுக்கத்துக்குச் சற்று வடபுறத்தில் பத்துப் பதினைந்து வருஷங்களுக்கு முன் ஒரு பிராமணன் பலகார வியாபாரஞ்செய்து வாழ்ந்து வந்தார். அவருக்கு ஒரு மனைவியும் இரண்டு புத்திரர்களும் இருந்தனர். அய்யர், பரம ஏழை. எனினும் தன் மக்கள் கல்வி விஷயத்தில் அவர் உபேட்சையா யிருக்கவில்லை. புத்திரர்க ளிரு வரையும் திருவனந்தபுரம் செயின்று ஜோஸப்ஸ் ஹைஸ்கூலில் சேர்த்துப் படிப்பித்தார். பையன்களின் எளிமையை யுணர்ந்த பள்ளிக்கூட அதிகாரிகள் பையன்களிடம் பாதிப் பீஸே வசூல் செய்தனர்.

அய்யர் விடியற்காலம் 4-மணிக்கு படுக்கைவிட்டெழுந்து மக் களை எழுப்பிப் படிக்க உட்கார்த்திவிட்டு, மக்களுடைய துணிகளையும் தன் துணிகளையும் எடுத்துக்கொண்டு ஸ்நானத்துக்காகப் பத்மதீர்த் தம் தெப்பக் குளத்துக்குச் செல்வர். ஸ்நானம் பூஜை முதலியன முடித்து 6-மணிக்கு வீட்டுக்கு வருவர். வந்ததும் மக்களுடைய ஸ்நானத்துக்குக் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்துத் தயார்செய்து மக்களை ஸ்நானத்துக்கு அழைப்பர். பையன்கள் ஸ்நானஞ் செய்து முடிந்ததும், தாயார் அதற்குமுன் தயார்செய்த காலைச் சாப்பாட்டுச் சிற்றுண்டியை மக்களுக்கு ஊட்டுவர். சிற்றுண்டி யருந்தி மக்கள் படிக்க உட்கார்ந்த பின்னரே ஐயர் தன் வயிற்றை நிரப்ப எண்ணுவர். 9½-மணிக் கெல்லாம் காலைப்போஜனம் அருந்தி பையன்கள் கல்விச் சாலைக்குச் செல்வர். ஐயரும் தன் பலகார வியாபாரத்தில் புகுவார். 12-மணி ஆனதும் கடையைத் தன் மனைவியிடம் ஒப்புவித்து பையன்களுக்கு மத்தியானச் சாப்பாடு கொண்டு கல்விச்சாலைக்குப்

போவர். 4-மணிக்குப் பையன்கள் வீட்டுக்குவந்தால் அவர்களுக்குப் பசியாற்ற ஏதாவ தளித்து விளையாடவோ கடற்கரையில் உலாவவோ அனுப்புவர்.

ஸ்நானத்துக்காகப் பையன்களைக் குளத்திக்கனுப்பினல் சல்விப் பயிற்சிக்கு அனுகூலமான காலைப்பொழுது வீணுகு மென்றெண்ணியே ஐயர் தம் மக்களை வீட்டில் ஸ்நானம் செய்யச்சொல்லுவதும் பையன்களின் துணிகளைச் சுத்தம்செய்யும் வேலையைத் தானே ஒப்புக் கொள்வதும். இரவு எட்டுமணிக் கெல்லாம் பையன்கள் படிக்க உட்கார்வர். அவர் வசித்த வீடு ருே டடுத்த கடை. பையன்கள் கடையின் ஒரு ஓரத்தில் உட்கார்ந்து படித்துக்கொண்டிருப்பர். அவர்கள் படிப்பு முடியும் வரை தந்தையான ஐயரும் விழித்துக்கொண்டே இருப்பர். நான் இதைப் பலமுறை கவனித்திருக்கிறேன். ஒரு நாள் நான் “ஐயா! பகலெல்லாம் கஷ்டப்பட்டு வேலைசெய்தவர்கள் ஆச்சே. தூங்கக்கூடாதா?” என்று கேட்டேன்.

“என்ன! பிள்ளை இப்படிச் சொல்லுகிறீர்? கடை ருேடடுத்த இடம். பையன்கள் பாடத்திலேயே கவனமாக இருந்து படித்துக்கொண் டிருப்பார்கள். வழியே போகும் வீணர்கள் யாராவது வேடிக்கைக்காக ஒரு கல்லோ கட்டியோ எடுத்துப் பையன்கள் மீது எறிந்து விட்டுப்போனல் என் குடிகெடுமே. ஆகையால் தான் நான் காவலாக விழித்திருக்கிறேன்” என்று ஐயர் விடை பகர்ந்தார்.

பதினைந்து வருஷங்களுக்கு மேல் ஐயர் இவ்வாறுக உழைத்து வந்தார். தன்சுகம் என்பதை ஐயர் கவனிப்பதேயில்லை. அவரது ஜீவிதமே மக்களைப் பொறுத்ததாக இருந்தது. எந்நிமிஷத்திலும் மக்களின் வாழ்வைப்பற்றிய சிந்தனையே தவிர பிறிதொரு எண்ணமும் அவருக்குக் கிடையாது.

இத்தகைய உத்தமரின் உழைப்பு வீண்போகுமா. இளையவர் பி. எல். பரீட்சையில் தேர்ச்சியடைந்து கள்ளிக் கோட்டையில் வக்கீலாக இருக்கிருர். மூத்தமகனும் பீ. ஏ. பரீட்சையில் தேறி மைசூர் சமஸ்தானத்தில் ஏதோ உத்தியோகமா இருக்கிருர். பையன்களின் பெற்ருேர் இளைய மகனேடு கள்ளிக்கோட்டையில் இப்பொழுதும் சுகமாக வாழ்ந்து வருகின்றனர்.

நமது ஐயரைப்போல் தமிழகத்துத் தந்தைகள் எல்லாம் தன்னலம் வெறுத்து மக்கள்நலம் பேணி உயிர்வாழத் தொடங்கினல் தமிழுலகம் பொன்னுலகமாகத் திகழுமே. இத்தகைய பெருந்தகைத் தந்தையர் தமிழகத்திலே மிகுதியாக இல்லையே. எழெட்டுப் பிள்ளைகளுக்குப் பிதாவாகி, பிள்ளைகள் என்ற ஞாபகமே இல்லாது வீணில் நாட்கழிக்கும் வீணத் தந்தைகள் எத்தனையோ? பணம் பணம் எனப் பதறிவிழும் பணப்பேய்த் தந்தைகள் எத்தனை பேர்? தம்மக்களைச் செவ்வனே வளர்க்கச் சக்தியோ மனமோ இல்லாதவர்களுக்குச் சிசு உற்பாதனம் பண்ண என்ன உரிமை?

இத்தகையர்கள் தம் மனைவியர்களின் யௌவனத்தை வீணுக்கத் தோன்றிய கூற்றுவர் என்றல் மிகை யாகுமோ?

சிசு உற்பாதனம் தெய்வத் தன்மை பொருந்தியது. அதன் மேம்பாட்டை—அதன் புனிதத்தன்மையை—அதன் தெய்வீக உயர்ச்சியை—உணரச் சக்தியில்லாதார் சண்டாளர்களே யாவர். தேசத்தின் தாழ்வுக்கும், வறுமைக்கும் மற்றும் தீமைக்கும் இச்சண்டாளர்களே முதற் காரணமாம். மக்கட்பேற்றை நமது திருவள்ளுவப் பெருமான் எவ்வளவு உயர்வாகப் பாராட்டி எழுதியுள்ளனர்.

தந்தை மகற் காற்றும் நன்றியைச் செவ்வனே செய்யாதார் மக்களிடமிருந்து நன்றியை எதிர்பார்ப்பது மூடத்தனமன்றோ!

சிலர் மக்களைக்கண்டவிடத்துப் பேய்போற் கொதித்து பாம்பு போல் சீறி விழுகின்றனர். வாயில் வந்தபடி வைகின்றனர். ஆடு மாடுகளை அடிப்பதுபோல் அடிக்கின்றனர்.

ஐயோ! இவர்களைப்பற்றி யெண்ணும்போது அங்கமெல்லாம் பற்றி யெரிகின்றது. பிரபஞ்ச வித்துக்களாகிய இளைஞரை, பிரபஞ்சம் முன்னேற வேண்டுமானால் நாம் போற்றி வளர்க்கவேண்டும். நமது வாழ்வுக்கும், நமது குடும்பத்தின் வாழ்வுக்கும், நமது தாய் நாட்டின் வாழ்வுக்கும் மூலமாயிருப்பது நம் மக்களன்றோ? ஆகவே மக்களைச் சினக்கும் ஒருவன் தனக்கும் தன் குடும்பத்துக்கும் தன் தாய்நாட்டுக்கும் கேடு சூழ்பவன் ஆகின்றான். தம் மக்கள் விஷயத்தில் பராமுகமாய் இருக்கும் ஒருவன் தனக்கும் தன் குடும்பத்துக்கும் தன் தாய் நாட்டுக்கும் கேட்டுக்கு வித்தூன்று கின்றான்.

தமிழகத்துத் தந்தைகாள்! நீங்கள் ஒவ்வொருவரும் இவ்விஷயத்தை ஞாபகத்தில் வையுங்கள்!

பெற்றோரே மக்களுக்குச் சிறந்த முன் மாதிரியாம். நூலைப் போல் சேலை; தாயைப்போல் பிள்ளை என்பது பழமொழி.

> தக்கார் தகவிலர் என்பது; அவரவர்
> எச்சத்தால் காணப்படும்.

என்ற நாயனர் திருமொழியின் கருத்தை ஊன்றிப் பாருங்கள்.

ஒருவன் யோக்கியனு அயோக்கியனு என்பதற்கு அவன் கையிலுள்ள நற்சாட்சிப் பத்திரங்களையும், அவனுக்குக் கிடைத்துள்ள தங்கப் பதக்கங்களையும், கௌரவப்பட்டங்களையும் நோக்குதல் மஹா மூடத்தனமாம். தன் கைப்பணத்தைச் செலவு செய்து பதக்கங்களை உண்டு பண்ணி, பொதுக்கூட்டத்திலே ஏதேனும் ஒரு கூத்தாடியை அக்கிராசனாதிபதி யாக்கி, அவரது திருக்கையினின்றும் பதக்கம் வாங்கி யணிந்து பரமபதம் பெற்று விட்டதாக எத்தனை பேர் மகிழ்ச்சியடைகின்றனர். கௌரவப்பட்டங்களின் கதை யாவருக்கும் தெரிந்ததுதானே! யோக்கியதையால் பட்டம் பெறுவோரும் அநேகர்

ளர்; ஆனால் அவர்களது கண் திருஷ்டி பரிகாரத்துக்காக பணங் கொடுத்துப் பட்டம் பெறுவோரும் பலர் இருக்கின்றனர்.

ஆகவே ஒருவனது தகுதியை அளவிட்டறிவதற்கு அவனது மக்களே தகுந்த சான்று என்கின்றார் பொய்யாமொழித் திருவள்ளுவ நாயனார். என்னை? அவரைக் போடத் துவரை முளையா தாகலின்.

யோக்கியர்களுக்கும் சிலகால் அயோக்கியப் பிள்ளைகளும் பிறப் பதுண்டு. அது புறநடை; பொதுவிதி யன்று.

ஆகவே மக்களைக்கொண்டே உலகம் பெற்றோரை மதிக்கும்; பெற்றோர்கள் மேம்பாட்டை அறிவதற்கு மக்களே சிறந்த அளவு கோலாம்.

தம் மக்கள் கண்ணில் படத் தகாதன வற்றைப் பெற்றோர் மனத் தால் எண்ணுதலும் வாக்கால் மொழிதலும் காயத்தால் செய்தலும் பாதக மாம்.

மக்களைப் பெற்றோர் எப்பொழுதும் தெய்வ சன்னிதியில் நடந்துகொள்வது போல் புனிதராய் ஒழுகல்வேண்டும். பெற்றோர் சிந்தனையின்—மொழியின்—செயலின் பயனெல்லாம் மக்களையே தடையின்றிப் படர்ந்து பிடிக்கும். மக்களைப் பெற்றோர் தான் தோன்றிகளாய் நடத்தல் உசிதமல்ல; உரிமையுமன்று.

பெற்றோரின் வாழ்வே மக்களைப்பொறுத்ததாகலின், மக்களின் க்ஷேமத்துக்காக, பெற்றோர் சகலநலங்களையும், வேண்டுமெனில், துறக்க வேண்டும். ஏனெனில் மக்கள் நலம் பேணுவோரே தன்நலமும் குலநலமும் தேசநலமும் பேணுவோராவர். மக்களைப் பேணி வளராதவர் கோடிதேடிக் கொடிக் கட்டினும் பயனில்லை; குடை நிழலிருந்து குஞ்சர மூரினும் சிறப்பில்லை.

(தொடரும்.)

பம்பாய் மாகாணம் இந்து சபையின் ஆதரவில் பரல்பூர், காலச், ராஜடாங்காரி முதலிய் கிராமங்களில் 120 கிறிஸ்தவ குடும்பத்தைச்சேர்ந்த 363 (மனிதர்கள் ஸ்திரீகள் சிறுவர்கள் உட்பட) கிறிஸ்துவர்கள் 1924-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 4, 6, 8-ந்தேதிகளில் அங்கலேஸ்வர மத்திய சபையில் இந்து மதத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.

பம்பாய் இந்து மிஷனரி சங்கத்தின் ஆதரவில் மிஸ் சோரா வில்சன் என்னும் பெண்மணி ஏப்ரல் மாதம் 11-ந்தேதி வெள்ளிக் கிழமை இந்து மதத்தில் சேர்ந்துகொண்டாள். இம்மாதுக்கு சுசீலா என்னும் புதுப் பெயரிடப்பட் டிருக்கின்றது. ஸ்ரீமாந் எஸ். வைத்தியா ஆச்சாரியராகவும், ஸ்ரீமாந் எஸ். ஜி. ஜோஷி, புரோகிதராகவும் வேலை பார்த்தார்கள்.

"Our Secret Foes and Fight for Health."

"நமது அந்தரங்கப் பகைவர்களும் சுகத்திற்குச் சண்டையும்."

(ஸ்ரீமான் ஏ. சொக்கலிங்கம் பிள்ளையவர்கள் எழுதியது.)

(காபி ரைட்)

வியாதியின் காரணங்கள்.

அநேக வியாதிகள் இயல்பாக உண்டாவன அல்ல.

ஒவ்வொரு சிறுவனும் சிறுமியும் ஆரோக்கியமும் திடமுமுள்ள புருடனாகவோ அல்லது ஸ்திரீயாகவோ வளருவோமென்னும் உறுதியான நம்பிக்கை யுடையவர்களா யிருக்கின்றனர். ஒரு சிறுவன் 'நான் பெரியவனாகிற போது' அல்லது ஒரு சிறுமி 'நான் பெரியவளாகிறபோது' என்று சொல்வதைக் கேட்கின்றோமே தவிர 'நான் பெரியவனாவதற்கு' அல்லது நான் பெரியவளாவதற்கு உயிரோடிருந்தால்' என்று ஒரு சிறுவனும் ஒரு சிறுமியும் சொல்வதை நாம் ஒருபோதுங் கேட்டதில்லை. அச்சிறுவர்கள் புருடர்களாக அல்லது ஸ்திரீகளாக வளர்ந்தால் இன்னது செய்பலாமென்று நினைக்கிறபோது பலவீனத்தினலும் நோயினலும் தாங்கள் விரும்பிய வேலையைச் செய்வதற்குத் திராணி யில்லாதவர்க ளாய்விடுவோ மென்கிற எண்ணம் அப்போது அவர்களுக்கு உண்டாகிறதில்லை; இதனல், வியாதி இயல்பாக உண்டாகிறதில்லை யென்று தெரிகிறது. இல்லையாயின், அவர்கள் பெரியவர்க ளாகிறபோது பலவீனர்களாகி விடுவோம், நோயாளிகளாகி விடுவோம் என்கிற எண்ணம் அவர்கள் மனத்தில் சிலவேளை அப்போதே உதித்திருத்தல் வேண்டும்.

பிராணனைக் காப்பாற்றிக் கொள்வதற்குச் சண்டை.

உலகத்தில் எப்பொழுதும் போராட்டம் நடந்து கொண்டே யிருக்கின்றது. நம்மைச் சூழவும் ஒவ்வொரு நாளும் பிராணிகளுக்குள்ளே சண்டையுண்டாவதை நாம பார்க்கின்றோம். பல்லி ஈயைப்பிடிப்பதையும், பாம்பு தவளையைப் பிடிப்பதையும், பறவைகள் பூச்சிகளைப் பிடிப்பதையும், பெரிய மச்சங்கள் சிறு மச்சங்களைப் பிடிப்பதையும் நாம் பார்க்கின்றோம்; அன்றியும், யுத்தங்களில் மனி

தர்கள் ஒருவரை யொருவர் கொல்வதையுங் கேட்டிருக்கின்றோம்.

நாம் சண்டையிட வேண்டிய பெரிய பகைவர்கள் வேறு மனிதர்களுமல்ல காட்டிலுள்ள விலங்குகளுமல்ல; ஆனால், ஒவ்வோராண்டும் யுத்தத்தில் கொல்லப்பட்டவர்கள் தொகையைப் பார்க்கினும் அதேகாலத்தில் அதிகமான ஆண் பெண்களையும், குழந்தைகளையுங் கொல்லும் பகைவர்கள் வேறே யிருக்கின்றனர். அப்பகைவர்களோ அற்பமானவர்கள், மிகவும் அற்பமானவர்கள்; ஆனால், பொருள்கள் அற்பமானவை யானதால், அவை அபாயத்திற்கு இடமானவை அல்லவென நாம் நினைத்தல் கூடாது. அப்பகைவர்கள்தாம் வியாதிக் கிருமிகள் (Disease Germs) என்று சொல்லப்படுகின்றன.

கிருமிகளின் இயல்பு.

கிருமிகள் என்பன கண்ணுக்குப் புலப்படாத மிக நுண்ணிய உயிருள்ள பொருள்கள். இக்கிருமிகளில் அநேக வகைகளுண்டு. எல்லாவகைக் கிருமிகளுமே அபாயத்தை விளைவிக்கக் கூடியன அல்ல. சில கிருமிகள் வியாதிக்குக் காரணமானவை. சில கிருமிகள் அபாயத்தை உண்டாக்காமற் போயினும் மனிதர்களுக்கு உபயோகமுள்ளவையா யிருக்கின்றன. அவ்வுபயோகமுள்ள கிருமிகள் நிலத்தைக் கொழுமையாக்கு கின்றன; ஆதலால், அவற்றை நாம் பாதுகாத்தல் வேண்டும்; ஆனால், வியாதியை உண்டாக்கக் கூடிய எல்லாக் கிருமிகளையுங் கூடிய விரைவில் அழித்துவிடல்வேண்டும்; ஏனெனின், அவை நம்முடைய உடம்பினுட்புகுந்து அங்கிருந்தே நம்முடைய ஆரோக்கியத்தைக் கெடுத்து அபாயத்திற் குள்ளாக்கு கின்றன. அக்கிருமிகள் தாவர (plants) வகுப்பையேனும் பிராணி (animals) வகுப்பையேனுஞ் சேர்ந்திருக்கும். அவற்றைப் பூதக்கண்ணாடி (Microscope)யின் உதவியில்லாமல் பார்க்க முடியாது. பூதக்கண்ணாடி என்பது நமது கண்ணுக்குத் தெரியாத மிக நுட்பமான பொருள்களை மிகப் பெரியனவாகக் காட்டும் ஓர் யந்திரமாகும். பூதக்கண்ணாடியின் உதவிகொண்டே கூரிய அறிவுடைய பொருளாராய்ச்சி நூலார் (scientists) வியாதிக் கிருமிகளை

பரிசோதித்துப் பார்த்து, அவை நம்முடைய உடம்பினுட் புகுந்து பெருகும்போது உடம்பை விஷப்படுத்தி நம்மை நோயாளிகளாக்கி விடுகின்றன என்பதைத் திட்டமாய்த் தெரிந்து கொண்டனர்.

நம்முடைய உடம்புகள் பல கருவிகளாய் அமைக்கப் பட்டு, தாமே இயங்கும் யந்திரங்களைச் சிறிது ஒத்திருக் கின்றன. யந்திரங்களில் ஏதேனுஞ் சில முக்கிய கருவி கள் பழுதாய்விட்டால் அவை இயங்குதலில்லாமற் போய் விடுகின்றன. அதுபோலவே நமது உடம்புகளுக்குச் சீக் கிரமாகவோ அல்லது சற்று தாமத மாகவோ வியாதி சம்பவித்து விடுகின்றது. சில சமயம் இரைப்பை (stomach) யும், சீரண உறுப்புக்களும் (Digestive organs) தம்வேலையைச் சரிவரச் செய்யாவிடின் அப்போது உடம்பு ஆகாரக் குறைவினால் வருந்துகிறது. சில சமயம் இருதயமும் (Heart), இரத்தக்குழாய்களும் (Blood vessels) நோய்கொண்டு விட்டால் உடம்பில் சரியான இரத்தவோட்டமில்லாமற் போய்விடுகிறது. சில சமயம் மூத்திராசயங்கள் (Kidneys) அதனதன்வேலை யைச் செய்யத்தவறினால் நஞ்சுத்தன்மையுள்ள கழிவுகளால் (Poisonous washes) உடம்புக்குத் துன்பமுண்டாகின் றது. இவ்விதமாக நமது உடம்புகள் கெட்டுப்போவதற் குக் காரணமென்ன? நமது உடம்பினுள் புகுந்து உடம் பை விஷப்படுத்தி நோயை உண்டாக்குவதற்குக் காரண மான வியாதிக் கிருமிகளேயாகும். அவற்றைப்பற்றி நம்மில் அநேகர் இதுவரையுங் கேட்டிரார்கள்; ஆதலால், இனி அவற்றைப்பற்றிச் சுருக்கமாகத் வாசித்துத் தெரிந்து கொள்ளலாம்.

வியாதிக் கிருமிகளைப்பற்றித் தெரிந்துக்கோள்வது ஏன் முங்கியமான தாகும்?

ஒருவன் வியாதிக் கிருமிகளைப் பற்றித் தெரிந்து கொள்வானுபின் அவன் எப்போது ஆரோக்கிய முள்ளவனு யிருக்கலா மென்பதையும், எப்படி, எப்போது பெரும் பான்மையும் வியாதிக் கிருமிகளினின்றுந் தப்பித்துக் கொள்ளவேண்டு மென்பதைத் தெரிந்துகொள்ளுஞ் சக்தி யையு முடையவனுகின்ருன். வியாதிக் கிருமிகளைப்பற்றித்

தெரிந்து கொள்ளாதவன் "வியாதியாவது! கிருமிகளாவது! எங்கும் வியாதிதான்! எங்குங் கிருமிகள்தாம்! தள்ளுங்களையா, எல்லாம் விதிப்படியாகு"மென்று சொல்லிக்கொண்டே பலமுறையும் வியாதிக்குள்ளாகித் துன்பப் படுகின்றான்.

தோற்று வியாதிகள்—**Infectious diseases.**

தொற்று வியாதிகளால் துன்பப் படுகிறவர்களிடமிருந்தே அவ்வியாதிகள் நம்மைப் பற்றுகின்றன. இது நமக்கு வியப்பாகத் தோற்றுகின்றது. ஆனால், இஃது உண்மையானதென்று ஒவ்வொருவருக்குந் தெரியும். ஒருவன் வாந்திபேதியால் துன்பப்படுகின்றான். அவனை ஒரு சிநேகிதன் போய்ப் பார்த்து அவன் பக்கத்தில் சிறிது நேரம் உட்கார்ந்திருந்து பிறகு வீட்டிற்குத் திரும்பிவிடுகின்றான். இரண்டுநாள் கழித்து அந்தச் சிநேகிதனுக்கு வாந்திபேதி கண்டு விடுகின்றது. கண்ணோயுடைய ஒரு பையன் பாடசாலைக்கு வருகின்றான். அவன் பக்கத்திலுட்காரும் பையனுக்குச் சீக்கிரமாக கண்ணோய் வந்துவிடுகின்றது. ஒரு பெண் அம்மை கண்டிருக்கும் வீட்டிலிருந்து பாடசாலைக்கு வருகிறாள். அவளுக்கு அம்மை காணவில்லையானாலும் அவள் வகுப்புப் பிள்ளைகளில் இரண்டு மூன்று பேர்களுக்கு சீக்கிரமாக அம்மைகண்டுவிடுகின்றது. இவ்வியாதிகள் ஒருவரிடமிருந்தே மற்றொருவருக்குப் பரவுகின்றன. இவ்வாறு பரவுகிற வியாதிகள் தாம் தோற்று வியாதிகளாம். எல்லாத் தொற்று வியாதிகளுக்கும் நுண்ணிய கிருமிகளே காரணமாகின்றன. ஒருவரிடமிருந்து மற்றொருவரைத் தோற்றுவது என்ன? வியாதிக் கிருமிகளே. (*Disease Germs*) அவை எப்படித் தொற்றுகின்றன? அம்மை கண்டிருக்கும் வீட்டிலிருந்து வருகிற பெண் அம்மைக் கிருமிகளைத் தன் உடைகளின் மேல் அல்லது கைகளின்மேல் கொண்டுவந்து மற்றப் பிள்ளைகளுக்குத் தொற்ற வைக்கின்றாள். வாந்திபேதி நோயாளியைப் பார்த்த சிநேகிதன் எவ்விதமாகவோ அவனிடமிருந்து கழியும் வாந்திபேதிக் கிருமிகளைத் (Cholora Germs) தன் வாய் வழியாக விழுங்கி விடுகின்றான். கண்ணோய் கொண்ட பையனுடைய கண்களில் கண்ணோய்க் கிருமிகள் சேர்ந்து விடுகின்றன.

(இன்னும் வரும்.)

இயற்கையில் இறைவன்.

ஸ்ரீமாந். S. ரெங்கசாமி அய்யங்கார் எழுதியது.

ஒருவன் தன்னைச் சுற்றியிருக்கும் இயற்கைப் பொருள்களை உற்றுப் பார்ப்பானுகில் அவனுக்குப் புதிய அழகுகள் வெளிப் படுகின்றன வென்பதை நாமெல்லாரும் அநுபவ ஸித்தமா யறிந்திருக் கிறோம். அதே விதமாக நம்மைச் சுற்றிலுமுள்ள பொருள்கள் ஒழு குதலைப் பார்த்தால் அவைகளை ஆளும் முறைகளு மிருக்கின்றனவென நாம் அறியலாம். இப்பொருள் பல வகைகளாகப் பிரிக்கப்பட்டும், அப் பாகுபாட்டின் ஒவ்வொரு பொருளும் மற்றொரு பொருளுடன் ஏதேனு மொரு வகையில் ஸம்பந்தப் பட்டு மிருக்கிறது. இவ்வாச்சரி யங்களை யெல்லாம் உற்று நோக்கிப் பார்க்கப் பார்க்க நமக்குப் புதிய விநோதங்களும், எளிதில் வெளியா கின்றன. கடைசியில் நாம் ஒரே வித ஸம்பந்தத்தைக் காண்கிறோம்; அதாவது பரம்பொருளே !

உலகத்திலுள்ள எவ்விதமான ஜீவசரீரங்களின் அவயவங்களைப் பற்றி யோசித்துப் பார்த்தாலும் ஒரு ஸர்வக்ஞனுகிய கடவுள் அச் சரீரத்தை அபிமானிக்கும் உயிர்கள் வஸிக்கவேண்டிய இடத்திற்கும், புசிப்பிற்கும், சுகத்திற்கும் தக்கவிதமாக அறிந்து அமைத்திருக்கிற தாகப் புலப்படுகிறது. இவ்வத்யற்புதமான காரியம் மானிடரால் முடியுமா? மேலும் அறிவற்ற பூதங்களே கூடி இவ்வுருவத்தைப் பெற்றதாக நினைக்க முடியவில்லை. விருக்ஷமுதல் மனித ரீருகக் கொள்ளப்பட்ட ஜீவகோடிகளின் அவயவங்களெல்லாம் அச்சரீர அபிமானியாகிய ஜீவனின் இச்சைக்குத் தகுந்தாற்போல அமைக்கப் பட்டிருக்கின்றன. ஆகையால் கடவுளின் பெருமை வாசாமகோசர மென்றும் மனிதரால் வர்ணிக்க முடியாத தென்றும் இசைக்கின்றார் கள்.

எப்படித் திரைக்குப்பின் சூத்திரதாரன் மறைந்திருந்து மற்றைய நாடக பாத்திரங்களை நடிக்கச் செய்கிறானோ அப்படியே நாம் காணும் இவ்வுலகத்தையும் அதிலிருக்கும் பொருள்களையும் ஆட்டி வைக்கும் இறைவ னொருவன் இருக்கிறானென்று எல்லா தேசத்தா ராலும், நம்பப் படுகிறது. சூத்திர தாரனைச் செய்கைகளா லன்றி வேறெவற்றாலு மறிய முடியாதது போல் இறைவனையும் அவன் செய்கைகளாலேயே அறிய வேண்டியிருக்கிறது. இப்பொழுது நாம் உலகில் வஸிக்கும் சில ஜீவஜெந்துக்களின் தாவர சங்கம சாஸ்திரத் திலிருந்து (Natural History) அவைகளின் உணர்ச்சியால் எப்படி ஸர்வக்ஞனுகிய கடவுள் இயற்கையில் வியாபித்து நிற்கிறான் என் பதைப் பார்ப்போம்.

மேலே சொன்னபடி ஒவ்வொரு ஜெந்துவின் அவயவங்களும் முற்றும் மாறுனதா யிருக்கின்றன. பிராணிகளின் திமில்கள் முதல்

எள்ளுப் பிரமாண முள்ள எலும்புவரை ஒவ்வொன்றும் ஓர் காரியத்திற்குபயோகமாகும் படியாகவே அமைக்கப் பட்டிருக்கிறது. ஒரு பிராணியின் அவயவங்கள் மற்றொரு பிராணிக்கு எவ்விதத்தி லும் உபயோகப் படக்கூடிய தல்ல.

ஸமஸ்தமான ஜீவகோடிகளிடத்தும் தம் குடும்பத்தை விருத்தி செய் வதற்காகக் காமவிகாரமும் (Lust) தானும் தன் குடும்பமும் வாழ வேண்டி பசியுணர்ச்சியும் (Hunger) ஆகிய இவ்விரண்டுமிருக்கக் காண்கிறோம். ஒரு வகை ஜெந்துவின் தாய்க்கு அதன் வர்க்கத்தை யும் குடும்பத்தையும் காப்பாற்ற உண்டாகும் அன்பும் கவலையும் மற்றொருவகை ஜெந்துவினிடம் ஜெனிக்கும் அதேவித அன்பும் கவ லையும் காலக்ரமத்திலும் அளவிலும் வேறுபடுகின்றவென்பதைப் பார்க்க நமக்கே ஆச்சரிய மாயிருக்கிறது. சாதாரணமக, பூச்சி களும், மீன்களிற் சில வகுப்புகளும் நேர்ந்த இடத்தில் முட்டையிட் டுச் செல்லுகின்றன. அவைகளைப்பற்றி அவை ஒரு பொழுதுங் கவலைப்படுகிற தில்லை. முட்டையிடுவது மாத்திரந்தான் அவைசள் தொழில் போலும்! முதலை, நெருப்புக்கோழி, நல்ல பாம்பு முத லியவை தங்கள் முட்டைகளையிடத்தகுந்த இடம், அவைகளினின்று வெளிப்படும் பிராணிகள் வஸிக்கத்தகுந்த இடமாயெனப் பார்த்து முட்டையிட்டு அப்பாற் சென்று விடுகின்றன. கோழி முதலியவைகள் முட்டையிட்டு, அடை காத்து அவைகள் வெடித்து, குஞ்சுகளுக்கு நடமாட சக்தியுண்டாகும்வரை அவைகளை காப்பாற்றுகின்றன.

ஒவ்வொரு இனத்தைச்சேர்ந்த பறவைகள் கட்டுங்கூடுகள் ஒவ் வொரு விதமாகவும், அவ்வவ்வினத்தைச் சேர்ந்தவைகள் யாவும் கட்டுவன ஒரே விதமாகவும் இருக்கின்றன. இவைகளில் ஒன்று கட்டுவதைப் பார்த்துப் பழகி மற்றொன்று கட்டுகிறதென்று சொல் வதற்கிடமில்லை, ஏனெனில், ஒரு காக்கையை அதன் இனத்திலி லிருந்து பிரித்து ஒரு பெட்டைக்கோழி இருக்குமிடத்தில் சேர்த்து அங்கே முட்டையிடச் செய்தாலும், முட்டையினின்று வெளிப்படும் காக்கைக்குஞ்சு தன் இனத்தாரைப்போலவே கொஞ்சங்கூடப் பிச காமல் கூடு கட்டிக்கொள்கின்றது. இலையுதிர் காலத்தில் யாதொரு (சுவகத) பேதமின்றி வெறுங் கட்டையாக நின்ற மரங்கள் வஸந்த மாரி காலத்தில் இலை, தளிர், பூ, காய், கனி விதையாதிகளாற் தழைத்து விளங்கி அவைகள் யாவும் தன்னைத் தேடிவந்தடையும் உயிர்களுக்கு ஒளியாமல் பக்குவப்பட்ட இலை, காய், கனியாதிகளை ஸகஜமாக உதிர்த்து அவைகளைப் பெற உதவுகின்றன. மீளமீள இவ் வாறே செல்கின்றன. இவ்விருக்ஷத்தின் செய்கையை ஆழ்ந்து யோசித்தால் கடவுளுடைய காருண்யமான சக்தியை உணரலாம். அதே காலத்தில் மிருக ஜாதிகள் கவலையற்று ஒளிந்து வாழ அடர்ந்த மரங்களும், ஆகாரத்திற்காக நிறைந்த வயல்களும் எதேஷ் டமான பூச்சிகளும், கிளம்புகின்றன. இவை யெல்லாம் இறைவ னருளா லன்றோ?

இயற்கையில் இறைவன்

மிருகாதிகள் தம் சந்ததி யிடத்தில் தாய் தந்தைக்குரிய அன்பையும் காப்பாற்றுங் கவலையையும் எவ்வளவு காலந் தேவையோ அவ்வளவு காலந்தான் காண்பிக்கின்றன. இவ்வன்பின் தன்மை எத்தகைத்தென்பது கீழிருக்கும் உதாரணத்தால் வெளியாகும். அங்க சேத சாமர்த்திய முள்ள ஒருவன் (A Skilful dissectionist) ஒரு பெண்ணு யைக் கிழித்தான். அந்த உபத்திரவம் தாங்க மாட்டாமல் வருந்தின அந்த நாய், தன்னிடத்தில் தன் குட்டியைக் காண்பித்து வைத்தவுடன் தன் உபத்திரவத்தை மறந்து அதை நக்கிக்கொடுத்தது. அந்தக் குட்டியை எடுத்துப் போகவும் அது ஊளையிட்டுக் கத்த ஆரம்பித்தது. அக்கத்தல் தான் குட்டியை இழந்ததற்காக வெனத் தோன்றியதே யொழிய தான் பட்ட அவஸ்தைக்காக வென்று தோன்றவில்லை.

மிருகாதிக ளிடத்திலுள்ள இவ்வன்பு மனிதர்க ளிடத்திலிருப்பதைக் காட்டிலும் ஜாஸ்தியாகவே இருக்கிற தென்று சொல்லலாம். அப்படிக் கிருப்பினும் தம் குட்டிகளுக்கு இரைதேட சக்தி வந்ததும் தாய் அவைகளுக்கு இரையளித் துதவுவதை நிறுத்தி விடுகிறது. ஆகவே தகுந்த வயதிலேயே ஒவ்வொன்றும் தனக்குத் தானே இரை தேடிக் கொள்ள நேரிடுகிறது. இவ்வித ஸ்பாவ உணர்ச்சியில் ஒரு அம்சம் கவனிக்கத் தக்கது. அதாவது, தாய் மிருகங்களும் பக்ஷிகளும் தம் சந்ததிகளை இரை தேடி ஜீவிக்க விட்டு விட்டாலும் அவை பிணியினால் வருந்திச் சக்தி யற்றிருக்கும் பொழுது அவைகளுக்கு இரை கொடுத்து அவற்றின் தேகத்தில் இரை தேடச் சக்தி வருமளவும் கவலையுடன் காப்பாற்று கின்றன.

நிச்சப்தமாயும் தொந்தரவில்லாமலும் மனுஷ்ய ஸஞ்சாரமில்லாமலும் இருக்கும்படியான இடங்களில் எவ்வளவு ஜாக்கிரதையாய்ப் பெட்டைக்கோழி தன் கூடு கட்டுகிறது. முட்டையிட்ட பிறகும் அதி ஜாக்கிரதையாய் அவைகளை அடிக்கடி திருப்பிக் கொடுத்து அடைகாத்து எல்லாப்பக்கமும் சூடேறும்படி செய்கிறதே! இரை தேட வெளியே சென்று தங்கி விடாமல் முட்டைகள் குளிர்ச்சி யடைவதற்குள் இரை தேடிக்கொண்டு அவை திரும்ப வருகின்றனவே! கோடைகாலத்தில் தாம் எதேச்சையாக இருக்கலாமென்றும் குஞ்சுகள் குளிரால் கஷ்டப்படக் கூடிய மாரி சாலத்தில் தாம் இஷ்டம் போலிராமல் பாதி நேரம் வீட்டிலும் பாதி நேரம் வெளியிலு மிருக்கவேண்டுமென்றும் யூக புத்தியை அதற்கு யார்தான் கொடுத்திருப்பார்? முட்டை உடையுந் தருணம் வரும் பொழுது ஊக்கத்துடனும், கவலையோடும், சாமர்த்தியமாயும் அவைகளைப் பெட்டைக் குஞ்சு பொரிக்கச் செய்தல் ரஸாயன சாஸ்திர முறைப்படியாலும் (chemical operations) அசாத்திய மான தன்றோ?

தாம் பிறந்தவுடன் தமக்கு வேண்டிய ஆகாரத்தைச் சாப்பிடவும் தமக்கு வேண்டாததும் தேகத்துக்கு ஒத்துக் கொள்ளாதது

மான ஆகாரத்தைத் தள்ளவும் அறிந்திருக்கும் ஜீவஜெந்துக்களின் உணர்ச்சியை நாம் என்னென்று சொல்வது? ஒரு ஆட்டுக்குட்டி பிறந்தவுடன் தானுகவே தாய்ப் பால் குடிக்கச் செல்ல வில்லையா? மனிதர்களைப்போல எல்லா மிருகங்கள் பக்ஷிகளிடத்தும் சில தீய குணங்களாகிய கோபம், வன்மம், பழி வாங்குகை முதலியவை யிருக்கின்றன. ஆனல் இக்குணங்கள் அந்தந்த ஜெந்துக்களின் தேக ஆக்ருதிக்குத் தகுந்தபடி யிருக்கிற தென்னலாம். ஸாதாரணமாக ஒரு சிங்கத்தின் மூர்க்கத் தன்மை எவ்வளவோ அவ்வளவு ஒரு ஆட்டுக்குக் கிடையாது. இருச்கிற மூர்க்கத் தன்மையைக் காட்டிலும் அதிகமாயிருந்தும் அதற்குப் பயனில்லை. இதே மாதிரியாக ஒரு ஆட்டின் சாந்தமான தன்மை ஒரு சிங்கத்தினிடம் காண்பதரிது. என்ன ஆச்சர்யம்! இதுவும் அவன் அற்புதச் செடலன்ருே?

நிற்க: ஒவ்வொரு ஜீவஜெந்துவும் தன்னைக் காப்பாற்றிக்சொள்ளும் பொருட்டு நகங்களோ, குளம்புகளோ, கொம்புகளோ, கூரிய பர்களோ, நீண்ட வால்களோ, விஷம் பொருந்திய கொடுக்குகளோ அல்லது நீண்ட அலகுகளோ, தும்பிக்கைகளோ, ஏதேனுமொன்றை அவற்றின் உருவத்திற்குத் தகுந்தபடி கடவுள் கொடுத்திருக்கிருர். கடவுள் இவ் வாயுதங்களைத்தான் அவைகளுக்குக் கொடுத்தார்; அவைகளை உபயோகிக்க யார் சற்பிக்கிருர்கள்? இதுவும் கடவுள் செய்கையே. இது தாவர சங்கம சாஸ்திரிகளாலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. அந்தப் பிராணிகளுக்கு ஆயுதங்கள் முளைப்பதற்கு முன்னுடியே அந்த இடத்தைக் கொண்டு அவை தம்மைக் காப்பாற்றிக் கொள்கின்றன. உதாரணமாக, வீட்டுக்குள்ளிருக்கும் ஆட்டுக் குட்டி தன்னை எதிர்ப்போரை கொம்பு துளிர் விடுவதற்கு முன்னுலேயே தலையினுல் முட்டித்தள்ளித் தப்புவித்துக் கொள்கிறது.

கடவுளின் யூகபுத்தியும், யூகத்தன்மையும், காருண்யமான சக்தியும் அசழ் எலியின் அவயவங்களிலிருந்து நாம் அறிந்து கொள்ளலாம். அதன் ஒவ்வொரு அவயவங்களும் அதன் சுபாவத்திற்கும் பழக்க ஒழுக்கத்திற்கும் தகுந்த தாகவே அமைக்கப் பட்டிருக்கிறது. அதன் வாசஸ்தானம் பூமிக்குள் ளிருப்பதனுலும் அங்கே ஒன்றையும் பார்க்க முடியாத தனுலும் அதன் கண்கள் தாவரசங்சம சாஸ்திரிகள் (Naturalists) 'அதற்குக்கண் உண்டோ இல்லையோ' என்று சந்தேகிக்கும்படியான அவ்வளவு சிறியதாய்க் கொடுத்திருக்கிருர். பார்வையில் குறைந்திருப்பதற்குப் பதிலாக அதற்குக் கட்செவி போன்ற காதைக் கொடுத்திருக்கிருர். மனிதர்கள் காதுக் கெட்டாத எந்த சப்தமும் அதன் காதுக்கு வெகு சீக்கிரத்தில் எட்டும். மேலும் தன் சற்றளவுக்கு வேண்டியளவு கனமுள்ள குகை பண்ணிக் கொள்வதற்காக குட்டையான கால்களும், ஒரே தடவையில் அதிக மண்ணைத் தோண்டி எடுக்கச் சாதனமாக அகன்ற முள் பாதங்களும் பகைவர் தன்னைப் பிடிக்க இலகு வில்லா திருக்கும்படி வெகு சிறுகுட்டையான வால்களும் கொடுத்திருக்கிருர்.

இயற்கையில் இறைவன்

இன்னும் நமது கண்ணுக்கெட்டாத தூரங்களிலும் கடல், வனாந்தரங்கள் போன்ற மறைவிடங்களிலும் ஸர்வலோக நாயகரின் அதியற்புதச் செய்கைகளைக் காண்பிக்கக்கூடிய மிருகங்களும், பக்ஷி ஜாதிகளும் மறைந்திருக்கின்றன.

கடவுள் ஒரு தனியிடத்தி லிருக்கின்றாரெனவும் அதையடைய முயலுவதே மனிதவாழ்க்கைக்குத் தொழிலெனவும் பிதற்றுகின்றார். சிலர். அவ்விடத்தை மோக்ஷமென்றும் சாயுஜ்ஜிய பதவியென்றும் பெயரிட்டழைக்கின்றார்கள். அந்தோ! ஒவ்வொருவர் கண் முன்னேயும் ஒவ்வொரு பொருளிலும், ஒவ்வொரு ஜீவனிடத்திலும் அதன் செய்கையிலும் உணர்ச்சியிலும் நம் சொல்லிலுங்கூட உறையும் இறைவனைப் பிரித்து வேறா யிருக்கின்றானென உரைத்தல் எவ்வளவு மடமை? பூர்வம் பிரஹ்லாதன் இரண்யனுக்கு "இறைவன் தூணிலுமுளன்; துரும்பிலுமுளன்" என்று சொன்னதை ஆலோசித்தால் மேற்கூறிய விஷயத்தை யாவரும் ஏற்றுக்கொள்வார் என்பதிற் சந்தேகமில்லை. ஆகவே இயற்கையே இறைவன்; இறைவனே இயற்கை. இவ்விரண்டும் வேறுபடுவன வல்ல.

போலீஸ் இன்ஸ்பெக்டர்

திருவாளர் - முத்தைய முதலியாரவர்களுக்கு

வாழ்த்துக் கவி.

1. பொன்னும் மணியுங் கொழித்துவரு
   பொன்னி வளஞ்சா லிடைமருதில்,
   மன்னிச் சிறக்கும் வேளருணு
   சலமா லருளும் மணிமுத்தே!
   கன்னற் கழையும் வேம்பும்போற்
   கலந்தே யார்க்கும் நீதிபுரி
   உன்னைச் சிராப்பள் ளிக்கனுப்ப
   ஒல்லே மியாமு மொல்லேமால்.

2. ஒல்லா மனத்தே மானுலும்
   ஊர்சேய்த் தில்லை யென்றதனுல்
   நல்லாய் நாங்க ளிசைந்திருந்தேம்
   நாளும் கோளும் நலியாமற்
   பொல்லாங் ககற்றிப் பொதியத்துப்
   பிறந்த மொழிபோல் நீ வாழக்
   கல்லார் குறிச்சிக் கடவுளடி
   கருதிக் கோரிப் பரவுதுமே.

திருநெல்வேலி, 3—4—24.

தலைவர்,
பட்டு மளிகை (Silk House.)

வெள்ளெழுத்து

ஆயுர்வேத நயன பண்டிதர் ஸ்ரீமான் டி. எஸ் அமிருதலிங்கம் பிள்ளை நவசக்தியில் பின்வருமாறு எழுதுகிறார் :—

வெள்ளெழுத்து. இதை ஸ்ரீ அகஸ்தியர் நமது நயன விதி ஐந்நூறு என்ற நூலில் தொண்ணூற்றாறு வியாதிகளுள் ஒன்றாக எடுத்திருக்கின்றார். மக்களது சரீரம் மூன்று பருவங்களாகப் பிரிக்கப் பட்டிருக்கிறது. 35 வயது வரையில் வாத பருவமாகவும், அதற்கு மேல் 55 வயது வரையில் பித்த பருவமாகவும், அதற்கு மேல் மரண பரியந்தம் கப பருவமாகவும் நூல்களில் கூறப்பட் டிருக்கின்றது. 35 வயதிற்குட்பட்ட வாத காலத்தில் ஒருவிதமான தோஷமும் கண்ணில் உண்டாவதற் கிடமில்லை. ஸ்ரீ அகஸ்தியரும் "தெளிவது ஒழியா நிற்கும் தீங்கில்லை முப்பத்தைந்தில்" என்று கூறியுள்ளார். ஆகையால் அதற்குமேல் தான் வெள்ளெழுத்து உண்டாகிறது. வாத நீர் கருநிறம். பார்வைக்கு வாத காலந்தான் விசேஷம். பித்த நீரின் நிறம் மஞ்சள். 55 வயது அல்லது, சரீர ரீதிக்குத் தக்கவாறு, அதற்கு மேற்பட்ட சில வருஷங்களுக்குப் பிறகு வெள்ளெழுத்து மாறி விடுகிறது. "இதை எங்கும் யாவரும் காணலாம்". வெள்ளெழுத்தை ஒரு வியாதியாக எடுத்துக்கொண்ட ஸ்ரீ அகஸ்தியர் அடியிற் கண்டபடி வியாதியின் இலட்சணத்தைக் கூறினார்.

வெள்ளெழுத்து

கூசும் விழியும் புகைந்திருக்கும்
குறுகும் பார்வை தோற்றாது
மாசுங் கண்ணும் பசிந்திருக்கும்
மயங்குங் குணங்கள் பலவாகும்
தேசுங் குறையு மருட்சி யுண்டாம்
திறமாய் கருமம் செய்யாது
ஏசுங் குணங்கள் வெள்ளெழுத்து
என்றே சொல்லு மிதுகண்டே.

வெள்ளெழுத்தை ஒரு நோயாக எடுத்துக் கொண்டு, நோயின் இலட்சணங் கூறியதுமல்லாமல் அதற்கு ஔஷதப் பிரயோகமும் கூறி யிருக்கின்றார். அதாவது :—

அகத்திப் பழுப்புச்சாறு அப்பனே கண்ணி லிட
மகத்துவத்தைக் கேளுமினி மாண்பரே—செகத்தில்
வெள்ளெழுத்தை நீக்கும் விளங்கும் திரிபொழுதில்
உள்ளபடி சொன்னே முவந்து.

நமது புதிய கவர்னர் மனைவியார்.

வெள்ளெழுத்து

இந்த ஔஷதப் பிரயோகத்தை யாம் கையாண்டு வந்ததில் சிலருக்கு வெள்ளெழுத்து மாறிவிட்டது. சிலருக்கு மாறவில்லை. வெள்ளெழுத்து ஆரம்பமா யிருந்தால் சீக்கிரம் மாறுகின்றது. யௌவன வெள்ளெழுத்தா யிருந்தால் அதிக நாள் சென்று மாறும். விருத்தாப்பிய வெள்ளெழுத்தா யிருந்தால் சீக்கிரம் மாறிவிடும். கூர்மைப் பார்வையுள்ள தொழிலுடையவர்களுக்கு மாறுவதேயில்லை. இம்மருந்தை யாம் கையாண்டு வருகிறதில் யாதொரு குற்றமும், குணதோஷமும் உண்டாவதில்லை.

ஆகையால் ஆயுர்வேத நயன பண்டித சகோதர சகோதரிகளே! நீங்கள் ஒன்றுக்கு மஞ்சாமல் கையாண்டு அதன் அநுபவத்தைப் பலவாற்றானுந் தெரிந்து பத்திரிகை வாயிலாகவே வெளி யிடுவீர்களென்று நம்புகிறேன்.

முன்னாட்களிலிருந்த நயன பண்டிதர்களில் சிலர், ரசம்பூசிய கண்ணாடியானது பின்புறத்தில் பூசப்பட்டிருக்கும் ரசத்தின் கனத்திற்குத் தக்கவாறு உருவங்களைத் தெளிவாயும், மங்கலாயும், பிரதிபிம்பிப்பதுபோல தலை மூளையில் சுக்கிலமானது அதிசரித்திருப்பவருக்குப் பார்வை தெளிவாயும், அஃது குறைவாயிருக்குமானல் பார்வை குறைவாயும் தோன்று மென்றும், அவ்வாறு குறைவுபட்ட பருவமானது 35 வயதிற்கு மேற்பட்ட காலமென்றும், அப்பார்வை குறைவுதான் வெள்ளெழுத் தென்றும், கண்ணாடியைப் போன்றது கண்விழியின் பளபளப்பான, குவிதலான பாக மென்றும் (Lens) ரசத்தைப் போன்றது (Mercury) சுக்கில நீரென்றும், கண்ணொளியின் குறைவிற்கு ஒளியுள்ள கண்ணாடி போட வேண்டு மென்றும் கர்ன பரம்பரையாய் சொல்லக்கேட்டு வந்திருக்கின்ரும். ஆனல் 55 வயதிற்கு மேல் வெள்ளெழுத்து மாறுவதற்குக் காரணம் இவர்கள் சொன்னது மில்லை; யான் கேட்டது மில்லை. இன்னும் சிலர், 35 வயதிற்கு மேல் கண்ணில் அதிக வெளிச்சம் உண்டாகின்றதென்றும் அவ்வெளிச்சத்தை மட்டுப் படுத்த ஒளி ஊடுருவத்தக்க (Transparent) கண்ணாடி போடவேண்டும் என்றும் சொல்லிக் கேட்டு வந்திருக்கின்ரும். மற்றும் சிலர், 35 வயதிற்குப் பிற்பட்ட பருவத்தில் பித்தகாலம் ஏற்படுகிறது. பித்த நீர் மஞ்சள் நிறம். கண்ணிலுள்ள சப்த மண்டலங்களுள் நிர்த்த மண்டலம் என்பது கருநிறமுள்ள, மை போன்ற, துடைத்தால் அழியுந் தன்மையுள்ளது. அதற்கடுத்தது பீத மண்டலம். அது மஞ்சள் நிறமுள்ள நீராலாகிய வட்டம். அதற்கடுத்தது சோணமண்டலம். அது சிவப்பு நீராலாகிய வட்டம். அதற்கடுத்தது ஹரிதி மண்டலம். அது பச்சை நீராகிய வட்டம். அதற்கடுத்தது தூம்ர மண்டலம். அது புகை நிறமுள்ள நீரால்ாகிய வட்டம். அதற்கடுத்தது ஜோதி மண்டலம். அது வெண்மையான நீராலாகிய வட்டம். அதற்கடுத்தது நிசாசர மண்டலம். அது பல நிறமுள்ள நீராலாகிய வட்டம். இவ்வாறு அறுவகை நீராலும், மையாலும் ஆகிய முழு வட்டத்துக்கும்

கருவிழியென்று பெயர். இந்த முழு வட்டத்திலும் பித்த காலத்திலுண்டாகும் மஞ்சன் நீர் வியாபிக்கிறபடியால் பார்வையை மறைச்கிறதென்றும் அதற்கு ருசுவாகச் சற்று கண்ணைக் கசக்கிவிட்டுப் பொருள்களைப் பார்க்கும்பொழுது அந்நீர் சிறிதுநேரம் விலகுவதால் அந்தச் சிறிது நேரம் வரையில் பொருள்கள் துலக்கமாய்த் தெரியுமென்றும், அந்நீராலுண்டாகும் அதிக வெளிச்சத்தைத் தடுப்பதற்குக் கண்ணாடி போடவேண்டுமென்றும், பெரும்பாலும் எழுத்துகள் கட்புலனுக்கு விஷயமாகாதது பற்றி அதற்கு வெள்ளெழுத்தென்ற காரணப்பெயராயிற்றென்றும், பித்தகாலம் மாறிய பொழுது பித்தநீர் விலகி கபநீர் உண்டாகும் போது பார்வை மயக்கமாகிய வெள்ளெழுத்து நீங்குகின்றதென்றும் சொல்லிக் கேட்டு வந்திருக்கிறோம். எமது அபிப்பிராயமு மவ்வாறே

மேனாட்டு நயன வைத்தியர்களின் அபிப்பிராயமோ வெனில் வயது சென்றவர்களுக்குக் கண்ணிலுள்ள சிருங்கையும் (cornea) இவயமும் (crystalline lens) தட்டையாவதினால் பொருள்களின் உருவம் தரிசியத்திலே (retina) சரியாய் விழாமல் அதற்கப்பாற் கடந்து செல்வதினால் வெள்ளெழுத்து (long sight) உண்டாகின்றது. இதற்கு இருபுறமும் மேடான கண்ணாடி போடவேண்டும் (Convex Cus) என்பதுதான். வெள்ளெழுத்து மாறுவதற்குக் காரணம் யாதோவென்பதை யாம் கேட்டறியோம்.

குறுகிய பார்வை (Short sight.)

பிறப்பிலேயே இயற்கையாய் சிருங்கையும் (Comed) இயவமும் (Crystalline) அளவுக்கு மீறி குவிதலா யிருக்குமாயின் காணப்படும் பொருள்களி லிருந்து பாயும் ஒளிக்கதிர்களினா லுண்டாகும் அப்பொருள்களின் உருவம் தரிசியத்தில் (Retina) படாமலும் எட்டாமலும் விழும். இத்தகைய பார்வைகளுக் குறுகிய பார்வை (Short sight) என்பார்கள். இதற்கு இருபுறமும் பள்ளமான (Concav) கண்ணாடி போடவேண்டும் என்பது மேனாட்டு நயன வைத்தியர்களின் அபிப்பிராயம். அது உண்மையே. ஆயுர்வேத நயன பண்டிதர்களின் அபிப்பிராயமும் அதற் கொத்ததாகும்.

வாக்குக்கண் (Squint vye).

கண்ணின் பேசிகள் (Muscles) ஒரு பக்கத்தைக் காட்டிலும் மற்றொரு பக்கத்தில் சுருங்குவதாலும், ஈச்வர சிருஷ்டியாலும், பொருள்களைப் பார்க்கும் பொழுது சாய்வாய்ப் பார்த்துப் பழகுவதாலும் வாக்குக் கண் உண்டாகின்றது. இதைத் தென்றரைக் கண் என்றும் சொல்வதுண்டு. ஆலங்கிலத்தி லிதை Squint eye என்பர்.

உ

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள்

சரித்திரச் சுருக்கம்

(ஸ்ரீமாந் வ. சு. செங்கல்வராய பிள்ளை, எம். ஏ.)

பரவையாரிடம் தூது சென்றது.

(395-ம் பக்கம் தொடர்ச்சி.)

நிற்க, ஆரூரது பிரிவை யாற்றாது இங்ஙாள் காறும் வருந்தின பரவையார் ஆரூரர் சங்கிலியாரைத் திருவொற்றியூரில் மணஞ் செய்துகொண்ட விஷயத்தை யறிந்து தாபம் ஒருபாலும் கோபம் ஒருபாலுமாகப் பாபம் வருந்தினர். ஆரூரர் வந்துள்ளாரென அறிந்து அவருடைய பரிசனங்களைத் தமது மாளிகையின் உள்ளே வரக்கூடாதெனப் பரவையார் தடுத்தனர். இச்செய்தியை ஆரூராரிடம் பரிசனங்கள் கூற அவர் இதற்கென் செய்வதென்று யோசித்துக் கற்றுவல்ல பெரியோர்கள் சிலரைத் தூதனுப்பிப் பார்த்தார். என்ன செய்தும் பரவையார் இசைய இல்லை. நடுநிசிக் காலம் வரப் பரிசனங்க ளெல்லாம் தூங்கிவிட்டன. ஆரூரர் மாத்திரம் தூக்கமின்றித் தளர்ந்து மனக் கவலையில் மாழ்கினர். "இறைவா! முன் யான்செய்த வினைக்கு மூல காரணமான இப் பரவையின் புலவியை அகற்றில் யான் உய்வேன்" எனப் பரசிவத்தையே வேண்டத் தோழரின் கஷ்டத்தைச் சகியாதவராய்ச் செஞ்சடைத் தம்பிரான் அவருக்கு எதிரே தோன்றி "உனக்கு என்ன உற்றது?" என, ஆரூரர் தமது குறையை எடுத்துச் சொல்லி, "சுவாமீ! உமது திருவருள் கொண்டே யான் திருவொற்றியூரிற் சங்கிலியை மணந்தேன். அவ்விஷயமெல்லாம் அறிந்த பரவை தம்மிடம் யான் வரின் தாம் இறந்து படுவதாக அச்சுறுத்துகின்றனள். யான் என்ன செய்வேன்! நீர் தலைவன், நான் அடிமை என்பது உண்மையாகில், நீர் எனக்குத் தோழத் தம்பிரான் என்பது மெய்ம்மையாகில் இவ்விரவே போய்ப் பரவையின் கோபத்தைத் தீர்த்துத் தாரும்" என வேண்டி இறைவன் திருவடித் தாமரையில் வீழ்ந்தனர். அடியார்க்கெளிய அண்ணலும் "அப்பா! துன்பம் ஒழி! யான் உனக்கோர் தூதனாகி

இப்போதே பரவைபாற் போகின்றேன்" எனக்கூறிப் புறப்பட்டுப் பூத கணங்களும் முனிவர் குழாமும் யோகியர் கூட்டமும் முன்செல்ல அருகே தேவர்கள் செறிந்துவரச் சிவலோகம்போலப் பொலியும் அத்திருவாரூர் வீதியின் வழியே நள்ளிருளிற் பரவையார் மாளிகைக்குச் சென்று, தம்மோடு வந்த கூட்டத்தைப் புறத்தே நிறுத்தி, தாம் மாத்திரம் தம்மைப் பூசிக்கும் அர்ச்சகர் வடிவம் பூண்டு உட்சென்று மாளிகையின் கதவைத்'தட்டிப் "பரவாய்! திறவாய்" என்றழைத்தனர். மனக்கவலையால் துயிலாது அயர்ந்து கிடந்த பரவையாரும் "இஃதென்! கோயில் அர்ச்சகர் குரல்போல இருக்கின்றது! என்ன இந்நேர வேளையில் வந்தனர்!" என மருண்டு உடனே எழுந்து வந்து கதவைத்திறந்து வாசலில் நின்றவர் தம் திருவடியில் வீழ்ந்து வணங்கி, "சுவாமீ! என்ன வேண்டுவது" என்றார். அதற்கவர் "நங்காய்; நீ மறாது செய்வாயாகில் சொல்லுகிறேன்" என்றார். "நீங்கள் சொல்லுங்கள், கூடுமென்றால் இசைவேன்" என்றனர் பரவையார். அர்ச்சக வேடத்தவரும், "நங்காய்! நம்பி இங்கு வரவிடவேண்டும்" என்றார். பரவையார் "நன்று சொன்னீர். ஒற்றியூரிற் சங்கிலியாற் கட்டுப்பட்டவருக்கு இங்கு எது சார்வு? நீங்கள் இவ்விரவில்வந்து சொல்லுங் காரியம் அழகாயிருக்கின்றது" என்றனர். அதற்கு சுவாமி "நங்காய்! நம்பி செய்த குற்றங்களைப் பொறுத்துக் கோபம் நீங்கவேண்டும் என்றல்லவோ யான் உன்னை வேண்டுவது. ஆதலின் மறுத்தல் அடாது" என்றனர். அதற்குப் பரவையார் "ஐயா! கோயிலர்ச்சகராகிய நீர் இவ்வேலையை மேற்கொண்டு என்னிடம் வந்தது உமது பெருமைக்குத் தருவதன்று. ஒற்றியூரிற் பந்தப்பட்ட அவர் இங்குவருவதற்கு யான் இசையேன். நீரும் போம்" என மறுத்துச் சொன்னார். இதைக் கேட்ட நம்பர் தாம் இன்னார் என்பதை வெளியிடாது தமது தோழரிடத்திற் பின்னும் திருவிளையாடலைக் கருதி வேறு பேசாது அங்ஙனே மீண்டனர். இறைவரது வரவை எதிர்பார்த்துக்கொண்டே நின்றனர் ஆரூரர். "ஐயோ! எமது நாதரையா அறிவிலாப் பேதை தூதனுப்புவேன் எனப் புலம்புவர். நாதர் வேண்டிடில் நங்கை மறுக்குமோ! காரியத்தை நிறைவேற்றிக் கொண்டே மீளுவர் நமது

நாதர் என்ன இன்னும் வரக்காணோமே! என இங்ஙனம் பல எண்ணமிடுவார்! உட்காருவர்! எழுந்திருப்பார்! உலாவுவார்! வழிபார்ப்பார்! பெருமூச்சு விடுவார்! பின்னர்ப் பேரொளியோடு இறைவன் வரக்கண்டு "சுவாமி! இன்று பரவையின் வெகுளியை நீக்கி என்னை என்றும் ஆளும் நாதராய் விளங்குகின்றீர்" எனச்சொல்லி வணங்கினர். அதற்குச் சுவாமி "நம்பி! நாம் போய் உன்விஷயமெல்லாஞ் சொல்லி நாமே வேண்டவும் மறுத்தனள்" என்றனர். இதனைக் கேட்ட ஆரூரர் நடுக்கமுற்று "சுவாமி! நீர் அருளிய திருவாக்குக்கு அடியளாம் பரவையோ உடன்படாள்! யார்க்கும் முன்னவராம் நீர் முன்னின்றால் முடியாத பொருளுளதோ! நஞ்சையுண்டு வானவரைப் புரந்தீர்; முப்புரத்தை எரித்து மூவரை ஆட்கொண்டீர்; காலனை உதைத்து மறைச் சிறுவனைக் காத்தளித்தீர்; என்னைக் கடைக்கண் பார்த்தருளல் தானே உமக்கு இயலாத காரியம்? என் அடிமையை நீர் வேண்டாவிட்டால் என்னை எதுக்கு வலிய ஆட்கொண்டீர்? பரவையிடத்து என்னை இன்று மேவச் செய்யீராகில் உயிரை விடுவேன்" எனக்கூறி இறைவன் பாதத்தில் வீழ்ந்தனர். சுவாமி இதனைக்கண்டு சகியாது நம்பியை அருளுடன் நோக்கி "நாம், இன்னமும் அவளிடம் போய் அவள் சம்மதிக்கும்படி செய்கின்றோம். நீ துயர் நீங்கு" எனக்கூறி மறுபடியுந் தேவர் முனிவர் குழாங்கள் தம்மைச் சூழத் தூது சென்றனர். நிற்க, முன்பு மறுத்துரைத்த பரவையோ அர்ச்சகர் சென்றபின் "அந்தோ! அர்ச்சக வேடம்பூண்டு வந்தவர் நம்மை யாட்கொண்ட அண்ணலாகத்தான் இருக்கவேண்டும். மதியில்லாமல் பாவியேன் மறுத்துரைத்தேனே" எனத் தன்னைத் தானே நொந்து அவர் சென்ற வழிநோக்கி அங்ஙனே வெய்துயிர்த் திருந்தனள். திடீரெனச் சதகோடி சூரியர்கள் உதயமெனப் பேரொளி பரவையாரின் மாளிகையெல்லாம் வீசப் பூத கணங்களும் தேவர் குழாமும் புடைசூழ இறைவனே எதிர் வருவதைக் கண்ட பரவையார் எழுந்து விரைவுடன் சென்று அவர் திருவடியில் வீழ்ந்தனர். சுவாமியும் "நம்பி யனுப்ப மறு முறைவந்தேன்; முன்பு போல மறாதே; நம்பி யிங்கு வர விடு" என்றார். அதைக் கேட்ட பரவையார் மிகவும் அஞ்சிய உள்ளத்தராய்க் கை

கூப்பி நின்று "சுவாமியா அர்ச்சக வேடத்தொடு முன்பு எழுந்தருளினது! என் தவப்பயன் இருந்தவா றென்னே!" எனக்கூறிக் கண்களில் நீர்பெருகத் தொழுது "செந்தாமரை யன்ன திருவடிகள் நோவ அடியவர்க் கெளியராய் இரவில் அங்கும் இங்கும் அந்தோ நீங்களே உழலுவீர்க ளென்றால் அடியேன் தங்கள் ஆக்ஞைக்கு இசையாது வேறென் செய்வேன்" எனப் பணிவுடன் கூறினர். சுவாமியும் "நன்று கூறினாய்" என மகிழ்ந்து அங்கிருந்து மீண்டனர். இவர் வரவை எதிர்பார்த்திருந்த ஆரூரர் இவரைக் கண்டதும் இவரது திருவடியில் வீழ்ந்து "சுவாமீ! என்ன சமாசாரங் கொண்டுவந்தீர்கள்" என மனக் கலக்கத்துடன் வினவினர். சுவாமியும் "நம்பி! அவள் சீற்றம் தணிவித்தோம்! நீ இனி அவளிடம் போகலாம்" என்றார். இதைக்கேட்ட ஆரூரர் பெரிதும் மகிழ்ந்து இனி எனக்கு ஒரு குறையும் இல்லை என மீட்டும் சுவாமியின் திருவடியில் வீழ்ந்து வணங்கினர். சுவாமியும், "நன்று! நீ அவளிடம் போ" எனக் கூறித் தாம் திருக்கோயிலுள் மறைந்தனர். பின்னர், நம்பி பரவை மாளிகைக்குச் செல்ல அவரும் மனமகிழ்ச்சியுடன் எதிர் கொள்ள இருவரும் ஈசன் கருணைத் திறத்தைப்பற்றிப் பேசிச் சுகமாக வாழ்ந்து வந்தனர்.

(இன்னும் வரும்.)

லண்டனிலுள்ள ஒரு நாடகசாலையில் சில துஷ்டர்கள் வந்து ஆட்டம் நடக்கும்போது உரக்க இருமி, நடிப்பவர்களின் பாடல்களையும் வசனங்களையும் ஜனங்கள் கேட்கக்கூடாத வண்ணமாய்ச் செய்துவந்தார்கள். இதனால் நாடகக்காரர்கள் இவ்விதம் இருமுபவர்களின் மீதெல்லாம் கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்தார்கள். முடிவாக, நாடகம் பார்க்க வந்திருப்பவர்கள் தாம் இருமாமலிருக்க முடியாத பக்ஷத்தில் தனித்தனியே இருமலாமென்றும் ஆனால் எல்லோரும் முன்னதாகக் கூடிப்பேசி இருமுவதென்று ஏற்பாடு செய்து அவ்விதஞ் செய்வார்களாகில் தண்டனைக்குள்ளாவார்களென்றும் கோர்ட்டில் தீர்ப்புச் செய்யப்பட்டது!

தீண்டாமையைப் போக்கும் வழி



பண்டித மதன மோகன மாளவ்யா.

மார்ச்சுமாதம் 23-ந் தேதியன்று லாகூரில் கூடிய பஞ்சாப் ஹிந்துக்களது மகாநாட்டில் அக்கிராசனம் வகித்த பண்டித மாளவ்யா தமது பிரசங்கத்தின் பிற் பகுதியில் கூறியதாவது:— மகாத்மா காந்தியைப் போன்ற மனிதர்கள் இம் மண்ணுலகில் 100 வருஷத்திற்கு ஒரு முறை கூடத் தோன்றுவது அரிதாயிருக்கின்றது. (மகாத்மா காந்திக்கு ஜேய் என்ற கோஷம்) மகாத்மாஜீ தமது தேசத்தார் செய்யவேண்டுமென்று நான்கு விஷயங்களைக் குறிப்பிட் டுள்ளார். அவற்றில் ஒன்று என்ன வெனில் ஹிந்துக்கள் தீண்டத் தகாதவரெனப் படுவோரை முன்னுக்குக் கொண்டுவர வேண்டு மென்பதாகும். அவர்களுக்காக மற்றவர்கள் விசாரப்பட வேண்டிய அவசியமில்லை. கடவுள் அருளிருந்தால் இன்னும் 12 மாத காலத்திற்குள் அவர்களை யெல்லாம் நாமே கவனித்துக் கொள்ளக்

கூடும். (பெருத்த கரகோஷம்) ஹிந்துக்கள் மாலையில் கோயிலுக்கு சுவாமி தெரிசனத்திற்காகச் செல்லும் பொழுது தீண்டாதவரெனப் படுகின்றவர்களையும் சுவாமி தெரிசனம் செய்ய அனுமதிக்கும் படி அவர்களைக் கேட்டுக் கொள்ளுகின்றேன். (கரகோஷம்) நான் கிணற்றிலிருந்து நீர் இறைத்துக் கொள்ள அவர்களுக்குள்ள உரிமையைப் பற்றி எதுவும் கூறவில்லை என்று ஒருவர் கூறுகின்றார். கிணறு விஷயத்தில் எவ்விதமான பாகுபாடும் செய்யக் கூடாதென்று நமது சாஸ்திரங்கள் கூறுகின்றன. இதனை ஆதாரமாகக் கொண்டு தான் நான் இவ்விஷயத்தைப் பற்றி பேசுகின்றேன். ஒருவன் பொது ஜனங்களுக்காக ஒரு கிணற்றைக் கட்டி வைக்கும் பொழுது அவன் ஒரு மந்திரங் கூறவேண்டியிருக்கின்றது. அதில் 'சர்வ பூதாபயா' என்று ஒரு பத மடங்கி யிருக்கின்றது. 'எல்லா உயிர்களுக்கும்' என்பதுதான் அதன் பொருளாகும். ஆதலால் ஒரு பொதுக் கிணற்றிலிருந்து நீர் முகந்துகொள்ளக் கூடாதென்று எவரையும் தடுக்க அக்கிணற்றைக் கட்டி வைத்தவரின் குடும்பத்தினர்க்கும் அதிகாரம் கிடையாது. தனிப்பட்ட நபர்களுக்குச் சொந்தமான கிணறுக இருந்தால் அப்பொழுது அதிலிருக்கும் நீரிறைத்துக் கொள்ள அனுமதி வேண்டும். தீண்டத் தகாதவரெனப்படுவோர் நீங்கலாக உள்ள ஜாதியாரின் குழந்தைகள் அசுத்தமாகப் பள்ளிக் கூடங்களுக்கு வர அனுமதிக்கப் படுகின்றனர். இப்படி இருக்கும் பொழுது தீண்டத் தகாதவ ரெனப்படுவோருடைய குழந்தைகளை ஏன் பள்ளிக்கூடத்திற்கு வர அனுமதி யளிக்கக் கூடாதென்று கேட்கின்றேன்.

சுவாமி தரிசனம்

பாபகரமான காரியங்களைச் செய்யும் பிராமணர்களை கோயிலுக்குள் செல்லத் தடைசெய்யாம லிருக்கும் பொழுது அவர்களைவிடக் குறைவாகப் பாபமான காரியங்களைச் செய்தவர்களாயும் கடவுளிடம் அதிக பக்தி கொண்டவர்களாயும் இருக்கின்ற தீண்டத் தகாதவ ரெனப்படுவோரை, ஏன் சுவாமி தரிசனம் செய்யவொட்டாது தடுக்க வேண்டும். (இச் சந்தர்பத்தில் பண்டிதர் கண்ணீர் வடித்தார்.) நீங்கள் அவர்களிடம் அன்பாக நடந்துகொள்ள வேண்டுமென்று நான் உங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகின்றேன். தாழ்ந்த வகுப்பினர் கூட தர்மத்தின் மூலம் உயர்வடைய உரிமை பெற்றிருக்கின்றனர். வேத வியாசர் ஒரு பிராமணனைத் தாழ்ந்த வகுப்பினைச் சேர்ந்த ஒருவருடன் சாஸ்திரங்களைப் படிக்க அனுப்பியுள்ளார்.

பால்ய விவாகம்

ஹிந்து மகா சபையானது சிறுவர்களுக்கு 18 வயதிற்கு முன்பும் சிறுமிகளுக்கு 12 வயதிற்கு முன்பும் கல்யாணம் செய்யக் கூடாதென்று தீர்மானஞ் செய்திருக்கின்றது. இது முறையே.

25-ம் 16-ம் ஆக இருந்தால் உசிதமாக இருக்குமென்று நான் அபிப்பிராயப் படுகின்றேன். ஹிந்து தர்மத்தின் கீர்த்தி மீணடும் ஏற்படவேண்டுமென்று விரும்பினால் உங்களுடைய குமாரர் எவரையும் 25 வயதாவதற்கு முன்பு மணஞ்செய்துகொள்ள அனுமதிக்காதீர்கள். 18 வயதுக் குட்பட்ட சிறுவன் கல்யாணஞ் செய்துகொள்வதானது பாவகரமான செயலாகும். தினந்தோறும் தேகப் பயிற்சி செய்வதையும் பிரம்மசர்ய விரதத்தினைக் காத்தலையும் ஒவ்வொருவரும் தங்களுடைய கருமமாகக் கருதவேண்டும். தன்னுடைய மனைவி மக்களைக் காக்க சக்தியற்றவர் எவருமே இவ்வுலகில் ஜனிக்கக் கூடாதென்று நான் நினைக்கிறேன். நான் முஸ்லீம்களுக்குக் கெடுதி நினைக்கவில்லை என்றும் நன்மையையே நாடுகின்றேன் என்றும் மனப்பூர்வமாக எடுத்துரைக்கின்றேன். எல்லா சமூகத்தவரும் பரஸ்பர அன்புடனும் நல்லெண்ணத்துடனும் நடக்கவேண்டுமென்றும் அதே சமயத்தில் சுய மதிப்புடன் நடக்க வேண்டுமென்றும் நான் விரும்புகின்றேன்.

"டிரைபூன்"

துஷ்டக் குழந்தைகள்.

ஆத்மதத்துவநூல் சாஸ்திரியாகிய டாக்டர் கிறில்பற்ட் என்பவர் பிறிட்டிஷ் அஸோஸியேஷன் ஆதரவில் துஷ்டக் குழந்தைகளைப்பற்றி செய்த பிரசங்கத்தில் குற்றம் செய்யும் குணம் பரம்பரையாகப் பரவி வருகிறதென்னும் கொள்கையைச் சாதிக்கக் கூடவில்லையெனவும், இதை தாம் அனுபோகத்தைக் கொண்டு அறிந்த விஷயமெனவும், சில சமயங்களில் பசியால் வருந்துகையில் சிறுவர்கள் களவு செய்யத் தூண்டப்படுகிறார்களென்றும், சிறுமிகள் நல்ல பலகாரங்கள் உண்ணவும், படக்காட்சிசாலை செல்லவுமே களவு செய்கிறார்களெனவும், இத்தொழில் செய்பவர்களுள் 100க்கு 40பேர் தாய்தந்தையர்கள் இழந்தவர்களாகவும் புருடரால் விலக்கப்பட்டவர்களாகவும், இருப்பதாகவும் சரியான பிராயமடைந்தவர்கள் எவ்வாறு மதுபானம் கொள்ளும் பழக்கத்தையடைகிறார்களோ அவ்வாறே குழந்தைகளுக்குத் திருடும் அப்பியாசம் உண்டாகின்றனவெனவும், வீட்டிலுள்ள பெரியோர்கள் பிள்ளைகளை ஒழுங்காக நடத்தாததும் வெளியில் நடக்கும் தீர்ப்பழக்கமும், இதற்கு முக்கிய காரணமெனவும் விளக்கினர்.

மனோன்மணீய வசனம்

ஸ்ரீமாந் S. வையாபுரிப் பிள்ளை, B.A., B.L., எழுதியது.

அதிகாரம் IV : மனோன்மணியின் கனவு

(242-ம் பக்கம் தொடர்ச்சி.)

அரசனது உறுதிமொழியினால் சகடர் ஒருவாறு சமாதான மெய்தினர். ஜீவகன் தனது வாக்கினின்றும் ஒருபொழுதும் பிறழ மாட்டானென்ற பூர்ண விசுவாசத்துடன் விடைபெற்றுப் போயினர்.

இவ்வாறிருக்கும்பொழுது மனோன்மணியின் செவிலி அந்தப்புரத்திலிருந்து வந்து சேர்ந்தனள். வந்தவளுடைய பரபரப்பினாலும் அவளது முகக்குறியினாலும் ஏதோ விசேஷம் நிகழ்ந்திருக்க வேண்டுமென்று கருதி அரசன் மிக்க ஆவலோடு வினாவினான். இரவுமுதல் மனோன்மணி ஜ்வரத்தால் வருந்துவதும் முதன்முதலில் அவள் புலம்பியதும் எல்லாம் செவிலி அறிவித்தாள். தவஞ்செய்திருப்பதுவே தனது வாழ்வின் முதல் நோக்கம் என்று வற்புறுத்திக் கூறிக்கொண் டிருந்தவளுக்கு இன்று இவ்வாறெல்லாம் எப்படி விளைந்ததென்று புலம்பிக் கையோடு கையை நெரித்து வருந்தினாள்.

ஜீவகன் மிகவும் திக்கித்து இன்ன செய்வதென்று உணர மாட்டாது ஸ்தம்பாகாரமாய் நின்றுவிட்டான். இதுதான் தக்க சமயமென்று நினைத்துக் குடிலன் கோள்மூட்டத் தொடங்கினான்.

குடிலன்.—தவம்செய்ய ஆசையென்று நமது அம்மை சொல்லியதைப் பார்த்தால் இவ்விளைவு முனிவருடைய மந்திரத்தின் பயனோ என்று சந்தேகிக்க இடமுண்டாகிறது. நேற்று அவரும் நமது அம்மையும் என்ன பேசிக்கொண் டிருந்தார்களோ? தெரியவில்லை.

ஜீவகன்.—அவ்வித சந்தேகத்திற்குக் காரண மொன்றுமில்லை. முனிவர் ஒரு பேச்சும் பேசவில்லை. 'மணி'யைக் கண்டதும் அவர்க்குக் கண்ணீர் வந்துவிட்டது. நமது செல்வமும் அழுதாள். இவ்வளவே நடந்தது. கடைசியில், ஆசீர்வாதம் செய்துவிட்டு, ஏதோ யந்திரம் எழுதி வைப்பதற்கு ஓர் அறையும் திறவுகோலும் வேண்டினர். இதைத்தவிர வேறொன்றும் இல்லை. இக்கொடிய நோய்க்குக் காரணம் தெரியவில்லையே. என்றுகூறிச் சிந்தாமக்னனாய் நின்றான். சில நிமிஷம் கழிந்து மனோன்மணி யிருக்கும் அந்தப்புரத்திற்குச் சென்றனன். குடிலனும் அரசனது அறிவிலாமையை யெண்ணி மகிழ்ந்து தனக்குச் சுயலாப சித்தி பெறுதற்குரிய மார்க்கத்தை ஆலோசித்துத் தன் மாளிகைக்குப் புறப்பட்டான்.

(தொடரும்)

கரும்பு சாகுபடி

சமீபத்தில் இராஜாங்க சட்டசபையில் ஹானரபில் ஸர்தார் ஜோகேந்திரஸிங் என்பவர் சர்க்கரையிலிருந்து வசூலிக்கப்படும் வரியில் சிலபாகத்தை சர்க்கரைத் தொழிற் சாலையை ஏற்படுத்தவும், கரும்பு சாகுபடியை அதிகரிக்கவும் உபயோகிக்க வேண்டுமென்று ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். இதை அரசாங்கத்தார் எதிர்த்து, சில தொகையை இதன் ஆராய்ச்சிக்கு உபயோகிக்குமாறு திருத்தச் செய்து அங்கீகரித்துக் கொண்டார்கள். இதைப்பற்றி அரசாங்கத்தார் கூறிய அபிப்பிராயத்தை நாம் கண்டிக்காமலிருக்க முடியவில்லை. சர்க்கரை வரி (இம்பீரியல்) இந்தியா அரசாங்கத்தைச் சேர்ந்ததாம். கரும்பு சாகுபடி விருத்தியும், சர்க்கரைத் தொழில் அபிவிருத்தியும் மாகாண அரசாங்கங்களைப் பற்றியதாம். ஆதலால் இந்தியா அரசாங்கத்தின் வருவாயிலிருந்து மாகாணச்செலவு துறைக்குப்பணம் செலவிடக் கூடாதாம். இதனின்றும் இந்தியா அரசாங்கத்தார் இந்தியத்தொழில் அபிவிருத்திக்கு எவ்வித உதவியும் செய்யக் கடமைப் பட்டவர்க ளல்லவென்று கருதுவதாகக் கொள்ள வேண்டியிருக்கிறது.

கரும்பு சாகுபடி முதல் முதல் ஏற்பட்டது இந்தியாவில் தான். உலகத்தில் மற்றெல்லா தேசங்களைக் காட்டிலும் இந்தியாவில் தான் கரும்பு அதிகமாக சாகுபடி செய்யப்படுகின்றது. அப்படியிருந்தும், இந்தியாவுக்கு வேண்டிய சர்க்கரையை நாம் அந்நிய நாட்டிலிருந்து எதிர்பார்க்க வேண்டியிருக்கின்றது. உலகத்தில் அமெரிக்கா யுனைடெட் ஸ்டேட்ஸுக்கு அடுத்தபடியாக இந்தியாவில்தான் சர்க்கரை அதிகம் செல்வாகின்றது. வருஷம் ஒன்றிற்கு சராசரியில் 60,000 டன் சர்க்கரை அயல்நாடுகளிலிருந்து இந்தியாவுக்கு வந்து கொண்டிருக்கின்றது. உலகத்தில் சாகுபடியாகும் கரும்பு மொத்தத்தில் பாதி சாகுபடி இந்தியாவில் நடந்துவந்துங்கூட உலகத்தில் செய்யப்படும் சர்க்கரையில் நாலில் ஒருபங்கே இந்தியாவில் செய்யப்படுகின்றது. இதற்குக் காரணம் யாது?

கரும்பு சாகுபடிக்குப் போதுமான அளவு தண்ணீர்பாய்ச்சும் வசதிகளில்லை. அதிக சாறு கிடைக்கக்கூடிய நல்ல ஜாதிக்கரும்புகளைப் பயிரிடத்தக்க சாதனங்கள் கிடையா. கரும்பைத் துளைக்கும் பூச்சிகளினாலும், கரும்பு நோயினாலும் அதன் சாகுபடி கெட்டுப்போய் வருகின்றது. கருப்பஞ்சாற்றின் சத்து வரவரக் குறைந்துகொண்டே வருவதாய்த் தெரியவருகின்றது. வட இந்தியாவில் ஸாபூர் என்ற இடத்திலுள்ள விவசாய ரசாயன ஆராய்ச்சி சாலைக்கு ராஞ்சி கரும்புப் பண்ணையிலிருந்து கருப்பஞ்சாறு எடுத்து ஆராய்ச்சிக்கு அனுப்

பப்பட்டதில் 1920-ம் வருஷத்திலிருந்து கருப்பஞ்சாற்றின் சர்க்கரைச் சத்துக்கள் குறைந்துகொண்டே வருவதாக அவர்கள் ஆராய்ச்சிசெய்து கண்டுபிடித் திருக்கின்றார்கள்? கருப்பஞ்சாற்றைக் கரும்பிலிருந்தும் பிழிந்தெடுக்கப்பட்ட இயந்திரங்கள் இந்தியாவில் உபயோகிக்கப் படுவதில்லை.

ஜாதிக் கரும்புகளை நூதன முறைப்படி பயிரிட்டு வந்தால் ஏக்ரா ஒன்றுக்கு 700 மணங்குக்குக் குறையாமல் சர்க்கரை கிடைத்து வருமென்று மிஸ்டர் மெக்கன்னு கூறியிருக்கிறார். இப்பொழுது ஏகராவுக்கு 308 மணங்கு சர்க்கரைதான் கிடைக்கின்றது. பம்பாயிலுள்ள மஞ்சேரா என்ற கரும்புத் தொழிற் சாலையிலே 1917-ம்வருடு நூதன முறைப்படி பயிரிட்ட நல்ல ஜாதிக் கரும்புகளைக்கொண்டு கருப்பஞ்சாறு எடுத்து சர்க்கரையாகக் காய்ச்சிப் பரீக்ஷை பார்த்தார்கள். 50 டன் கரும்பிலிருந்து 13,262 பவுண்டு சர்க்கரை காய்ச்சி எடுத்தார்களாம். அதனின்றும் ரூ. 954 கிடைத்ததாம். இதில் சகல செலவும் போக ரூ. 494 லாபம் கிடைத்ததாம். இதைக்கொண்டு நூதன முறைப்படி நல்ல ஜாதிக் கரும்பைப் பயிர் செய்தால் இப்பொழுது கரும்பு சாகுபடியில் கிடைக்கும் வருமானத்தைவிட 75 கோடி ரூபா இந்தியாவில் அதிகமாகக் கிடைக்குமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

சமீபத்தில் பெங்களூரில் நடந்த விவசாய போர்டு கூட்டத்தில் மிஸ்டர் ஆனஸ்டெட், மிஸ்டர் நாயிஸ் இவர்கள் கோயம்புத்தூரிலுள்ள அரசாங்க கரும்புப் பண்ணையை இந்தியாவுக்கே மாதிரிப் பண்ணையாகக் கொண்டு, நானாவித உயர்ந்த ஜாதிக் கரும்புகளை அங்கு பயிரிடச் செய்யவேண்டுமென்றும், கரும்பைத் துளைத்துக் கெடுக்கும் பூச்சிகளை அழித்து கரும்புக்கு வரும் நோயைத் தடுக்கும் வழியில் தக்க ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்றும் சில தீர்மானங்கள் நிறைவேற்றினர். இவ்வேலைகளைச் செய்வதற்சென்று சென்னை விவசாய இலாகாவை எதிர்பார்த்திருந்தால் எக்காலத்திலும் இக்காரியங்கள் சரிவர நிறைவேற மாட்டா. இவ்விஷயமாகச் செலவிடும் தொகை டெல்லி நிர்மாணம், போன்ற மாடமாளிகைகள் அமைப்பதற்குச் செலவிடப்படும் தொகையைப்போல வீண் செலவானவைகளல்ல வென்றும், இத்துறையில் எவ்வளவு தொகை செலவிட்டாலும் அதற்குத் தக்க வருமானம் கிடைக்காமற் போகாது என்றும் நாம் அரசாங்கத்திற்கு அறிவித்துக் கொள்ளுகிறோம்.

(கிராமவாழ்க்கை.)

௨

ராஜ ராஜேச்வரி

ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருப்புகழ் திருவகுப்பு ஆதிய பாற்கடலுள் எத்துணை அமுதமன்ன பொருள்கள் கிடைக்கின்றன என்பது பார்க்குந்தோறும் அற்புதமாக விளங்குகின்றது. உதாரணமாக, ராஜராஜேச்வரியாம் பார்வதி தேவியின் திருநாமங்களை எவ்வெவ்வாறு அடுக்கடுக்காக சந்தம் நிறைய எடுத்தோதி அத்தேவியைத் துதிக்கின்றனர் என்பதை ஈண்டெடுத்துத் தொகுத்துக் காட்டுவோம்.

அமலை, நிமலை, பவதி, யுவதி
அபிராமி, கலியாணி, சுகவாரி, பரைநாரி
கற்பு சிவகாமி, நித்ய கலி யாணி
மாதா புராரி, ஆகாச ரூபி
பரிபுர சரணி, திரிபுர தகனி
பகவதி, பயிரவி, திரிபுரை, பதிவ்ருதை
நிருமலை, வலைமகள், குணவதி, பர்சிவை

யோகினி, டாகினி, காரணி, நாரணி,

ஆதிசோதி, ஆலவுணி, வேதஞானி, மோடிவாமி
ஆயிதேவி, வாலையோகி, காளிமோகி, நீலிசூலி
ஆலகந்தரி, மாரிபிங்கலை, மோகிமங்கலை, ஆதியம்பிகை

ஈச ரோடுற வுற்றவள்
ஈறி லாத மலைக்கொடி
யோகி ஞானி பரப்ரமி
தாய் மனோமணி சற்குணி

காளி திரிபுரை யந்தரி சுந்தரி
ஆதி மலைமகள் மங்கலை பிங்கலை

குடிலை யோகினி சண்டினி குண்டலி
குறைவி லாளுமை மந்தரி யந்தரி

காளவிட மூணி மாதங்கி வேதஞ்சொல்
பேதைநெடு நீலி சாமுண்டி வாழ்வஞ்சி

வயிரவி நீலி மோடி
குலிச குடாரி யாயி

நீல சுந்தரி கோமளி யாமளி
நாட கம்பயில் நாரணி பூரணி

சடில தரியநு பவையுமை திரிபுரை
சகல புவனமு முதலிய பதிவ்ருதை

மாலோ னுக்கிளை யாள்மா பத்தினி
யம்பிகை சங்கரி மோக சுந்தரி

ராஜ ராஜேஸ்வரி

ஆகமத்தி—பல
காரணத்தி—எனே
யீணசத்தி—அரி
ஆசனத்தி.

கவுரிசெம் பொற்பட் டுத்தரி யப்பெண்
பழையஅண் டத்தைப் பெற்ற மடப்பெண்
குலசயி லத்துப் பிறந்த பெண்கொடி
குணதரி சக்ரப் ப்ரசண்ட சங்கரி
கணபண ரத்னப் புயங்க கங்கணி
கலபவி சித்ரச் சிகண்டி சுந்தரி
கடிய விடத்தைப் பொதிந்த கந்தரி
கருணே விழிக்கற் பகந்தி கம்பரி
கருதிய பத்தர்க் கிரங்கு மம்பிகை
சுருதி துதிக்கப் படுந்த்ரி யம்பகி
முது மறையின் பேச்சி நூலிடைச்சி
பனி மதியம் பூத்த தாழ்சடைச்சி
படிகொ டறங் காத்தமா பரைச்சி
அடு புலியின் தோற்படா முடைச்சி
சமர முகங் காட்டு மால் விடைச்சி
அகிலமு முண்டார்க்கு நேரிளேச்சி

வனசை மதுபதி யமலே
விசயை திரிபுரை புநிதை
வநிதை யபிநவை யநகை
வேதாந்த பரம்பரை
நூல்போன்ற மருங்கினள்
ஏகாம்பரை யிந்திரை
மோகாங்க சுமங்கலே
ஏகாந்த சுகந்தரு
பாசாங்குச சுந்தரி

அமலே யாரியை யந்தரி சுந்தரி
இமய மாமயி லம்பைத்ரி யம்பகி
அச்சுத சகோதரி யனேத்து வேதத்தலேவி
அம்பொற் குண்டலப் பேதை சாம்பவி
விம்பக் கிஞ்சுகப் பூவை பூங்கொடி
அக்ஷர லக்ஷஜ பத்தர்க்ர மத்திடு
சக்ரத லத்தித்ரி யக்ஷிச டக்ஷரி
அநுபவை யம்பிகை யனுதிதை யம்பைத்ரி
யம்பகி யாசாம்பரை பாசாங்குசை
அரகை ய சஞ்சலே யதிகுண சுந்தரி
யந்தரி காலாந்தகி மேலாந்திரு

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
210337
சென்னை 600 008

முரசொலி

நமது புதிய கவர்னர் தம்பதிகளுக்குத் தமிழகத்தாரின் பிரதிநிதியாக நல்வரவு கூறுகின்றோம். கனம் தங்கிய கவர்ன ரவர்களின் ஆட்சியில் தென்னாட்டார் பல புது நலங்கள்பெற்று இன்புறுவராக!

***

புனராலோசனைக்காக சென்னைச் சட்டசபைக்கு அனுப்பப்பட்டிருந்த இந்துமத தருமசொத்து பரிபாலன மசோதா, கனம் கவர்னரவர்கள் விரும்பிய திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டு, கனம் கவர்னரவர்களின் அங்கீகாரமும் பெற்றுவிட்டது. இனி மாட்சிமைதங்கிய ராஜப்பிரதிநிதியின் சம்மதியும் பெறத் தடையில்லையென்று நம்பலாம். தென்னாட்டுத் தரும சொத்துக்களின் பாதுகாப்புக்கு இதுபோன்ற ஒரு மசோதா மிகவும் தேவையானதென்று பல பிராமணப் பிரமுகர்களும், பிராமணரல்லாத தலைவர்களும் வெகு காலமாகக் கிளர்ச்சி செய்து கொண்டிருந்தனர். எனினும் பிராமண ரல்லாதார் ஆதிக்கம் பெற்ற புதுச் சட்டசபையில் பிராமணரல்லாத மந்திரியால் இந்த மசோதா ஹாஜர்ப் படுத்தப்பட்ட பொழுது, எதிர் கட்சியாரும் இம்மசோதாவால் பாதிக்கப்படும் மற்றையோரும் இம் மசோதாவைத் தொலைக்கப் பெரும் கிளர்ச்சி செய்தனர். இம்மசோதாவை மறுப்போரும், இதுபோன்ற ஒரு மசோதா தேவையானதென்றே கூறுகின்றனர். இம்மசோதாவிலும் பலகுற்றங் குறைகள் இருத்தல்கூடும். அவைகள் காலக்கிரமத்தில் சீர்திருத்தம் பெறலாம். மசோதா நிறைவேற்றப்பட்டுப் போயினமையின் இனி யாவரும் ஒத்துழைத்து தருமசொத்துக்கள் செவ்வனே பரிபாலிக்கப் படுமாறு செய்வராக.

***

வைக்கம் ஸத்தியாக்ரஹப் போர் வலுவடைந்து வருவது மகிழத் தக்கதே. தீண்டாமை ஒழிந்தாலன்றி நாட்டில் ஐக்கிய மேற்படாது; இந்தியாவின் அடிமைத்தனம் நீங்காது; இந்திய ஜன ஸமூஹம் உலகப் போராட்டத்தில் முன்னணியில் ஏறாது. ஆகவே இத்தீண்டாமையின் தகனத்துக்கு ஏமத்தீ எழுப்பிய வைக்கம் ஸத்யாக்ரஹிகளை நாம் மனமார வாழ்த்துகின்றோம்.

***

இந்த சந்தர்ப்பத்தில் ஒருவிஷயத்தைத் தமிழகத்தார் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறோம். திருவதாங்கூர் ஸமஸ்தானத்தில் நிலைபெற்றிருக்கும் தீண்டாமைப் பைத்தியத்துக்கு, திருவிதாங்கூர் துரைத்தனத்தாரையும் மன்னர் பெருமானையும், பலர் அறியாமையினால் குறை கூறுகின்றனர். ஒடுக்கப்பட்ட ஜாதியார்

விஷயத்தில் தற்காலத்திய அரசர் பெருமான் மிகவும் அனுதாப முடையவர். புலேயர், சாம்பவர், குறவர் முதலிய ஜாதியாருக்குக் குடியிருப்பு ஸ்தலம் இலவசமாய் அளிக்கும்படி ஏற்பாடு செய்திருக் கிறார். ஒடுக்கப்பட்ட ஜாதியாருக்கெல்லாம் ஆலயங்களை அடுத்த பள்ளிக்கூடங்களைத் தவிர மற்றப் பள்ளிக்கூடங்க ளனைத்திலும் பிரவேசனமும் அளித்துள்ளார். இம்மட்டோ! இவர்களிடம் பாதிப் பீசே வசூல் செய்யவும் ஏற்பாடுண்டு. இவ்வாறாக ஏழைகளுக்கு வேண்டிய ஏந்தல்களெல்லாம் செய்துவரும் ஒரு உத்தமதேச மன்னரை தீண்டாமைக்கு அநுகூலம் செய்கிறார் என்று கூறு தல் மடமையே. ஆயின் திரைத்தனத்தார் வைக்கம் ஸத்யாக்ர ஹிகளைத் தடைசெய்தற்கு காரணம் என்னவெனில் கூறுகின்றோம். தென்னாட்டைப் போலவே திருவிதாங்கூர் ஸமஸ்தானமும் பிரா மண மதத்தின் படுவாயில் விழுந்து கரையேற வழியில்லாது தத்த ளிக்கின்றது. ஸத்யாக்ரஹிகளைத் துரைத்தனத்தார் தடைசெய்யத் தவறின் பிராமணர் தேவாலயங்களை யெல்லாம் பூட்டிவிடுவர். உயர்ந்த ஜாதி ஹிந்துக்களும் பிராமணர்களும் சேர்ந்து பெரிய கல வரங்கள் உண்டுபண்ணுவர். இதற்கஞ்சியே துரைத்தனத்தார் தடை செய்கின்றனர்.

***

காந்தியடிகள் கூறியவாறு திருவதாங்கூரிலுள்ள பிராமணர்க ளும் மற்றும் உயர்ந்த ஜாதி ஹிந்துக்களும் சேர்ந்து, தீண்டாமையை ஒழிக்கவேண்டுமென்றும் வைக்கம் ஸத்யாக்ரஹிகளைத் தடைசெய் தல் தவறென்றும் ஒரு மஹஸர் தயார்செய்து ஏன் மன்னர் பெருமா னுக்கு அனுப்பக் கூடாது? நாட்டாரெல்லாம் தீண்டாமையை யொழிக்க அநுகூலா பிப்பிராயமுடையவரா யிருந்தால் மன்னர் பெருமான் தடைசெய்யார்.

***

திருநெல்வேலி நகர பரிபாலன சபை ஓவர்ஸீயர் சந்நியாசிக் கிராமம் தெருவைப் பழுது பார்ப்பதற்கு முன் வழக்கப்படி பள்ளர்க் கூலிகளைக் கொண்டு சென்றாராம். உடனே அவ்வூர்ப் பிராம ணர்கள் திரண்டெழுந்து பள்ளர்களை, தமது தெருவில் பிரவே சிக்க லாகாதென்று தடுத்துவிட்டது மன்றி, தங்கள் தெருவில் தாழ்ந்த ஜாதியாரை வேலைக் கனுப்பக் கூடாதென்றும், உயர்ந்த ஜாதி ஹிந்துக்களே வேலை செய்ய வேண்டுமென்றும், அதற்கு இடமில்லை யாயின் தங்கள் தெருவைப் பழுதுபார்க்க வேண்டாமென்றும் 42 பேர் சேர்ந்து கையொப்பமிட்டு ஒரு விண்ணப்பமும் நகர பரிபாலன சபைக்கு அனுப்பி யிருக்கிறார்களாம். இவ்விஷயம் நகர பரி பாலன சபையில் ஆலோசனைக்கு வந்தபொழுது அப் பிராமணர் களுக்கு அநுகூலமாகப் பல அங்கத்தினர்களும் பேசினார்களாம். விஷயம் இன்னும் முடிவு பெறவு மில்லை.

சென்னை சட்டசபை மெம்பர் ஸ்ரீமான் வீரையன் (ஆதி திரா விடர்) அவர்கள் சேலம் ஜில்லா கமலாபுரம் அக்ரகாரத்தின் மத்தியி லிருக்கும் தபாலாபீஸில் தம் கடிதங்களைப் போடவும், அதே இடத்திலிருக்கும் பாடசாலையைப் பார்வையிடவும் சென்ற பொழுது அவ்வூர் மணியக்காரனை ரங்கய்யர் என்பவர் அவரை வழிமறித்துத் துரத்தி விட்டாராம்.

***

மேலே கூறிய இவ்விரண்டு ஸம்பவங்களுக்கும் எந்தத் துரைத் தனத்தைக் குறை கூறுவது? திருவிதாங்கூரில் தீண்டாமை நிலை பெற்றிருப்பதற்கு பிராமணமதமே காரணமென்று நாம் கூறிய தற்கு இவ்விரண்டு சம்பவங்களும் தக்க சான்றுகள் அல்லவா? வைக்கம் தீண்டாமையைப்பற்றிச் சென்னையில் பிரமாதமான 'பத்திரிகைக் கிளர்ச்சி' நடைபெறுகின்றது. ஆனால் சென்னைப் பத்திரிகைகளில் (திராவிடன், ஜஸ்டிஸ், லோகோபகாரி நீங்கலாக) ஒன்றேனும் இவ் விஷயங்களைப் பற்றி ஒரு சிறு குறிப்பேனும் எழுதிய தாகக் காணப்படவில்லை. இந் நிகழ்ச்சிகள் நடைபெற்ற பிறகு, பங்குனி 29 உயன்று தேசிய வாரத்தின் 5-வது நாளில் திருவல்லிக் கேணி கடற்கரையில் ஸ்ரீமான் சக்கரை செட்டியார் தலைமையில் ஒரு கூட்டம் கூடிற்று. சென்னையிலுள்ள பிரமுகர்களெல்லாம் தீண் டாமையை நீக்கும் விஷயமாக வெகு ஆவேசத்தோடு பேசினார்கள். ஆனால் சங்யாசிக்ராமம் கமலாபுரம் ஸம்பவங்களைப்பற்றி ஒருவ ரேனும் பேசவில்லை. காரணம் யாது? வாசகர்களே நீங்கள்தான் கூறவேண்டும்.

***

காந்தி யடிகள் காங்கிரஸ் ரங்கத்தில் பிரவேசிக்கும்வரை தீண்டாமை போன்ற ஸமுதாய விஷயங்களை காங்கிரஸ்காரர் புறக் கணித்தே வந்தார்கள். ஏனெனில் அக்காலத்திய காங்கிரஸ் தலைவர் களில் பலர் ஸமுதாய விஷயங்களில் மிகவும் பிற்போக்கான அபிப் பிராய முடையவர்கள். புண்யாத்மா காந்தியடிகள் தீண்டா மையை நீக்கும் மஹத்தான கருமத்தை காங்கிரஸோடு இணைத்து காங்கிரசுக்குப் புத்துயிரளித்தனர். சமுதாய விஷயங்களில் பிற் போக்கான அபிப்பிராயமுடைய கோழை நெஞ்சர்களுக்கு காந்தி யடிகளின் கட்டளையை மறுக்க முடியவில்லை. ஆகவே இப்பொழு தும் காங்கிரஸ் வாதிகள் என்பார் 'தீண்டாமை, தீண்டாமை' என ஊர் மெய்ச்சக் கூக்குரல் இடுகின்றனர். இவர்களது சொல்லுக்கும் செயலுக்கும் பெருத்த வேற்றுமை யுண்டு. தென்னாட்டின் உண்மை நிலை சிறிது காலத்தில் வெளியாகும். காலமே யாவற்றையும் விளக் கிக்காட்டும் களங்கமற்ற கண்ணாடியாம்.

***

சென்னை நகர பரிபாலனசபையார் 1925- ஏப்ரில் முதல் 7 வருஷத்துக்குள் சென்னை நகர பரிபாலன சபை எல்லைக்குட்பட்ட

இடத்தில் உள்ள சிறுவர் சிறுமியர்களுக்கு பிரதமக்கல்வி கட்டாயமாகக் கற்பிக்கும்பொருட்டு ஒரு ஏற்பாடு செய்ய அனுமதியளித்ததை அறிந்து மிகவும் சந்தோஷப்படுகிறோம். இத்தீர்மானத்தை நகர சபையார்முன் கொண்டுவந்து நிறைவேற்றிய ஸ்ரீமாந் ராவ் பகதூர் வரதராஜுலு நாயுடு அவர்களுக்கு சென்னை நகரத்தார் அனைவரும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளார்கள்.

***

பெனுகொண்டா நிருபர் ஒருவர் ஒரு சென்னைப்பத்திரிகைக்குப் பின்வருமாறு எழுதுகிறார்.

"பெனுகொண்டா யூனியன் போர்டார் சென்ற மாதம் தேசபக்தர் கொண்டா வெங்கடப்பய்யா பந்துலு அவர்களுக்கு ஒரு வரவேற்புப் பத்திரம் படித்தார்கள். இது பல பிராமணர்களுக்கு நடுவே ஒரு பஞ்சம அங்கத்தவரால் படிக்கப்பட்டது. சிலர் பஞ்சமர் படிக்கவிடப் பட்டிருக்கும் சீர் திருத்தத்தை அங்கீகரிப்பதற்காகவே அக்கூட்டத்திற்கு வந்திருப்பதாகத் தெரிவித்தார்கள். இது வைதீகப் பிராமணர்களுக்குப் பெருங்கோபத்தை உண்டுபண்ணி விட்டது. அவர்கள் இச்சீர்திருத்தக்காரர்களுக்கும் பாடங்கற்பிக்க ஒரு சமயம் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அன்று அக் கூட்டத்தில் வந்திருந்தவர் ஒருவர் வீட்டில் சிரார்த்தம் வந்தது. அச்சிரார்த்தத்துக்கு வைதீகப் பிராமணர்கள் வரமுடியாதென்று சொல்லி விட்டார்கள். ஆகையினால் அப்பிராமணர் அக்கூட்டத்துக்குப் போனதற்காகப் பிராயச்சித்தம் செய்துகொண்டது மல்லாமல் அப் பிராயச்சித்தம் நடைபெறுங்கால் தீண்டாமையை விலக்குவது தவறு என்றும் ஒப்புக்கொண்டாராம்!" தீண்டாமையே! உனக்குக் காப்பாளர் யார்?

***

இந்தியாவைப்போல் பால்ய விதவைகள் மிகுந்த இடம் வேறெங்குமில்லை. பால்ய விதவைகளின் கஷ்டங்களை நிவர்த்தி செய்யும் பொருட்டு லாகூரிலே விதவா விவாக ஸஹாய ஸபையார் மிக நன்மையான வேலைசெய்து வருகின்றனர். சென்னையில் அது போன்ற ஒரு ஸ்தாபனம் இல்லாக்குறையை நீக்கும் பொருட்டு இரண்டு வாரங்களுக்கு முன் லிங்க செட்டி தெரு 22-ஆவது நம்பர் வீட்டில் ஷை சபையின் கிளையொன்று ஸ்தாபன மாயிருப்பது மகிழத்தக்கதே.

***

காலஞ்சென்ற லால்குடி எல். பி. ஸ்ரீநிவாஸய்யங்கார் அவர்களின் புத்திரியும் பால்ய விதவையுமான ஸ்ரீமதி செம்பகம்மாளை சென்னை ஹைக்கோர்ட்டில் ஒரு குமஸ்தாவான ஸ்ரீமாந் எல். எஸ். கோபாலகிருஷ்ணய்யரவர்கள் பிரம்ம ஸமாஜ விதிப்படி விவாகம் செய்திருப்பதாயறிகின்றோம். இவ்வதூவரர்கள் ஸர்வ நலங்களும் பெற்று இன்புற்று வாழுமாறு இறைவன் அருள் புரிக!

சித்திரை 5௳ வெளிவந்த நவசக்தி பின் வருமாறு எழுதுகிறது.—"வங்காளத்திலுள்ள நாராயண கஞ்ச் என்ற இடத்தில் உள்ள நாமசூத்திரர் என்று சொல்லப்படும் தாழ்ந்த வகுப்பார் அனைவரும் கிறிஸ்தவ மதத்தைத் தழுவத் தீர்மானித்துவிட்டார் என்று கல்கத்தாவிலிருந்து வந்த ஒரு பத்திரிகை கூறுகிறது. ஜாதி ஹிந்துக்கள் தங்களைச் சரியாக நடத்தவில்லையென்றும், அதற்காக வன்மம் சாதிக்கவேண்டி இந்தத் தீர்மானத்திற்குத் தாங்கள் வந்ததாகவும் நாமசூத்திரர்கள் கூறுகிறார்களாம். இவர்கள் கூறும் காரணம் நமக்குப் பெரிய அவமானத்தையும் வருத்தத்தையும் கொடுக்கின்றன. கிறிஸ்தவ மதத்தின் உண்மைகளையும் அதன் உயரிய தன்மையையும் அறிந்து கொண்டு அம்மதத்தில் இவர்கள் சேர்ந்திருந்தார்களேயானால், இவர்களை நாம் ஒன்றுங் குறை கூறுவதற்கில்லை. ஆனால் ஹிந்து சமூகத்தை இவர்கள் சேர்ந்தவர்களாயிருந்த போதிலும் அம்மதத்தினரால் இவர்கள் சரியாக நடத்தப்படுவதில்லை யென்ற காரணத்திற்காக இவர்கள் வேற்று மதத்தைத் தழுவுகிறார்கள் என்பது இந்தியாவுக்கும் ஹிந்து சமூகத்திற்கும் பெரிய அவமானமாகும்.'' இந்து மதாபி மானிகளே கவனியுங்கள்.

***

நமது பத்திரிகாபிமானிகளும் தமிழ்த்தலைவர்களுமான திருவனந்தபுரம் சாலை புகையிலை மளிகை ஸ்ரீமாந் ஈ சுந்தரம் பிள்ளையவர்களும், புத்தன் சந்தை ஸ்ரீமாந் பி. அநந்தப் பெருமாள் பிள்ளையவர்களும் காலஞ் சென்றதை அறிந்து மிகவும் விசனிக்கின்றோம்.

ஸ்ரீமாந் சுந்தரம் பிள்ளை யவர்கள் மிக எளிய நிலைமையிலிருந்து தன் சுயமுயற்சியினாலும் புத்தி கூர்மையினாலும் திருவிதாங்கூரிலே ஒரு பிரபல புகையிலை வியாபாரியாகி லக்ஷப் பிரபுவாக விளங்கினார். இயல்பாகவே மிக்க தெய்வ பக்தியுடையாவர். தான தரும சீலர். மரணகாலத்தில் சுமார் வயது 70 இருக்கலாம். பிள்ளையவர்களின் புத்திரன் ஸ்ரீமாந் ஈசுவரமூர்த்திப் பிள்ளை யவர்களுக்கும் குடும்பத்தாருக்கும் நேர்ந்துள்ள துன்பத்தில் நாமும் பங்கு கொள்ளுகின்றோம்.

ஸ்ரீமாந் அநந்தப் பெருமாள் பிள்ளை யவர்கள் காலஞ்சென்ற பேஷ்கார் பிறவிப்பெருமாள் பிள்ளை யவர்கள் புத்திரர். இயல்பாகவே மிக்க சாத்வீககுணம் பொருந்தியவர். திருவிதாங்கூர் அரசாங்கத்திலே பொறுப்பான உத்தியோகம்பெறப் பல சௌகரியங்கள் இருந்தும் பிள்ளையவர்கள், உத்தியோகப் பைத்தியம் அற்றவராய் ஒதுங்கி வாழ்வது வந்தனர். பொது விஷயங்களுக்குப் பொருளுதவி செய்வதில் சிறிதும் பின்னடையாதவர். எத்தகைய மனப்பாங் குடையவரிடத்தும் ரம்மியமாக நடந்துகொள்ளும் சிறந்த குணம் பிள்ளையவர்களிடத்து மிகுந்து விளங்கியது. நடுப்பிராயத்தவரான இவர்களது அகால மரணத்தால் வருந்தும் பிள்ளையவர்களின் குடும்பத்தாருக்கு நமது மனமார்ந்த அநுதாபத்தைச் செலுத்துகின்றோம்.

இஸ்லாமாவ தென்ன?

நாயக வாக்கியம்.

1. கண்ணியமான முறையில் தங்களுடைய ஜீவனோபாயத்துக்கு வேண்டியதைச் சம்பாதிப்பவர்களே ஆண்டவனிடத்தில் அருமையான பிரியமுள்ளவர்களா யிருக்கின்றார்கள்.

2. ஆண்டவனுடைய சிருஷ்டிப் பொருள்களிடத்திலும் தன்னுடைய சொந்தக் குழந்தைகளிடத்திலும் பட்சம் பாராட்டாத மனிதனிடத்தில் ஆண்டவனும் பட்சம் பாராட்ட மாட்டான்.

3. தன் கண் முன்னிலையில் இருந்தாலும் இல்லாவிடினுந் தன்னுடைய சகோதரனைக் காக்கக்கூடியவனே உண்மையான மனிதனாவான்.

4. மகா மேன்மையான காரியங்கள் யாவை? ஒரு மனிதனுடைய மனதைச் சந்தோஷப்படுத்துவதும் பசிப் பிணியுடையவருக்கு போஜனம் செய்து வைப்பதும், சிறுமைப்பட்டவருக்கு உதவி புரிவதும், துக்கித் திருப்பவரின் துயரைப் போக்குவதும், துன்பமடைந்தவர்களின் கஷ்டத்தை நிவர்த்தி செய்வதும், அப்படிப்பட்ட காரியங்க ளாகும்.

5. ஒருவர் தம்முடைய சகோதரருக்கு ஏற்பட்டுள்ள நாட்டத்தைப் பூர்த்தி செய்துவைக்கப் பிரயத்தனப் பட்டு அக்காரியத்தில் அவர் ஜயமடைந்த போதிலும் அபஜய மடைந்தபோதிலும் அவருடைய பாபங்களை யெல்லாம் அல்லாஹுத் ஆலா மன்னித்து விடுவான்.

6. ஆண்டவனுடைய சிருஷ்டிப் பொருள்களிடத்தில் பிரியம் பாராட்டுகிறவரிடம் அந்த ஆண்டவனும் பிரியம் பாராட்டுகிறான். ஆதலின் நல்லவனாயினும், கெட்டவனாயினும் யாராயிருப்பினும் இவ்வுலகத்திலுள்ள மனிதனிடத்தில் பிரியமாயிருங்கள். தீய மனிதனிடத்திலும் பிரியமாயிருப்பதால் அவன் அத்தீமையினின்றும் விடுபடுகிறான், இதனால் வானுலகி லுள்ளவர்களே உங்களிடத்தில் பிரியமாயிருப்பார்கள்.

7. சுவர்க்கம் புகுவதற்கு அருகர்களா யிருப்பவர்கள் மூவகைப்படுவர், முதலாவது சற்குண சீலனாயிருந்து தன் குடிகளுக்கு நன்மையைச் செய்யக்கூடிய நீதிபதியான மன்னன்; இரண்டாவது தன் பந்து மித்திரர்களிடத்திலும் ஏனையோ ரிடத்திலும் தயாளமாயிருக்கக்கூடிய பிரியமுள்ள மனிதன்; மூன்றாவது சற்குண சீலன்,

8. இஸ்லாமென்பது என்ன? என்று நம் நபிகள் நாயகங்களைக் கேட்டேன். வார்த்தை சுத்தமும் தரும சிந்தனையும் தான் என்று அருளிச்செய்தார்கள்.

9. அவனவனும் தன் தன்னுடைய குண விசேஷத்துக்குத் தக்கவாறே ஆத்ம ஞானவழியிலும் ஆண்டவனால் கைதூக்கி விடப் படுகிறான்.

10. கற்றோர் என்பவர் யாவர்? தாம் கற்றுக்கொண்டதைப் பழக்கத்தில் கொண்டுவந்து அனுஷ்டிப்பவர்களா யிருப்பவர்களே.

11. இஸ்லாத்தின் பெயர்மட்டு மல்லாமல் மற்றொன்றும் அம் மார்க்கத்தின் அம்சமில்லாமலும் குர் ஆன்ஷரீபின் தோற்றமட்டு மல்லாமல் அவ் வேதத்தின் அறிவொன்று மில்லாமலும் முஸ்லீம் களின் பள்ளிகளும் தொழுவோரும் அறிவாளரு மில்லாமல் வெற் றிடங்களாகவும் போகக்கூடிய காலம் சமீபத்தில் வரும். அப்பொழுது படித்தவர்களே வானத்தின் கீழ் மகா கெட்டவர்களாக யிருப்பார் கள். குதர்க்கமும் வீண் சண்டைகளுமே அதிகமாகக் காணப்படும். அதனால் அவர்களுக்கே அக்கொடுமைகளெல்லாம் தீமைகளாய் முடி யும்.—(சுதேசபரிபாலினி)

மோட்டார் செய்யும் கோடீச்வரர்.

அமெரிக்க ஐக்கிய நாட்டு அரசாங்கத்தாரும் அமெரிக்க காங்கி ரஸ் பிரதிநிதி சபையாரும் ஹென்ரி போர்டைப் பற்றிய பேச்சில் அக்கரை எடுத்துக் கொள்கிறார்கள். மோட்டார் வண்டிகள் செய்யும் தொழிற் சாலையும் அவரது மற்ற முயற்சிகளும் சேர்ந்து 17-கோடி பவுன்கள் பெறலாமென்று மதிப்பிட்டிருக்கிறார்கள். ஒரு பவுனுக்கு 5 டாலர் என்ற கணக்கில் இவ்வளவு ஆகிறது. ஒரு நாளில் 80,000 பவுன்கள் வீதம் தமது சொத்தில் சேர்த்துக்கொண்டு வருவதாகச் சொல்லப் படுகிறது. அதாவது ஒரு வருஷத்தில் ஏறக்குறைய 3 கோடி பவுன் கூடுகிறது. மிஸ்டர் போர்டு இப்போது 61 வயது சென்றவ ரானாலும் தேகத்திலும் புத்தியிலும் திடமுள்ளவராகவே இருக்கிறார். இன்னும் பத்து வருஷகாலம் இதே திடத்துடன் இவர் இருந்து கவனிக்க முடியுமானால், இதர சாதனங்களும் குறையாம லிருந்தால், இவரது ஆஸ்தி 60 கோடி பவுன்களாகுமென்றும் தினசரி வருமானம் 2 லட்சம் பவுன்க ளாகுமென்றும் பொருள் நிலை நிபுணர் கள் கணக்கிடுகிறார்கள்.

ஆதியில் மிஸ்டர் போர்டு நயமான மோட்டார் வண்டிகள் செய் வதையே முக்கிய தொழிலாக வைத்துப் பொருள் சேகரித்தார். இப்போது இருப்புப் பாதைகளும் நிலக்கரிச் சுரங்கத் தொழிலும் இரும்புச் சுரங்கத் தொழிலும் பருத்தி விளையும் பூமிகளும் மரங்கள டர்ந்த தோப்புகளும் கண்ணாடி எஃகு முதலியவைகளை உருக்கி வார்க்கும் தொழிற் சாலைகளும் தோல் பதனிடும் சாலைகளும் மற்றும் பல தொழிற் சாலைகளும் இவர் வச மிருக்கின்றன. இவற் றால் செய்யப்படும் சரக்குகள் எல்லாம் இவரது மோட்டார் வண் டிகளுக்கு உபயோக மாகின்றன.

மோட்டார் வண்டியில் லாபம்.

மிஸ்டர் போர்டு தாம் செய்யும் மோட்டார் வண்டி ஒவ்வொன்றும் 14 பவுன் லாபம் வைத்து விற்கிருரென்ருலும் ஏராளமான லாப மடைந்து வருகிருர். இதற்குக் காரணம் இவர் வசமுள்ள இதரத் தொழில்கள். தம் வசமுள்ள நிலக்கரியை வெளியில் விற்கக்கூடிய விலைக்குத் தம் தொழிற் சாலைகளுக்கே விற்றுக் கொள்ளுகிருர். அதே மாதிரி எஃகு முதலிய பல சாமான்களுக்கும் லாபம் எடுத்துக் கொள்கிருர்.

கார்னீஜி, ராக்பெல்லர் முதலிய பலரைப் போல் இவர் எந்தப் பெரிய தர்மங்களுக்கும் நிதி கொடுத்தது கிடையாது. வருவாய்க்குத்தக்க செலவும் இவருக்குக் கிடையாது. அமைதியை நாட்ட வேண்டு மென்ற ஒரே விஷயத்தில் இவர் கருத்துச் செல்கின்றது. வேறு பொது விஷய மெதுவும் இவர் மனதை இழுப்பதில்லை.

வருமான வரி குறைவு.

இவரைக் காட்டிலும் மிகக் குறைவாக வருமான முள்ளவர் கூட அதிகமாக வருமான வரி செலுத்துகிருர்களென்று சொல்லப்படுகிறது. இதுதான் காங்கிரஸ் சபையின் கவனத்தை இழுக்கின்றது. ஏராளமான ஆஸ்தி ஒருவர் கையில் சிக்குவதும் கவலைக்கிடமுள்ள விஷயம். இவருக்குக் கிடைக்கும் லாபங்களில் ஏராளமான பாகத்தைத் தொழிற்சாலை அபிவிருத்தியில் செலவிட்டு அதிக சரக்குகள் குறைந்த செலவில் செய்யக்கூடிய சாதனங்கள் ஏற்படுத்திக் கொள்வார். இதனுல் இவரது சொந்த வருமானம் குறைவாகத்தோன்றி வரியும் குறைந்து போகிறது. தொழிற் சாலை வரியும் மிகக் குறைவாகவே இருக்குமாறு செய்து கொள்கிருர்.

இது சட்ட சம்மத முள்ள முறையே; ஆனுலும் காங்கிரஸ் பிரதிநிதி சபையார் ஏதாவது செய்யவேண்டுமென்று கவலைப்படுகிருர்கள். தொழிற்சாலை வருமானத்திற்கு அதிக வரி போடலாமென்ருல், இதர தொழிற்சாலைகளுக்கும் வரி உயர்ந்து விடுகிறது. மிஸ்டர் போர்டின் சொந்த வரி ஏற இடமில்லை. மிகச் சாமான்ய மனிதராக வாழ்க்கையை ஆரம்பம் செய்து இவ்வளவு சீக்கிரம் இவ்வளவு பெரிய தனத்திற்குச் சொந்தக் காரரான மனிதர் இதுகாறு மில்லை.

ஒரு அதிசயம்.

தாயும் மகளும் ஏக காலத்தில் மக்கட் பேறடைவது சாதாரணம். பாட்டியார், தாயார் மகள் ஆகிய மூன்று பெயரும் ஒரே சமயத்தில் குழந்தைகளைப் பெற்ருர்களென்று கேள்விப்பட்டதில்லை. ஆனுல் சமீபத்தில் ஐரோப்பாவிலுள்ள கலீஷ்யாவில் இச்சம்பவம் நடந்ததாம்.

விசேஷக் குறிப்புகள்

உயிர் வாழ வேண்டு மென்ற உறுதி.

லண்டன் நகரிலுள்ள ஓர் ஆஸ்பத்திரியில் ஆறு வாரங்களுக்கு முன் கொடிய வியாதியால் துன்பப்பட்டுக் கொண்டிருந்த ஒருவன் சிகிச்சை செய்து கொள்ளுமாறு வந்திருந்தான். வியாதியின் தன்மையை டாக்டர் கவனித்து ரணவைத்தியம் செய்ய முடியாதென்றும் இன்னும் ஒரு வாரம் அல்லது பத்து நாட்களுக்கு மேல் உயிர் வாழ்வது துர்லபம் என்றும் கூறிவிட்டார். இதைக் கேள்விப்பட்டவுடனே பிணியாளிக்குத் தன் இளைய குமாரனை உடனே பார்க்க வேண்டு மென்ற அவா அதிகரித்துவிட்டது. குமாரனோ ஆஸ்திரேலியாவில் இருந்தான். அவன் லண்டன் வந்து சேரும்படி உடனே தந்தியும் கொடுக்கப்பட்டு விட்டது. குமாரனும் ஆஸ்திரேலியாவை விட்டுப் புறப்பட்டு விட்டதாகப் பதில் தந்தியும் அனுப்பி விட்டான். பிணியாளி, தன் படுக்கைக் கருகில் ஒரு உலக படம் ஒன்று மாட்டுவிக்கச் செய்து ஒவ்வொரு நாளும் தனது குமாரன் எவ்வளவு தூரத்தில் வந்திருப்பான் என்றதைக் கவனித்துக்கொண்டே யிருந்தான். டாக்டர் சொல்லி யுள்ள கெடுவும் கழிந்துவிட்டது. அவன் குமாரனைப் பார்க்கவேண்டு மென்ற உறுதியான மனமே உயிர் வாழச் செய்துவருகிறது என்று டாக்டர்களும் சொன்னார்கள். சௌதாம்ட்டன் துறைமுகத்தில் கப்பல் வந்து சேரும் நாளில் பிணியாளியின் மனக் கவலை வருணிக்க முடியாதபடி அவ்வளவு பரிதாபகரமா யிருந்தது. குமாரன் ஆஸ்பத்திரி வந்து சேர்ந்தான். தகப்பனும் கண்டு கொண்டான். ஒரு மணி நேரங் கழித்து தகப்பன் மனவமைதி யுடன் இறந்தான்.

திருநெல்வேலியில் பயிர்ச் சேதம்.

திருநெல்வேலியில் வெள்ளத்தின் பயனாக ஏற்பட்ட தேசங்களைப்பற்றி ஸ்ரீமான் குரூஸ் பர்னாண்டஸ் கேட்ட கேள்விக்கு சட்ட அங்கத்தினரும் ரெவினியூ அங்கத்தினரும் பின்வருமாறு அறிவித்தார்கள் :—1923-ம் வருஷம் டிசம்பர் மாதத்தில் ஏற்பட்ட வெள்ளத்தின் பயனாக ரெவினியூ இலாக்காவின் பொறுப்பிலிருந்த சுமார் 338 சில்லரை நீர்ப்பாசன வசதிகள் அழிக்கப்பட்டுப் போயின. அவைகளை மறுபடியும் சீர்ப்படுத்துவதற்கு ரூ. 56173 பிடிக்குமென்று மதிப்பிடப்பட் டிருக்கிறது. செலவுக்காக ரூ. 12,000 சமீபத்தில் கொடுக்கப் பட்டிருக்கிறது. 1924-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 1-ந் தேதிக்குள் சீர் படுத்தப் படாதவைகளை சீர்திருத்துவதற்கு அடுத்த வருஷம் பணம் கொடுக்கும்படி வரவு செலவு திட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. நீர்ப்பாசன வசதிகளை சீர்திருத்துவதற்காகத் தற்கால ஏற்பாடாக ஆறு ஓவர்ஸியர்களும் ஆறு லஸ்கர்களும் நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். மரு தூருக்கும், ஸ்ரீவைகுண்டத்திற்கும் இடையில் அனேக இடங்களில்

உடைப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. வெள்ளத்தின் பொழுது திருநெல்வேலி, கொடகம் கால்வாய்களின் பாய்ச்சலிலுள்ள குளங்களிலெல்லாம் உடைப்புகள் ஏற்பட்டன. அவசரமாகச் செய்யவேண்டிய வேலைகளுக்காக ரூ. 40,000 கொடுக்கப் பட்டிருக்கிறது. அடுத்த வருஷத்திய வரவுசெலவு திட்டத்தில் ரூ. 4,65,000-க்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. உடைப்புகளையும், சேதமடைந்த நீர்ப்பாசன வசதிகளையும் சேர்ப்படுத்துவதற்கு ரூ. 8,33,000 பிடிக்குமென்று மதிப்பிடப்படுகிறது. திருச்செந்தூர் தாலுக்காவில் ஒன்பது கிராமங்களிலும், ஸ்ரீவைகுண்டத்திலுள்ள ஆறு கிராமங்களிலும் வெள்ளத்தினால் சேத மேற்பட்டிருக்கிறது. அந்தக் கிராமங்களின் பிப்ரவரி மார்ச்சு மாதத்திய கிஸ்திகள் மே, ஜூன் மாதங்கள் வரையில் தள்ளிவைக்கப் பட்டிருக்கின்றன. வெள்ளத்தினால் சேதமடைந்த நிலங்களின் தீர்வையை வஜா செய்ய கலெக்டருக்கே அதிகாரமிருந்து வருகிறது.

மனதைப் பரிசோதிக்கும் யந்திரம்

ரஷ்யாவைச் சேர்ந்த கிப் என்ற விடத்திலிருக்கும் டாக்டர் பிஸ்கி என்பவர் ரேடியோ டயாக்னஸ் கோப் என்ற ஓர் புதிய கருவியைக் கண்டு பிடித்திருக்கின்றார். அக்கருவி மூளையிலும் தேகத்திலுமிருப்பதைப் புத்தகம் போல் வாசித்து மனிதனின் தேகநிலைமையையும் மனோ நிலைமையையும் தெரிவிக்கின்றது. அதன் மூலம் ஒருவனது அறிவின் அளவையும் குணங்களையுங் கண்டுபிடிக்கலாம். டாக்டர் பிஸ்கிருஷிய சிறையிலிருக்கும் ஏராளமான கைதிகளைத் தமது கருவியின் மூலமாய்ப் பரிசோதித் திருக்கின்றார். சில நிமிஷங்கள் பரீட்சித்தபின் 1-ம் நம்பர் கைதி கொலை செய்தவன், 2-ம் நம்பர் கைதி கொலை செய்யாமலே கொலை செய்தவனெனக் குற்றஞ் சாட்டப்பட்டவன், 3-ம் நம்பர் கைதி வலுத்த திருடன் ; 4-ம் நம்பர் கைதி தீவிர அரசியற் கிளர்ச்சி செய்பவன், 5-ம் நம்பர் கைதி குற்ற மற்றவன்" என்று இவ்வாறு எல்லாவற்றையும் சரியாகக் கூறியிருக்கின்றார். அக்கைதிகளை அவர் அதற்குமுன் பார்த்ததாவது அவர்களைப்பற்றிக் கேள்விப்பட்டதாவது கிடையாது. அவர் கைதிகளின் விஷயமாய்க் கூறிய ஒவ்வொன்றும் சரியாகவே யிருக்கிறதென ருஷிய போலிஸார் பகருகின்றார்கள். இதுவுமன்றி, ஒரு இளைஞன் இன்ன வேலைக்கு உதவுவான் இன்னதிற்கு உதவமாட்டான் என்பதையும், அவன் என்னென்ன குற்றங்களைப் புரியக்கூடியவன் என்பதையும் அக்கருவியின் மூலமாய்க் கண்டு பிடிக்க முடிகின்றது.

புருஷன் பிரசவித்தான்

ஸிவோடாஸ்போவிச் என்று பெயர் பூண்ட 22-வயதுள்ள கிருஷிகர் ஒருவர் சென்ற ஜனவரி மாதத்தில் ஸெர்பியாவைச் சேர்ந்த பெல்கிரேட் ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு வயிற்று வலி சிகித்ஸைக்காக

யந்தனராம். ரணவைத்ய சிகாமணியான டாக்டர் ஹோரிக் என்பவர் வயிற்றைக்கீறி பரிசோதித்ததில் இரண்டு ஆண்கர்ப்ப பிண்டங்கள் காணப்பட்டனவாம். ஒரு பிண்டம் 10 அங்குலம் நீள முள்ளதாகவும் தலை, இரண்டு பற்களடங்கிய வாய், கழுத்து, மார்பு, ஆறு விரல்களும் நீண்ட நகங்களுமுள்ள இடதுகை இவைகளோடு கூடிய உருவமாக இருந்ததாம். மற்றொரு பிண்டம் 5-அங்குலம் நீளமுள்ளதாகவும் இரண்டு கண்களும் இதர அவயவங்கள் உருவமற்றும் இருந்ததாம். ஸிவோடாஸ்போலிச் வயிற்று வலி தீர்ந்த தேக சௌக்கியம் அடைந்து கொண்டுவருகின்றனராம். அவ்வூரில் இவரைப் பார்க்க ஜனக்கூட்டங்கள் ஓயவில்லை. இவ்வதிசயச் செய்தி பல திசைகளிலும் பறக்கிறது. டாக்டர்களும் சாஸ்திர ஆராய்ச்சி செய்பவர்களும் காரணங்கள் கூற மூளையை சிரமபடுத்திக் கொண்டிருக்கிருர்கள். கலிகாலம் முற்றிக் கொண்டு வருகிறது. காணுததும் கேட்காததும் நாளுக்குநாள் காணவும் கேட்கவும் படுகிறது.

ட்றக்கும் அளவு.

மணியொன்றுக்குப் பட்சிகள் பறக்கும் வீதம்.

கழுகு	மணியொன்றுக்கு	100	மைல்
நாரை	,,	80	,,
அடைக்கலான் குருவி	,,	90	,,
காகம்	,,	25	,,
புறு	,,	70	,,

இரண்டு தலையுள்ள பாம்பு.

ஆதி காலத்தில் ஐந்து தலை நாகம் பத்துதலைப் பாம்பு இருந்ததாக புராணக் கதைகளில் கேட்டு இருக்கின்ருேம். ஒருவரும் கண்டது கிடையாது.

ஆனுல் இப்பொழுது சேலம் ஜில்லா ஓமலூர் தாலூகா வனவாசி என்னும் ஊரில் கோவிந்த செட்டி என்பவர் ஒரு பாம்பை பெட்டியிலிட்டு பாது காத்து வருகின்ருர். அந்தப் பாம்பைப் பார்க்க நான் சென்றிருந்தேன். என்னுடைய எண்ணப்படி வெளியில் விட்டார். பாம்பு தாராளமாக உலாவுகின்றது. ஒரே புறத்தில் இரண்டு சிரசுமிருக்கின்றது. தனித்தனியாக கழுத்துடன் இருக்கின்றது. சில பூச்சிகளை இரையாகப் போட்டபொழுது சீக்கிரம் ஓடி ஒருவாயில் இரு பூச்சியும் மறுவாயில் ஒரு ஒரு பூச்சியுமாகத் தின்றது. தலை ஒன்றுக்கு இரண்டு கண்ணும் வாயும் எல்லாவமைப்பும் சரியாகவே இருக்கின்றது. சதா காலமும் அனேக ஜனங்கள் வந்த வண்ணமாகவே இருக்கின்ருர்கள். பின்பு ஒரு தொட்டியில் நீர் விட்டு அதில் விட்டார். பாம்பு இரு சிரசுகளையும் தூக்கிக்கொண்டு உல்லாசமாக நீந்திவரக் கண்டேன். பொதுவாகப் பார்க்கும்பொழுது இது ஒரு கலியுக விநோதமென்றே சொல்லலாம். (திராவிடன்.)

வெள்ளைப் புலி.

சில தினங்களுக்கு முன் சிர்கூஜா மகாராஜா அவர்களால் ஓர் வெள்ளைப் புலி சுடப்பட்டு கல்கத்தா ராதா அண்டு கம்பெனியின் கட்டிடத்தில் பார்வைக்கு வைக்கப் பட்டிருந்த தாம். அப்புலியின் தேகத்தில் சில வரிகள் மட்டும் காணப்படுகின்றனவாம். அது சுத்த வெண்மையாய் இருக்கிறதாம். அதை ஓர் மாடென்று தவருகக் கருதப் பட்டதாம். அப்புலிக்கு இரண்டு மனிதர்களும் சில ஆடுமாடுகளும் இரையாக்கப் பட்டதாம்.

ஓர் ஆச்சரியமான ஆடு.

பிரான்ஸில் கெ. சேவர் மாகாணத்தில் எர்வோ கிராமத்தில் ஷிக்கே என்ற ஓர் ரோட்டு மேஸ்திரிக்கு ஓர் ஆட்டுக்கடா இருக்கின்றதாம். அது ஆணும் ஆகும் பெண்ணும் ஆகுமாம். அதற்கு இரண்டு மடிகளிருக்கின்றதாம். தினமொன்றுக்கு ஒரு படிபால் கறக்கின்றதாம்.

பணம் சம்பாதிப்பதற்குப் புதிய வழி.
இரத்தம் கொடுக்கும் தொழில்.

ஒஹியோ நாட்டுக் கல்லூரிமாணவனொருவன் பாடசாலைக்கட்டணத்திற்கும் தனது ஜீவியத்திற்கும் பணம் சம்பாதிப்பதற்கு ஒரு புதிய வழியைக் கைக்கொண்டுள்ளான். இவன் தனது இரத்தத்தை மாகாணிப்படிக்கு நூறு டாலர் விலையாக விற்கிருன். கடந்த ஒரு வருடத்தில் இரண்டு மாதத்திற்குள் வைத்திய சாலையிலுள்ள பிணியாளருக்கு உதவியாகவும் தனக்கு வருவாயை மிகுதிப்படுத்திக்கொள்ளவும் இரத்தம் இறக்கிக் கொள்ளும் தொழிலில் எட்டு முறைகள் ஈடு பட்டுள்ளான். எட்டு முறைகளிலும் அவனது திரேகத்திலிருந்து ஐந்து மாகாணிப்படி இரத்தம் இறக்கிக் கொள்ளப்பட்டது. அவனும் ஐந்நூறு டாலர் வரை பெற்றுக்கொண்டான். இச்செயலால் அம் மாணவனுக்கு யாதொரு தீங்கும் நேரிடவில்லை. இதனுல் அவனுக்கு அதிகப் பசிதான் உண்டாகுமாம். இம்மாணவன் 6- அடி உயரமும், 192 பவுண்டு கனமும் உள்ளவனும்.

குலைக்கும் பட்சி.

லண்டனிலுள்ள ராயல் பூகோளசாஸ்திர சங்கத்தில் ஒரு புதிய குலைக்கும் பட்சியை காப்டன் புல்லக் என்பவர் கொண்டு வந்திருக்கிருர்.

கறுப்பு முட்டை.

இங்கிலாந்திலுள்ள டாட்டர் ஷால் என்ற இடத்திலுள்ள ஒரு குடியானவனது கோழி கறுப்பு முட்டையிட்டிருக்கிறதாம். சரியான அளவுதானிருக்கிறதாம். மேல்பாகம் மைப்போல் கருமை நிறமாயிருக்கிறதாம்.

விசேஷக் குறிப்புகள்

18-மாதத்தில் 9-குழந்தைகளைப் பெற்றுளாம்.

அமெரிக்க ஐக்கிய நாட்டில் ஓர் 30-வயதுடைய பெண் 1915-ம் வருஷம் மே மாதம் 5-குழந்தைகளையும் 1916-ம் வருஷம் நவம்பர் மாதம் 4-குழந்தைகளையும் பெற்றுள் ஆக 18-மாதத்திற்குள் 9-குழந்தைகளைப் பெற்றிருக்கிறார்கள்.

மின்சார சக்தியைக்கொண்டு வியாதியைக் கண்டறிதல்.

லண்டன் ஹார்லீ தெருவிலுள்ள நிபுணரான டாக்டர் எச். உட்ஸ் என்பவர் மின்சார சக்தியின் துடிப்பைக்கொண்டு வியாதிகளின் தன்மையை உணர்ந்து குணப்படுத்தும் புதியதொரு யந்திரத்தைக் கண்டு பிடித்திருக்கிறார். இது சுக வாழ்வுச் சங்கத்தின் கூட்டத்தில் வைத்துக் காட்டப்பட்டது. இதனால் வியாதிகளைக் கண்டுபிடித்து மருந்துகள் மூலம் அவற்றைத் தீர்ப்பதற்கு தற்கால முறை அடியோடு மாறிப்போய் விடுமென்று கூறப்படுகிறது.

ஸான் பிரான்ஸிஸ்கோவைச் சேர்ந்த டாக்டர் ஆப்ரஹாம் கண்டுபிடித்த யந்திரம் மாதிரி கிளாஸ்கோவைச் சேர்ந்த டாக்டர் பாயடும் நூதனமாக "எமானோமீட்டர்" என்ற யந்திரத்தைக் கண்டுபிடித்திருக்கின்றார். அந்த யந்திரமானது வியாதிகள் அவற்றிற்குரிய மருந்துகள் இவற்றை எடுத்துக் காட்டுகின்றது. அந்த யந்திரம் பரம்பரை பரம்பரையாக இருந்துவரும் குணங்களையும், வியாதிகளைத் தடுக்க வியாதியஸ்தர்களுக்குள்ள சக்தியையும் வியாதிகளின் தன்மையையும் தெரிவிக்கின்றன அவர் வியாதியஸ்தரைப் பார்க்காமலே அவர் ஆண்பாலா பெண்பாலா என்பதையும் தமது யந்திரத்தின் உதவியால் கண்டுகொள்ள முடிகிறது. "லீடர்."

ஒரு இந்திய சந்நியாசியின் பிணிதீர்க்கும் சக்தி.

(ஓர் ஆங்கிலேயர் தெரிவிப்பது)

நான் வங்காளத்திலிருக்கும்போது ஓர் சுதேச சந்நியாசியின் அறிமுகம் பெற்று அவரிடம் மந்திர சக்தியைக் கொண்டு வியாதிகளைக் குணப்படுத்தும் உபதேச மடைந்தேன். சில காலம் கழிந்த பின் நான் சுய தேசம் செல்ல நேரிட்டதால் அவரது விடை பெறச் சென்றபோது அவர் தமக்குள்ள வல்லமையை எனக்கு அளித்ததாகக் கூறி ஆசிர்வதித்து அனுப்பினார். கொஞ்சக் காலத்தின் பின்னர் நான் பாரிச வாயுவினால் பீடிக்கப்பட்டு லண்டனில் பல வித சிகிச்சை பெற்றும் குணப்படாமல் வருத்த முற்றிருக் கையில் ஓர் நாள் இந்திய சந்நியாசியின் ஞாபகம் உண்டாகவே அவா உபதேசித்துத் தந்த மந்திர சக்தியை பரீட்சித்து முற்றிலும் குண மடைந்தேன்.

மதிப்புரை

கொசுக்களும் மலேரியாசுரமும்.—இது சென்னைக் கார்பொரேஷன் சானிட்டெரி இன்ஸ்பெக்டராக இருந்து விடுதி பெற்ற ஸ்ரீமான் ஏ. சொக்கலிங்கம் பிள்ளை யவர்களாலும் கார்பொரேஷன் இன்ஸ்பெக்டர் ஸ்ரீமான் வையாபுரி முதலியார் அவர்களாலும் இயற்றப் பெற்ற ஒரு சுகாதார நூல். லெப்டினன்று கர்னல் J. W. காரன்வால் I.MS. துரையவர்கள் எழுதிய முன்னுரையும் அமையப் பெற்றது. சுகாதாரங்களுக்குக் கெடுதி விளைக்கும் புழு பூச்சிகளைப் பற்றிய ஞானம் நம்மவர்க்கு இல்லவே இல்லை. இந் நூலிலே கொசுவைப் பற்றியும், மலேரியா கிருமிகளைப் பற்றியும், மலேரியா வியாதியைத் தடுக்கக்கூடிய உபாயங்களைப் பற்றியும், வியாதியின் நிவிர்த்திக்குரிய முக்கிய மருந்துகளைக் குறித்தும் மிகவும் சுருக்கமாகக் கூறப் பட்டுள்ளது. நூலில் அடங்கியுள்ள விஷயங்களை விளக்கும் பொருட்டு ஆங்காங்கு சேர்க்கப் பட்டிருக்கும் 22 படங்களும் சாமானிய ஜனங்கள் இதை எளிதில் கற்றுக் கொள்ளுவதற்குப் பேருதவி செய்யும் என்பது நிச்சயம். சுகத்தை விரும்பும் சகலருக்கும் இது இன்றியமையாத நூலே. இதன் விலை அணா **6.** இதுவும் 7-வது ஸஞ்சிகையில் நாம் மதிப்புரை யெழுதிய பூரண சுகம் என்ற நூலும் வாங்க விரும்புவோர்,

The World Welfare Co., Washermanpet, P. O., Madras.

என்ற விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

ரமணன் :—இது சைதாப்பேட்டை ஸ்ரீமான் பி. எஸ். நீலகண்டன் அவர்கள் எழுதியது. திருப்பதி வேங்கடநாதன் தேர் வண்டிக்கால் சரித்திரம். ஒரு புராண கதை. அழகிய நடை விலை அணா 2. வேண்டுவோர் 'லக்ஷ்மி' ஆபீசுக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

சுதேசி காப்பி.

ஆவாரம் விதைப்பானம்:—இதை டீ தூள் உபயோகிப்பதுபோல் உபயோகித்தால், தேகச்சூடு, பித்தம், நெஞ்செரிவு, இருமல் முதலிவைகளை நீக்கி குளிர்ச்சியையும் புஷ்டியையும் தரும். இதை இக் கிராமத்தில் சகலரும் உபயோகிக்கிறார்கள். இதன் அனுபவத்தை நான் பரீக்ஷைசெய்தேன். காப்பிகொட்டை 1 சேர் அணா 6 விலை ஆகும். இதற்கு சேர் அணா 1 செலவாகும். இதையே சகோதர சகோதரிகள் உபயோகப்படுத்தும்படி வேண்டுகிறேன். வரவர நம் பாரதத்தாய் விழித்துக் கொண்டாள். எனக்கு எழுதினால் உபயோகிக்கும் விதத்தை தெரிவிக்கிறேன்.

தங்கள்

நரசை டாக்டர் **K. S. B.** மணியம்,

ம. அரசூர், குஞ்சிமேடு போஸ்ட்டு,

(வயா) சிதம்பரம்.

குளிர் காற்று.

சேலவு ஒரு மணிக் கூறுக்கு ஒரு பை மட்டுமே.

கி-கோ விசிறி.

மண்ணெண்ணெய் உதவியால் ஓடுவது.



புகையில்லை,
நாற்றமில்லை,
சப்தமில்லை.

வெம்மையான காற்றில்லை

12 ருத்தல் எடைதான்

கொசுவலை தேவை யில்லை.

லண்டனில் பிரிட்டிஷ் சாமான்களைக் கொண்டு தயார் செய்யப் பட்டது. ஒரு முறை மண்ணெண்ணெய் நிறைத்து விட்டால் 16 மணி நேரம் தொடர்ச்சியாய் ஓடும். மண்ணெண்ணெய் ஒரு மணிக்கு ஒரு பின்டு தான் செலவு.

B. N. ரெயில்வே அஸிஸ்டெண்டு இஞ்சினியர் எழுதுகிறார் :—

சென்ற ஏப்ரில் மாதத்தில் தங்களிடம் வாங்கின கீ-கோ விசிறி எனக்கு மிகவும் திருப்தியைத் தந்து இன்றியமையாததாய் ஏற்பட்டிருக்கிறது. சாதாரணமாய் விற்பனைக்குக் கிடைக்கக்கூடிய எல்லா எண்ணெய் விசிறிகளையும் விட இதுவே மேலானது.

விலை ரூ. **140**.

விலாசம் :—

Eastern Electric & Trading Co.

Electrical Engineers,

175, Hornby Road, Fort,

P. O. Box No. 459, BOMBAY.

பி. வி. ராஜன் "பட்டணம் பொடி"

எக்ஸிபிஷன்களில் ஸர்ட்டிபிகேட்டும் அநேக பிரசித்தி பெற்ற டாக்டர்களால் ஸர்டிபிகேட்டும் பெற்றவை.

உயர்ந்த புகையிலையினால் குணத்தில் உயர்ந்ததாயும் மணத்தில் இதர பொடியைவிட மேன்மையாயும் நீண்ட நாள் கெடாமலிருக்கும்படியும் தேர்ந்த வேலைக்காரர்களைக் கொண்டு தயார் செய்யப்பட்டு வெகு நாட்களாக மார்க்கட்டில் நல்ல பெயர் பெற்றுவருகிறது. வெளியூர்களுக்கு விலை சரசமாய் சப்ளை செய்து வருகிறோம். ஒரு தடவை எங்களிடம் தருவித்துப் பார்த்தால் அதன் உண்மை தெரிய வரும். வீசை 1-க்கு டின் உள்பட விலை ரூ. 3-10-0. தபால் செலவு அல்லது ரெயில் செலவு பிரத்தியேகம். ஒரு சேர், அரை சேர் டின்களாகவும் அனுப்பப்படும்.

R. S. சுகந்த மூக்குத்தூள்.—இது நூதனமாய் கண்டுபிடிக்கப்பட்டது. இதை உபயோகிப்பதனால் ஜலதோஷம், பீனிசம், ஒற்றைத் தலைநோய், மண்டைக்குத்தல், கண்ணி லேற்படும் எல்லா வியாதிகளையும், மூளையைச் சேர்ந்த சகல வியாதிகளையும் போக்கி குணப்படுத்தும். புட்டி 1-க்கு விலை ரூ0-4-0 } ஒரு சேர் டின்
டஜன் 1-க்கு ,, ரூ2-4-0 } 1-க்கு ரூ 1-12-0

தபாற் செலவு அல்லது ரெயில் சார்ஜு பிரத்தியேகம்.

பி. வி. ராஜன் அண்டு கம்பெனி,
44, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, மதராஸ்.

படிக்கப் படிக்க இனிக்கும்! நினைக்க நினைக்க மணக்கும்!!

சரீர மர்ம சாஸ்திரம்

பிரசித்தி பெற்ற இந்த அருமையான நூலில் ஸ்திரீ, புருஷர், இவ்வுலகில் அனுபவிக்கவேண்டிய சம்சார சுகம், குடும்ப ரஹஸியம், மணவாழ்க்கையின் மர்மங்கள் அனைத்தும் ததும்பிக் கிடக்கின்றன. விவாகமானவர்க்கும் இனி விவாகம் செய்து கொள்ளப் போகும் ஸ்திரீ, புருஷர்களுக்கும் வெகு அத்தியாவசியமானது. 50 படங்களுடன் புத்தகம் 1-க்கு விலை ரூ. 1, தபால் செலவு அணா 7.

மாணிக்க விலாசம் பிரஸ்,
அருணாசல முதலி வீதி,
சவுகார்பேட்டை, மதராஸ்.

சுகசாதனம்

வாழ்க்கை நலம் புகட்டும் நூல்

உங்களுக்கு அவசியம் தேவையானது உடனே எழுதுங்கள்.

வைத்திய அனுபதங்கள், வாழ்க்கை மர்மங்கள், ரகசியக் குறிப்புகள், விவாகமானோர் அறிய வேண்டிய விஷயங்கள், பெண்கள் சம்மந்தமான பலவகை விவரங்கள், இல்லற சார சங்கிகம் ஆகிய பலவும் அடங்கிய ரகஸ்ய ரத்னம் உங்களுக்கு அவசியம் தேவையான புஸ்தகம். விலை யில்லை, தபாற் செலவில்லை. விலாசம் தெரிவித்தால் மறு தபாலில் அனுப்பி வைக்கிறோம்.

அமிர்தம் அண்டு கோ., டிப்போ, 165, பிராட்வே,
தபாற் பெட்டி 222, மதராஸ்.

மறக்கவேண்டாம்.

சர்வதேள் விஷசஞ்சீவி

குணமில்லை என்று ரூபிக்கிறவர்களுக்கு ரூ. 100 இனும். நிகரற்ற நற்சாட்சி பத்திரங்கள் பெற்று இருக்கிறது.

எவ்வித தேள்கடி, விஷகடி, மற்ற எவ்வித விஷ கடிகளையும் நீக்கும்.

விலை டின் 1-க்கு அ. **8** தான்.

1 டஜன் வாங்கினால் ரூ. **5.**

தபால் செலவு இல்லை.

விலாசம்:—வி. எ. எஸ். பானி அண்டு கம்பேனி,
தபால் பெட்டி 17, மதராஸ்.

ஸ்ரீமத் வால்மீகி

இராமாயண வசனம்

பண்டித நடேச சாஸ்திரியாரால்
தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு
பிழையறப் பரிசோதித்துப் பிரசுரம் செய்யப்பட்டது.

ஸ்திரீகளும் சிறுவர்களுங்கூட எளிதில் தெரிந்துகொள்ளும்படியாகத் தெளிவான எளிய நடையில் வசனரூபமாய் இவ்வால்மீகி ராமாயணம் எழுதப்பட்டிருக்கிறது. மிக விலையுயர்ந்த கனமான ஆண்டிக் காகிதத்தில் அச்சிட்டு நேர்த்தியான காலிகோவில் அழகாய் பயிண்டு செய்திருக்கிறது.

	ரூ.	அ.	ப.
ஆறு காண்டம் ஒரே செட்டு பாலகாண்டம் முதல் யுத்தகாண்டம் வரை	**15**	**0**	**0**
சுந்தரகாண்டம் பாராயணத்துக்கு	**2**	**4**	**0**

இன்னும் இதர தமிழ்ப் புஸ்தகங்களும் கிடைக்கும்.

காந்தன் & ராஜன்,
புஸ்தக வியாபாரிகள்,
மைலாப்பூர், சென்னை.

அச்சுவேலைகள்

வெகு அழகாகவும் சுத்தமாகவும் செய்யப்படும்.

கார்டு, லெட்டர் பேப்பர், நோட்டீஸ், புத்தகங்கள், பத்திரிகைகள், கணக்குப் புஸ்தகம், பேரேடு குறிப்பு இன்னும் எவ்விதமான அச்சு வேலைகளும் கெடுப் பிரகாரம் சப்ளை செய்யப்படும்.

அச்சிட வேண்டிய விவரங்களுக்கு எழுதவும்.

மானேஜர்,
வெஸ்ட் அண்டு கோ,
மவுண்ட் ரோட்,
சென்னை.

"லோத்ரா"—ஸ்திரீகளுக்கு.

ருது சூலை, அகால பஹிஷ்டை முதலிய கர்ப கோச சம்பந்தமான சகல வியாதிகளையும் கண்டித்து புத்திர பாக்கியத்தை அடையச்செய்யக் கூடிய கைகண்ட அவுஷதம் கேஸரியின்

லோத்ரா ஒன்றே!

விலை 12 அவுன்ஸ் ரூ. 3. 6 அவுன்ஸ் ரூ. 1-10-0.

இந்த அவுஷதம் எங்கும் கிடைக்கும்.

கேஸரி குடீரம்,

ஆயுர்வேத அவுஷதசாலை, எழும்பூர், மதராஸ்.

கம்பளிப் போர்வைகள்.

அசல் கம்பளி, மிருதுவானது. நீடித்து உழைக்கக் கூடியது. குளிருக்கு அடக்கமானது. சிவப்பு, பச்சை, மஞ்சள், ஊதா முதலிய பல கலர்களில் கிடைக்கும். 6 முழம் நீளம் 3 முழம் அகலமுள்ளது.

1	நெ.	விலை ரூ.	11	முதல்	15	வரை.
2	,,	,,	10	,,	11	,,
3	,,	,,	$8\frac{1}{2}$	,,	10	,,

கம்பளி சட்டை:

முறுக்கு கம்பளி நூலால் செய்யப்பட்டது. குளிருக்கு அடக்கமானது. இதை அணிந்து கொண்டால் சீதளம் அண்டாது. தோட்டங்களில் இருப்பவர்களுக்கு அவசியமானது. கிரே கலர்

விலை ரூபா 4-8.

உசத்தி வெள்ளை ரூ. 12 முதல் 18 வரை.

TRAVELLING RUGS.

நயமான கம்பளி, நல்ல குளிரில் போற்திக் கொள்ள உதவும். கலர் கிரே. கருப்பு, சிவப்பு.

5 மு. நீளம் 3 மு. அகல. ரூ. $4\frac{1}{2}$, 5.

கம்பளி ஆஸனம்.

ஜெபம் செய்யும்போது ஆசாரமாய்ப் போட்டு உட்காரக் கூடியது.

விலை அணா 12, ரூ. 1, $1\frac{1}{2}$, உசத்தி ரூ. $3\frac{1}{2}$ முதல் 5 வரை.

LADY'S SHAWL.

பெண் பிள்ளைகளுக்காக ஸ்பெஷலாய் தயாரித்தது. 5 முழம் நீளம் $2\frac{1}{2}$ அகலமுள்ளது. அழகான கலர்களிலும் கிடைக்கும்.

போர்வை 1-க்கு விலை ரூபா 8.

மடி தாவளி.

இது அசல் கம்பளியால் நெய்யப்பட்டது. வைதீக பிராமணர்கள் ஸ்நானம் செய்ததும் மடியாகத் தரித்துக் கொள்ள உபயோகமுள்ளது.

5	முழம்	24	இஞ்சு அக.	ரூ.	2		10	முழம்	40	இஞ்சு அக.	ரூ.	7
6	,,	24	,,	,,	$2\frac{1}{2}$		16	,,	40	,,	,,	12
7	,,	29	,,	,,	3		18	,,	40	,,	,,	14
8	,,	40	,,	,,	$5\frac{1}{2}$							

கே. எஸ். முத்தையா & கோ.,

சில்க் ஹவுஸ்,

காசி.

ஜீ. பாம்பே குஷ்டாம்ருதம்.

மூந்துங்கள் ! மூந்துங்கள் ! ! மூந்துங்கள் ! ! !

சொற்ப மருந்தே கையிருப்பு.

இந்த குஷ்டாம்ருத சஞ்சீவியை வியாதியின் வன்மைக் கேற்றவாறு ஒரு மண்டலம் அரை மண்டலம் அல்லது 16 நாள் உட்கொண்டு வந்தால் 18 வித குஷ்டரோகங்களும் 21 விதமான மேக ரோகங்களும் மேக சம்மந்தத்தால் வரும் பவித்திரம், கிரந்திகள் ஆருத பெருத்த விரணம் சுழிப்புண்கள் இரத்தக்கெடுதியால் வரும் சர்மவியாதிகளும் லிங்கப்புற்று கண்டமாலே முதலிய கொடிய ரோகங்களும் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கி திரேகத்தை வயிரம் போல் செய்யுமென்பதற்கு இதற்கு குறிப்பிட்டு இருக்கும் விலேயே அதில் விசேஷ குண முடைய சஞ்சீவிகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன என்பதற்கு போதுமான அத்தாக்ஷி. இது ஒப்புயர்வில்லாத சஞ்சீவி. இதை கண்ணுற்றும் விட்டு விடுவது வினைப் பயனாகும், அவுஷதம் உட்கொள்ளும் விபரமும் அனுமானமும் மருந்துடன் அனுப்பபடும்.

16 நாள் மருந்து புட்டி 1க்கு ரூ. **11-4-0.**

தபால் செலவு பிரத்தியேகம்.

ஆயுர் வேத பண்டிட், **ஜீ. பாம்பே அண்டு கோ.,**

சாமிநாய்க்கன் வீதி, சிந்தாதிரிபேட்டை, சென்னை.

ஓர் உயர்தர தமிழ் ஸஞ்சிகை.

"கிராம வாழ்க்கை"

மாதம் இருமுறை வெளியாகிறது. வருட சந்தா ரூ. 4.

சென்னை ராஜதானி கிராமவாசிகள் உத்தியோகஸ்தர்களின் உரிமைகளைக் காப்பாற்றவும், கிராமங்களின் முன்னேற்றத்தையும் கருதி இப்பத்திரிகை பிரசுரமாகிறது.

கௌரவ பத்திராதிபர் :—

ஸ்ரீமான் டி. ஆதிநாராயண செட்டியார்,

M.L.C. *Bar-at-Law.*

சென்னை இராஜதானி முழுவது முள்ள கிராமங்களில் இப்பத்திரிகை விசேஷமாகப் படிக்கப்பட்டு வருவதினால் வியாபாரிகளின் விளம்பரங்களுக்கு இதுவே நிகரற்ற கருவியாகும்.

மாதிரிப் பிரதி இனம்.

மானேஜர்—"கிராமவாழ்க்கை"

331, மிண்ட் தெருவு, மதராஸ்.

அகஸ்தியர்
பரிமள கேசரி தைலம்.

இத் தைலத்தை உபயோகித்து வருவதால் தலையில் எரிச்சல், தலை மயிர்கள் உதிர்கிறது, தலை மயிர்களின் பிளப்பு, தலை மயிர்கள் சிகப்பு நிறமாகிறது, நாசியில் ரத்தம் வடிதல், தலையில் சுண்டுகள் ஏற்படுதல், தலையில் ஏற்படும் விஷத்தினால் சிரங்குகள் உண்டாகுதல், கண்கள் சிகப்பாகுதல், கண்களில் ஜலம் வடிதல் இன்னும் தலையில் ஏற்படும் சகல வித மான வியாதிகளையும் நீக்கிச் சுகம் தரும். விலை புட்டி 1-க்கு ரூபா 1. V. P. அல்லது C. O. D. இல்லாத ஊர்களுக்கு முன் பணம் அனுப்பவேண்டும்.

துரைசாமி அண்டு கம்பெனி,
58, பெரியண்ண முதலி தெரு,
மிண்டு போஸ்டு, மதறாஸ்

பாரிஸ் லேடிகளின் படுக்கை அறையின்
அழகிய லீலா விநோத போட்டோ படங்கள்.

இது பார்ப்பவர்களுடைய மனதை பிரமிக்கச்செய்து இருதரத்தாருக்கும் ஆனந்தத்தைக் கொடுக்கும்; இதில் ஆண் பெண்களின் விநோதமான போட்டோ படங்கள் பலவித நிறங்களோடு வெகு அழகாயிருக்கின்றன. இந்த "போட்டோக்களை படுக்கை அறை (Bed Room) யில் வைத்தால் வெகு சுந்தரமாயிருக்கும். ஒவ்வொரு போட்டோக்களின் ரகஸ்யத்தை இதில் எழுத முடியாதென்று சுருக்கிவிட்டோம்.

நெ. 1. 12 ரகம் செட்டு 1-க்கு ரூ. 3. நெ. 2. அஸியிம் போட்டோ படங்கள் 12 ரகம் செட்டு 1-க்கு ரூபாய் 2-8-0.

எமது விலாசம் :—

லில்லி அண்டு கோ.,
நெ. 4. கிருஷ்ணப்ப நாயக்கன் கொளத்துத் தெரு,
சென்னை.

ஜேர்மன் சில்வர் டம்ளர்



மூடியுள்ளது. மூடியைத் தனியாய் கழற்றக் கூடியது. உயரம் 7 இஞ்சு. விலை 1-க்கு ரூ. 2.

ஜேர்மன் சில்வர் பொம்மைகள்



யானை, குதிரை, மான், சிங்கம் முதலிய மிருகங்கள்.

2½, 3 இஞ்சி உயரம்.

விலை 1-க்கு ரூ. 1-4-0.

ஒரு செட் 6 பொம்மைகளுக்கு ஆர்டர் செய்கிறவர்களுக்கு

விலை ரூ. 6-8-0.

அன்னபூர்ண சில்க் ஸ்டோர்ஸ்,

தசாசுவமேத ரோட், காசி.

ஞான திருஷ்டி

இவ்வருமையான புத்தகத்தைப் படிப்பதால் இறந்தவர்களுடன் சம்பாஷணை புரியலாம், காணுமல் போனதைக் கண்டெடுக்கலாம், இருக்குமிடமிருந்தே தூரதேசங்களைப் பார்க்கலாம், மனிதர்களின் திரிகால வர்த்தமானங்களை அறியலாம். புத்தகத்தில் கண்டிருக்கும் “ஞான திருஷ்டிக் கண்ணுடி” யென்னும் உபாயக் கருவியுடன் இன்புத்தகத்தின் விலை ரூ. 1—8—0 தபால் கூலி பிரத்தியேகம்

மெஸ்மெரிஸ் கல்விச்சாலை,

சௌகார்பேட்டை, மதருஸ்

ஆணு? பெண்ணு?

இஃது ஜெர்மனியில் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு புதிய சிறுகருவி. இவற்ருல் சிசுக்கள் வயிற்றில் கர்ப்பத்திலிருக்கும் பொழுதே இவை ஆணு அல்லது பெண்ணு வென்று எளிதில் தெரிந்து கொள்ளலாம். உபயோகிக்கும் விதம் கருவியுடன் அனுப்பப்படும். கருவி 1-க்கு விலை ரூபா 3, தபால்கூலி வேறு.

ஆலிவர் அண்டு கம்பனி,

22-வது பீட், சௌகார்பேட்டை, மதராஸ்.

ரோம சங்காரி.

இதை உபயோகித்த 5 நிமிஷங்களுக்கெல்லாம் சரீரத்தின் எந்த பாகத்திலுள்ள மயிரானாலும் சரி உடனே நீங்கிவிடும். யாதொருவிததொந்தரவும் உண்டாகாது.

விலை பாக்கெட் 1-க்கு ரூபா 1.

RING WORM

சர்வபடை சங்காரி.

இது எவ்வளவு நாள் பட்டதாகிலுமுள்ள படை, சொறி, சிரங்கு இவைகளை 24 மணி நேரத்தில் குணப்படுத்தும். உத்திரவாதம்.

விலை புட்டி 1-க்கு அணா 10.

தபால் சிலவு வேறு.

துருவா அண்டு கோ.,

மதராஸ்.

ரப்பர் ஸ்டாம்பு செட்டுடன் ரூபா 2.



பித்தளை அரக்கு சீல் ரூபா 1.

ரப்பர் முத்திரை அரக்கு சீல், பிளாக்குகள்

செய்ய தகுதியான இடம்

டி. ஜி. சுந்தரம் அண்டு கோ.,

232, கோவிந்தப்ப நாய்க்கன் வீதி, மதராஸ்.

கேட்லாக்கு எழுதி கேழ்க்கவும்.

புத்திர சந்தான எண்ணெய்

ஸ்திரீகளின் கர்ப்பஸ்தானத்தில் புழுக்கள் உண்டாகி அவ்வப்போது வித்தைப் புசித்து வருவதினாலும் மற்றும் பல காரணத்தினாலும் கர்ப்பஸ்தானத்தில் சதை வளர்ந்து சொரிபற்றி இரத்தங் கட்டியிருந்தாலும் மூலச் சுழியில் வாய்வு பித்தம் தங்கினாலும் கருத்தரிக்காது. இந்த எண்ணெயைக் காலை மாலை இருவேளையும் 1-அல்லது 2-காசு அளவு உள்ளங்கையில் விட்டு நக்கிச் சாப்பிடவேண்டியது. இப்படி 15-நாள் சாப்பிட்டால் கர்ப்பஸ்தானத்திலிருக்கும் ஆறுவித குற்றங்களையும் நீக்கி சுத்தப்படுத்தி மறுமாதத்திலேயே கர்ப்பந்தரிக்கும். சிலருக்கு கருதரித்து 2-3-4 மாதங்கள் வரையில் சூலாயிருந்து திடீரென்று உடைந்து போவதுமுண்டு. இப்பேர்க்கொத்த கெர்ப்ப தோஷமெல்லாம் இந்த எண்ணெயால் நிவர்த்தியாகி தீர்க்காயுளான கருத்தரிக்கும். புட்டி 1-க்கு ரூ.2.

விலாசம் :— கேட்லாக் இனாம்.

என். வி. கோபால் அண்டு கோ.,
27, வெங்கடேசமேஸ்திரி தெரு,
கிருஷ்ணாங்குளம், மதராஸ்.

பொய்யா? - - மெய்யா?

என்பதை ஒருமுறை கவனியுங்கள்.

தாங்கள் ஒருமுறை உபயோகித்துப் பார்த்தால் ஒப்புயர்வில்லாத மேலான ஒன்றும் சிறந்த குணம், மணம் நிறைந்ததென்றும் தந்த நோய்களை நீக்குவதில் சஞ்சீவிக்கொப்பானதென்றும் நாவரட்சி முதலான எவ்வித கெட்ட குணமுமில்லாததென்றும் மனோரம்மியத்துடன் புகழக்கூடியதாகவும் வெற்றிலை பாக்குடன் உபயோகிக்கத் தக்கதாகவுமுள்ள பாலக்காடு வாசனைப் புகையிலை யென்று ஓர் அருமையான வாசனைப் புகையிலை யென்று ஓர் அருமையான வாசனைப் புகையிலை கீழேகண்ட விலாசதாராகிய நம்மிடம் விற்கப்படுகிறது. ஷை புகையிலையை சென்னை ராஜதானி, பாம்பை, கல்கத்தா, ரங்கூன் முதலிய பலான இடங்களுக்கும் வி. பி. (V. P.) மூலம் ஏராளமாக அனுப்பப்படுகிறது. ஒருமுறை உபயோகித்துப் பார்ப்பீர்களானால் மெய்யென்று நம்புவீர்கள் என்பது உறுதி.

¼ (கால்) பவுண்டு அடங்கியடின் 1-க்கு விலை அணா 7, வி. பி. (V. P.) செலவு பிரத்தியேகம். வியாபாரிகளுக்கு தக்க கமிஷன் கொடுக்கலாம்.

யஸ். ஆர். பிள்ளை, புரோப்ரைட்டர்,
கலியாணி பிரஸ், திருநெல்வேலி ஜங்ஷன்.

சமசார சுகத்
திற்கு திவ்ய
ஔஷதம்.

பீஜ்பந்த்

இரண்டு
மணி நேரத்
தில் அபூர்வ
குணம்.

இந்த மருந்து இராத்திரி வேளையில் ஒரு மாத்திரை சாப்பிட்டால் வீரியம் எவ்வளவு நீற்றுப் போயிருந்தாலும் அதை இரண்டு மணி நேரத்திற்குள் தவறுமல் கட்டுப்படுத்தி அதிகமான ரதிசக்தியைக் கொடுக்கும். **3** நாள் **2** வேளையும் சாப்பிட்டால், ஸ்வப்பன ஸ்கலிதம், சீக்கிர ஸ்கலிதம் முதலியதை நீக்கும். பதினைந்து நாள் **2** வேளையும் சாப்பிட்டால் துரப்பியாசங்களினுல் உண்டாகும் நபும்சகத்வம் போக்கி, அதிகமான யௌவன சக்தியையும், நரம்புகளுக்கு பலத்தையும், சம்சார சுகத்தையும் கொடுக்கும் என்பதில் சந்தேகமில்லை. இதன் குணத்தை இன்னும் வெளிப்படையாய் எழுதுவதற்கு சென்னை கவர்ன்மெண்டார் அனுமதிக்க வில்லையாகையால், இத்துடன் சுருக்கிவிட்டோம். ஒருமுறை தருவித்து உபயோகித்த பிறகுதான் இதன் குணம் விளங்கும். மருந்து உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும். கடிதங்களை ரகஸ்யமாய் வைக்கப்படும். **20** மாத்திரைகள் ஸீசா **1**-க்கு ரூ. **2**. வி. பி. சார்ஜ் வேறு, சிங்கப்பூர், பினுங்கு முதலிய வெளி நாடுகளுக்கு முன்பணம் அனுப்பவேண்டும்.

ஆரிய வைத்திய ஆஸ்ரமம்,

நே. 38, பைராகிமடம் கோவில் வீதி, ஜீ. டி. மதுராஸ்.



"Collapsible" Key Ring.

A Key Ring that does not buldge the pocket.

PRICE 0-3-0 each.

Rs. 2-0-0 per doz.

K. S. MUTHIAH & Co., Tinnevelly.

அமிர்தாஞ்சன்

நோய்களைப் போக்கவல்ல சிறந்த சாதனம்

1924 காலண்டர் 1924

மூன்று நிறங்கள் கொண்ட ஆப்டோன்

மகாத்மா

காந்தி படம்

தபாற் செலவு உள்பட தனிப்பிரதி அணா 6.

மொத்த வர்த்தகர்களுக்கு 25 பிரதி ரூ. 4 8 0

,, 100 ,, ,, 15 0 0

அமிர்தாஞ்சன் டிபோ,

: : சென்னை : :

ரெடிமேட் டுயில் ஷர்ட்டுகள்.

முதல் நெம்பர் டுயிலில் கைதேர்ந்த தையற்காரர்களால் தைக்கப்பட்டது. ஆர்டர் செய்யும்பொழுது கழுத்தளவு எழுத மறந்துவிடாதீர்கள்.

ஷர்ட்டு 1-க்கு ரு. 2, 2-4, 2-8, 2-12.
காக்கி ஷர்ட் ரு. 2-8, 2-12, 3, 3-8.

பார்சி சேலை (நூல்.)

நைஸான நூல், பட்டைப் போலிருக்கும். ஸிலேட், ஆரஞ்சு பிங் முதலிய பல கலர்கள்.

7 கெஜம் 44" ரு. 6, 6-8. 8 கெஜம் 44" ரு. 6-8, 7, 7-8.
9 கெஜம் 44" ... ... ரு. 7, 8.

வெள்ளைச் சேலை.

இது தற்காலத்துக் கேற்றது: பார்வைக்கு மிக அழகாயிருக்கும். சிகப்பு, கருப்புக்கரை, உடல் சாதா, வெள்ளை டோரியா.

7 கெஜம் 1-க்கு ரு. 5-12, 6, 6-12. 8 கெஜம் 1-க்கு ரு. 6, 7-8.

கோகர் ஜான் புடவை.

பலவித இங்கிலீஷ் கலர்கள். 7, 8 கெஜம் புடவை
1-க்கு ரு. 6-8, 7, 8, 10.

கே. எஸ். முத்தையா & கோ.,

சில்க் அவுஸ்,

தபாற் பெட்டி 99, - - மதராஸ்

நம்பிக்கையுள்ள வர்த்தகஸ்தலம்.

கம்பெனி

ஸ்தாபித்த வருஷம் 1900.

கராச்சி பட்டுப் புடவைகள்.

தற்கால நாகரீகத்திற்கேற்றது. அழகான சரிகைக்கரைகள். சகல விதமான கலர்களிலும் கிடைக்கும்.

நெ. 1, 18 மு புடவை 1க்கு ரூ. **55.**

நெ. 2, ,, ,, ரூ. **45.**

கராச்சி ரவிக்கை 1க்கு ரூ. 3-8.

பெரிய சேட்லாக் இனம்.

கே. எஸ். முத்தையா கோ.,

சில்க் அவுஸ், காசி.

ப்ராஞ்சுகள் : சென்னை, திருநெல்வேலி.

Printed by M.A. Nellayappar at Vest & Co., Madras and Published by K. S. Sundaram.